
ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திவ்யப்பிரபந்த திவ்யார்த்த தீபிகையுரையாசிரியரான

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமிகளால்

இயற்றப்பட்ட

பதவுரையோடும் விசேஷ வுரையோடும் கூடின

இராமானுச நூற்றந்தாதி

வியாக்கியானம்

இராமாநுச நூற்றந்தாதி

ஸ்ரீ:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

இராமாநுச நூற்றந்தாதி.

~~*~*~*~*~*~*~*~**~*~*~*~*~*~*~*~*~*

நூறு வெண்பாவினாலேனும், நூறு கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித்தொடையாற் கூறுவது நூற்றந்தாதியாகும். இத்திவ்யப்பிரபந்தம் நூறு பாசுரங்களுக்குமேல் அதிகமாக எட்டுப் பாசுரங்கள் கொண்டதாயினும் நூற்றந்தாதி யென்னத் தட்டில்லை; நூறு ஆயிரம் முதலிய பெரிய எண்களுக்குப் பத்தெட்டு குறையினும் மேற்படினும் அவை நூறு ஆயிரம் என்னத் தகுந்தவையேயாம்.

இப்பிரபந்தத்தில் நூற்றெட்டுப் பாசுரங்கள் அமைத்ததற்கும், பாட்டுதோறும் இராமானுசத் திருநாமம் தட்டாமல் அநுஸந்திக்கப்பட்டிருப்பதற்கும் பெரியோர் ஒரு காரணங் கூறுவர்; எம்பெருமானார் திருவடிகளில் மிக்க அன்புபூண்டவர்கட்கு இப்பிரபந்தம் ஸாவித்ரிபோலே நித்யாநுஸந்தேயமாக வேணுமென்று பாட்டுத்தோறும், திருநாமத்தை வைத்து நூற்றெட்டுப் பாட்டாக அருளிச்செய்தார் என்று; ***ப்ரபந்த ஸாவித்ரீ*** என்றும் ***ப்ரபந்த காயத்ரீ*** என்றும் இதனை நம்மவர் கூறிப் போருவார்கள்.

இப்பிரபந்தம் எம்பெருமானார் காலத்திலே அவதரித்ததாயினும், பெரியபெருமாள் அமுதனார்க்கு அருளப்பாடிட்டு எம்பெருமானாரால் திருச்செவி சாத்தப்பட்ட தாதலால் இது ஆழ்வார்களருளிச் செயல்களோடு சேர்த்து அநுஸந்திக்கலாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின் ஆழ்வார் திவ்ய ப்ரபந்தங்கட்கு ஏற்பட்டுள்ள அநத்யயநம் இதற்கும் ஒக்கும்.

முதலாமாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற நான்கு ஆயிரங்களுள் நான்காவதான இயற்பாவில் சரமப் பிரபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த நூற்றந்தாதி, ப்ரணவார்த்தமான முதலாயிரத்தோடு நம்மாழ்வார் விஷயமான பாகவதசேஷத்வத்தை ப்ரதிபாதிக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பைச் சேர்த்தாற்போல, கைங்கரியத்தில் களையறுப்பதான இயற்பாவுடனே இதனைச் சேர்த்து அநுஸந்திக்கை பொருத்தமுடையதேயாம்.

~~*~*~*~*~*~*~*~*

திருவரங்கத்தமுதனார் வரலாறு

இவ்வமுதனார், ஒரு பங்குனித்திங்களில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் மூங்கிற்குடியில் திருவவதரித்து, திருவரங்கம் பெரியகோயிலில் இருந்ததுவே காரணமாகப் ***பெரியகோயில் நம்பி*** என்று ப்ரஸித்தராய் வாழ்ந்துவந்தார்.

[அஷ்டப்பிரபந்தம் செய்தருளினவரும் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்து ஊய்ந்தவருமான "பிள்ளைப்பெருமாளையங்கார்" என்பவர்க்கு இவர் திருத்தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் சொல்லுவர்.]

இவர் ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹா நிபுணராய், தமக்குக் குலக்ரமமாகக் கிடைத்த ஸந்நிதி புரோஹித வ்ருத்தியையும் புராணபடந கைங்கர்யத்தையும் பெற்று மிகவும் ராஜஸராய்ச் செருக்குடன் வாழ்ந்துவரும் நாளிலே, உலகங்களை வாழ்விக்கத் திருவனந்தாழ்வானது திருவவதாரமாய்த் திருவவதரித்த எம்பெருமானார் தமது இயற்கையின்னருளாலே இவரைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளப்பற்றிக் கூரத்தாழ்வானுக்கு நியமிக்க, ஆழ்வானும் இவரை அநுவர்த்தித்து ஞானச்சுடர் கொளுத்தி எம்பெருமானார் திருவடிக்கீழ்க் கொணர்ந்து சேர்க்க, எம்பெருமானாரும் அவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி ஆழ்வான் பக்கல் ஆச்ரயிக்கும்படி நியமிக்க, அப்படியே அவரும்

ஆழ்வானை ஆச்ரயித்துத் தத்வஹித புருஷார்த்தங்களை ஐயந்திரிபறத் தெளிந்து ஆத்மஆத்மீயங்களை அந்த ஆசார்யன் திருவடிகளிலே ஸமர்ப்பித்துப் பரமப்ரவணராயிருந்தார். இப்படியிருக்கையில் ஸ்வாசார்யருடைய உகப்புக்கு உறுப்பாகத் தமக்கு ப்ராசார்யரான எம்பெருமானார் விஷயமாக ஒன்றிரண்டு பிரபந்தங்களைச் செய்து அவற்றை எம்பெருமானார் ஸந்நிதியிற் கொணர்ந்துவைக்க, எம்பெருமானாரும் அவற்றை அவிழ்த்துக் கடாக்ஷிக்க, அவை தமது திருவுள்ளத்துக்கு இசைந்திராமையாலே அவற்றைக் கிழித்தெறிந்துவிட்டு அவரை நோக்கி, "நம்மைப் பற்றிப் பிரபந்தம் பாடவிருப்பம் உமக்கிருக்குமாகில், ஆழ்வார்களிடத்தும் உகந்தருளின நிலங்களிடத்தும் நமது ப்ராவண்யம் தோற்றுமாறு ஒரு பிரபந்தம் செய்யும்" என்று நியமித்தருள, இவரும் அப்படியே செய்கிறேனென்று அந்த நியமகத்தை சிரஸாவஹித்து எம்பெருமானார்க்கு ஆழ்வார்களிடத்திலும் திவ்ய தேசங்களிடத்திலுமுள்ள அன்பை நன்கு விளங்கவைத்து இந்தப் பிரபந்தத்தை அருளிச்செய்து எம்பெருமானார் ஸந்நிதியிலேவந்து வணங்கி "இதைக் கேட்டருளவேணும்" என்று பிரார்த்தித்து அநுமதி பெற்றுக் கூரத்தாழ்வான் முதலானோர் பேரோலக்கமாக இருக்கிற அங்குத்தானே இந்தப் பிரபந்தத்தை விண்ணப்பம் செய்ய, எம்பெருமானார் மற்றை முதலிகளோடும் திருச்செவி சார்த்தித் தலைதுலுக்கிப் போரவுகந்தருளி, தம்திருவடிகளில் ஸம்பந்தமுடையோர்க்கெல்லாம் அந்த பிரபந்தத்தை அன்று தொடங்கி என்றும் நித்யாநுஸந்தேயமாம்படி கற்பித்தருளியதுந் தவிர, அவரது வாக்கு அமுதவாக்காயிருந்தமையால் அவர்க்கு ***அமுதன்*** என்ற திருநாமத்தையும் பிரஸாதித்தருளி மிகவும் கடாக்ஷித்தருளினார். அகையால் அதுமுதல் "பெரியகோயில் நம்பி" என்ற திருநாமம் மாறித் திருவரங்கத்தமுதனார் என்ற திருநாமம் வழங்கத் தொடங்கிற்று. இப்பிரபந்தத்திற்கு ***ப்ரபந்த காயத்ரி*** என்ற திருநாமமும் அன்றே தொடங்கி நிகழலாயிற்று.

இந்த விருத்தாந்தம் சிறிது மாறுபாடாகவும் சொல்லப்படுவதுண்டு; எங்கனே யெனின்;- அமுதனார் எம்பெருமானாருடைய நியமனம் பெற்று இப்பிரபந்தம் இட்டருள்வதாக அடையவளைந்தான் திருமதிலுக்கு இவ்வருகேயிருந்த ஒரு தென்னஞ்சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலைக் கொண்டிருக்கும் போது, அவ்வளவில் எம்பெருமானார் அழகியமணவாளனது நியமனத்தினால் ஆழ்வான், ஆண்டான், எம்பார் முதலிய அந்தரங்கசிஷ்யர்களோடு அவ்விடத்தேயெழுந்தருள அப்போது "செழுந்திரைப்பாற்கடல்" என்ற நூற்றைந்தாம்பாசுரம் தலைக்கட்டி, "இருப்பிடம் வைகுந்தம்" என்ற பாசுரம் எழுதவேண்டிய தருணமாயிருந்ததென்றும், அது முதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே தொடுக்கப்பட்டன வென்றும், பிறகு அரங்கேற்றியானபின் "இந்த விசேஷத்துக்கு ஸ்மாரகமாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப் பாசுரங்கள் மூன்றாயிருக்கவேணும்" என்று ஆழ்வான் நியமித்தருளினாரென்றும், ஆனதுபற்றியே மற்றைப் பிரபந்தங்கட்கு இரண்டு பாசுரம் சாற்றாயிருப்பதுபோலல்லாமல் இதற்கு மூன்று பாசுரம் சாற்றாக ஸம்ப்ரதாயம் நிகழ்கின்றதென்றும்.

~~*~*~*~*~*~*~*~*

ஸ்ரீ:

இராமாநுச நூற்றந்தாதியின் தனியன்கள்.

வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்தவை.

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் – என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன் யான்.

முன்னை வினை	முன்னே செய்த பாபங்களெல்லாம்
அகல	ஒழிவதற்காக
மூங்கில் குடி அமுதன்	“மூங்கிற்குடி” என்னுங் குலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய
பொன் அம் கழல்	பொன்போல் அழகிய பாதாரவிந்தங்களிரண்டையும்
கமலப்போது இரண்டும்	
என்னுடைய சென்னிக்கு	எனது தலைக்கு
அணி ஆக	ஆபரணமாக
சேர்த்தினேன்	பொருந்தவைத்துக் கொண்டேன்
யான்	இப்படி அமுதனாருடைய திருவடிகளைச் சூடப் பெற்ற அடியேன்
தென் புலத்தார்க்கு	தெற்கு திக்கிலுள்ளாரான யமகிங்கரர்கட்கு
என்னுக்கு	எதுக்காக
கடவு உடையேன்	ப்ராப்தி யுடையேன்?

* * * மூங்கிற்குடியென்ற மஹாகுலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய திருவடித் தாமரைகளை நான் சிரோபூஷணமாக அணிந்துகொண்டேன்; அதனால் எனது ஸகல கருமங்களும் தீயினில் தூசாயொழிந்தன. இனி யமனுக்காவது யமபடர்களுக்காவது என்னருகே வருவதற்கு யாதொரு ப்ரஸக்தியுமில்லை என்றாயிற்று.

“முன்னை வினையகலச் சேர்த்தினேன்” என இயையும். [மூங்கிற்குடி] வேயர்குலம், ஆஸூரிகுலம், கூரகுலம் என்பன போல மூங்கிற்குடி யென்று ஒரு குலமுண்டாம். கமலப் போது = தாமரைப்பூ, அணி = ஆபரணம். சேர்த்தினேன் = சேர்த்தேன் என்றபடி, இன்--சாரியை.

என்னுக்கு+கடவுடையேன் = என்னுக்கடவுடையேன்; (கடைக்குறை) கெடுதல் விகாரப் புணர்ச்சி. என்னுக்கு = எதுக்காக என்கை; “என்னுக்கவனை விட்டிங்கு வந்தாய்” என்றார் குலசேகரப் பெருமாளும். [கடவுடையேன்.] கடவு = ப்ராப்தி; அதாவது – உரிமை.

~~*~*~*~*~*~*~*~*

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்
சயந்தருகீர்த்தியிராமானுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதி யோதவிசைநெஞ்சமே.

நெஞ்சமே	மனமே
நயம் தரு	விஷயங்களால் தரப்படுகிற
பேர் இன்பம் எல்லாம்	சிற்றின்பங்கள் யாவும்
பழுது என்று	வ்யர்த்தங்களென்று (அவற்றை விட்டொழித்து)
நண்ணினர் பால்	தம்மை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில்
சயம் தரு கீர்த்தி	ஸம்ஸார ஜயத்தைப் பண்ணிக் கொடுக்கும் புகழுடையரான
இராமானுச முனி	எம்பெருமானாருடைய
தாள் இணை மேல்	இரண்டு திருவடிகள் விஷயமாக
உயர்ந்த குணத்து	சிறந்த குணசாலியான திருவரங்கத் தமுதனார்
திருவரங்கத்து அமுது	
ஓங்கும் அன்பால்	கொழுந்து விட்டோங்கிய பக்தியினாலே
இயம்பும்	அருளிச்செய்த
கலித்துறை அந்தாதி	கட்டளைக் கலித்துறையினால் அமைந்த நூற்றந்தாதியை
ஓத	அத்யயநம் செய்ய
இசை	ஸம்மதித்திருக்கக் கடவை

* * * விஷயாந்தரங்களின் அனுபவத்தினாலுண்டாகும் சிற்றின்பங்கள் யாவும் அற்பங்களென்றும் ஹேயங்களென்றும் கருதி அருவருத்து அவற்றில் நசையற்றுத் தம்மைவந்து அடி பணிகின்ற மஹாநுபாவர்களுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுத்தருளி மோக்ஷத்தைத் தந்தருள்பவராய் இப்பெரும்புகழ் பரவப் பெற்றவரான எம்பெருமானார் விஷயமாக, பகவத் பாகவத பக்தி முதலிய மஹாகுணங்கள் நிறைந்த திருவரங்கத்தமுதனார் பரம பக்தி தலையெடுத்துச் சொன்ன நூற்றந்தாதி யென்னும் திவ்ய பிரபந்தத்தை ஓதுவதற்கு நெஞ்சே! நீ இசைந்திடாய் என்றார்.

நயம் = விஷயாந்தரங்கள். “நாணாமை நள்ளேன் நயம்” (முதல் திருவந்தாதி) என்ற விடத்து, நயம் என்பதற்கு விஷயாந்தரங்களென்று பொருள் அருளிச்செய்யப்பட்டிருத்தல் காண்க. பேரின்பம் – சிற்றின்ப மென்னவேண்டுமிடத்து பேரின்பமென்றது விபரீதலக்ஷணை.

~~*~*~*~*~*~*~*~*

சொல்லின் தொகைகொண்டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்துமுன்நாமமெல்லா மென்றன்நாவினுள்ளே
அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமயம்
வெல்லும்பரமவிராமாநுச விதென்விண்ணப்பமே.

அறு சமயம்	அப்ராமாணிகங்களான அறுமதங்களையும்
வெல்லும்	கண்டித்தருளின
பரம	ஆரியரான
இராமானுச	எம்பெருமானாரே!
உனது அடி போதுக்கு	தேவரீருடைய பாதாரவிந்தங்களிலே
தொண்டு செய்யும்	வாசிக கைங்கர்யம் பண்ணுகிற
நல் அன்பர்	பரம பக்தர்கள்

சொல்லின் தொகை கொண்டு	சப்த ராசிகளைக் கொண்டு
ஏத்தும்	துதிக்கிற
உன் நாமம் எல்லாம்	தேவரீருடைய திருநாமங்களெல்லாம்
என்தன் நாவிலுள்ளே	எனது நாவிலே
அல்லும் பகலும்	அஹோராத்ரமும்
அமரும்படி	பொருந்தியிருக்கும் படி
நல்கு	க்ருபைசெய்தருள வேணும்
இதுவே என் விண்ணப்பம்	இவ்வளவே அடியேன் செய்யும் விஞ்ஞாபனம்.

[இம்மூன்று தனியன்களே ஸகல திவ்ய தேசங்களிலும் வழங்கு மவை; மற்றொரு தனியன் மேனாட்டில் அநுஸந்திக்கப் படுகிறதாம்] அதாவது

~~*~*~*~*~*~*~*

இனியென்குறைநமக் கெம்பெருமானார்திருநாமத்தால்
முனிதந்தநூற்றெட்டுச் சாவித்திரியென்னுநுண்பொருளைக்
கனிதந்த செஞ்சொற்கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே.

(இதன் கருத்து) ஸர்வேச்வரன் ஆதியிலே ஸங்கல்பபூர்வகமாக உலகத்தைப் படைத்து முதலிலே சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஸாவித்ரியை உபதேசித்தான். இவ்வமுதனார் அந்த ஸாவித்ரியின் ஸாரார்த்தத்தை யெடுத்து இராமானுசன் என்னுந் திருநாமத்தோடிணக்கிக் கட்டளைக் கலித்துறையிலே வைத்துத் தாம் அநுபவித்த அநுபவத்தின் பரீவாஹரூபமாக இந்நூற்றந்தாதியைப் பாடிப் பின்புள்ளாரான நமக்கும் உபகரித்தருளினார். இனி நமக்கு ஐஹிகாமுஷ்மிகங்களில் ஒரு குறையுமில்லை என்பதாம். “திரு நாமத்தால்” என்ற விடத்து, “திருப்பெயரால்” என்று பாடமிருப்பின் வெண்டளைக்குச் சேரும்.

தனியன் உரை முற்றிற்று.

~~*~*~*~*~*~*~*

இராமாநுச நூற்றந்தாதி

உரையின் அவதாரிகை

ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸங்க்ரஹம் திருவஷ்டாக்ஷரம். அதனுடைய பரம தாத்பர்யமாயும், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தமாயும், ஸ்ரீமதுரகவிகளுடைய உக்தியாலும் அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிதமாயும், நம் பூருவாசார்யார்களின் உபதேச பரம்பரையாலே ப்ராப்தமாயும், சேதநர்களனைவர்க்கும் இன்றியமையாத ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களின் நிஷ்க்ருஷ்ட வேஷமாயும், பரம ரஹஸ்யார்த்தமாயு மிருப்பது சரம பர்வ நிஷ்டை. அஃதிருக்கும்படியைத் திருவரங்கத்தமுதனார்க்கு எம்பெருமானார் தமது நிர்ஹேதுக க்ருபையினாலே கூரத்தாழ்வான் திருவடிகளிலே இவரை ஆச்ரயிப்பித்தருளி இவர் முகமாக உபதேசித்தருளினார். அங்கனம் உபதேச ப்ராப்தமான அந்தச் சீரிய பொருளை இவ்வமுதனார் தாம் அநவரத பாவநை பண்ணி எம்பெருமானார் திருவடிகளை இடைவிடாது ஸேவித்துக்கொண்டு போந்தராய் அவருடைய திருக்கல்யாண குணங்களைத் தமது பத்திப் பெருங்காதலுக்குப் போக்குவீடாகப் பேசி அநுபவித்தே தீரவேண்டும்படியான நிலைமை தமக்கு உண்டானமையாலும், சரமபர்வநிஷ்டையே சீரியதென்கிற பரமார்த்தத்தைச் சேதநர்கட்கு எளிதில் உணர்த்த வேணுமென்கிற க்ருபாமூலகமான கருத்தினாலும் தாம் எம்பெருமானாருடைய திவ்யகுண சேஷ்டிதாதிகளை ப்ரேமத்துக்குத் தகுதியாகப் பேசுகிற பாசுரங்களாலே அவருடைய வைபவங்களை அனைவர்க்கும் வெளியிடா நின்றுகொண்டு முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கே அற்றுத்தீர்ந்த மதுரகவிகள் தமது நிஷ்டையைக்கூறும் முகத்தாலும் பிறர்க்கு உபதேசிக்கும் முகத்தாலும் உஜ்ஜீவநத்துக்கு உபயுக்த்தமான அர்த்தத்தை லோகத்திலே வெளியிட்டருளினதுபோல, இவர் தாமும் அவ்வகைகளாலே ஆசார்யாபிமாநநிஷ்டர்க்கு அறிந்து கொள்ளத்தக்க அர்த்தங்களையெல்லாம் மிக்க சுருக்கமும் மிக்க விரிவுமின்றி நூற்றெட்டு பாசுரங்கள் கொண்ட இத்திவ்ய ப்ரபந்த முகத்தால் அருளிச்செய்கிறார்.

~~*~*~*~*~*~*~*~*

1. ** பூமன்னுமாதுபொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்னவந்தவிராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே. (1)

நெஞ்சே!	ஓ மனமே!
பூ மன்னு மாது	தாமரைப்பூவில் பொருத்தமுடையளாயிருந்த பிராட்டி
பொருந்திய மார்பன்	(அப்பூவை விட்டு வந்து) பொருந்துகைக்குறுப்பான போக்யதையையுடைய திருமார்பையுடையனான பெருமாளுடைய
புகழ் மலிந்த பா	திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ் பாசுரங்களிலே
மன்னு மாறன்	ஊற்றமுடையவரான நம்மாழ்வாருடைய
அடி	திருவடிகளை
பணிந்து	ஆச்ரயித்து
உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவரும்
பல் கலையோர் தாம் மன்ன	பலபல சாஸ்திரங்களை ஓதின மஹான்கள் நிலைபெறும்படி (இவ்வுலகில்)

வந்த	வந்தவதரித்தவருமான
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
சரண அரவிந்தம்	திருவடித் தாமரைகளை
நாம் மன்னி வாழ	நாம் ஆச்ரயித்து வாழ்வதற்குறுப்பாக
அவன் நாமங்களே	அவ்வெம்பெருமானாரது திருநாமங்களையே
சொல்லுவோம்	ஸங்கீர்த்தநம் பண்ணுவோம்

* * * தாமரைமலரிற் பிறந்த பெரிய பிராட்டியார் அப்பூவைவிட்டு "அகலகில்லேன் இறையும்" என்று வந்து மிக்க விருப்பத்துடன் வஸிக்கப்பெற்ற திருமார்பை யுடையனான திருமாலினது திவ்ய குணசேஷ்டிதங்களை நிறைத்துக்கொண்டிருக்கிற திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளைத்தொழுது ஸத்தை பெற்றவராயும், பலபல சாஸ்த்ரங்களைக் கற்றும் உஜ்ஜீவநோபாயத்தில் த்ருடாத்யவஸாயமின்றியே ஸம்சய விபர்யங்கள் கொண்டு தடுமாறுகின்றவர்களை ஒரு நிச்சயஜ்ஞானத்திலே நிலைநிறுத்தி வாழ்விக்க வந்தவதரித்தவராயுமிருக்கிற எம்பெருமானாருடைய திருவடிகளை நாம் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு அவருடைய திருநாமங்களை வாயாரப் பேசுவோமென்று தமது திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லுகிறாராயிற்று;

பல்கலையோர் தாம்மன்ன = நாநா சாஸ்த்ரங்களைக்கற்று வல்லவர்களான ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய மஹான்கள் ப்ரதிஷ்டிதராகைக்காக என்றுமாம். எம்பெருமானாருடைய சரணாரவிந்த ப்ராப்திக்கு ஸாதநம் = அவருடைய திருநாமஸங்கீர்த்தநமேயாம் என்பது இப்பாசுரத்தில் வெளியாயிற்று. (1)

~~*~*~*~*~*~*~*

2. ** கள்ளார்பொழில்தென்னரங்கன் * கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளாமனிசரைநீங்கி * குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமாநுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே. (2)

கள் ஆர் பொழில் தென்	தேன் நிறைந்த சோலைகளையுடைய தென் திருவரங்கத்திலே பள்ளிகொள்ளும்
அரங்கன்	பெருமானுடைய
கமலம் பதங்கள்	தாமரை போன்ற திருவடிகளை
நெஞ்சில் கொள்ளா	தமது நெஞ்சிலேவையாத
மனிசரை நீங்கி	மனிதர்களை விட்டொழித்து
குறையல் பிரான் அடிக்கீழ்	திருமங்கை மன்னனுடைய திருவடிகளிலே என்றும் விட்டு நீங்காத
விள்ளாத அன்பன்	பக்தியையுடையனான
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
மிக்க சீலம் அல்லால்	சிறந்த சீலகுணத்தைத் தவிர
ஒன்று	வேறொன்றையும்
என் நெஞ்சு உள்ளாது	எனது நெஞ்சானது நினைக்கமாட்டாது
	(இவ்வாறாக)
எனக்கு உற்ற பேர் இயல்வு	எனக்கு ஸித்தித்ததொரு சிறந்த ஸ்வபாவத்திற்கு
ஒன்று அறியேன்	ஒரு காரணத்தையும் அறிகின்றிலேன்

* * * ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளை நெஞ்சாலும் நினையாத பாவிகளோடு நெடுங்காலம் பழகிக் கிடந்த என் நெஞ்சானது இன்று அப்பாவிகளோடு உறவை ஒழித்துவிட்டு, திருமங்கையாழ்வாருடைய திருவடிகளியே அநவரதம் இறைஞ்சுமவரான எம்பெருமானாருடைய சிறந்த சீலகுண மொன்றையே சிந்தியா நின்றது; இப்படிப்பட்டதொரு பெருந்தன்மை எனக்கு நேர்ந்ததற்குக் காரணம் அவ்வெம்பெருமானாருடைய நிர்ஹேதுக க்ருபாகடாக்ஷமேயொழிய வேறொன்றுண்டாக நானறிகின்றிலேன் என்றவாறு. (2)

~~*~*~*~*~*~*~*

3. பேரியல்நெஞ்சே அடிபணிந்தே னுன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ளசுற்றம்புலர்த்தி * பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமாநுசமுனிக்கன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீழ்ழென்னைச்சேர்ந்ததற்கே. (3)

பேர் இயல் நெஞ்சே!	மிகவும் கம்பீரமான மனமே!
உன்னை அடி பணிந்தேன்	உன்னை வணங்குகின்றேன் (என்னை வணங்குவது எதற்காக என்னில்)
பேய் பிறவி	ஆரைப் பிறப்பையுடையவர்களான
பூரியரோடு உள்ள	நீசர்களோடு (எனக்கு) இருந்த
சுற்றம்	உறவை
புலர்த்தி	போக்கடித்து
பொருவு அரு சீர்	ஒப்பற்ற குணங்களையுடையவரும்
ஆரியன்	சிறந்த அநுஷ்டானமுடையவரும்
செம்மை	(ஆச்ரிதரோடு) ருஜுவாகப் பரிமாறுந்தன்மை வாய்ந்தவருமான
இராமானுச முனிக்கு	எம்பெருமானார் திறத்தில்
அன்பு செய்யும் சீரிய பேறு	பக்தி பண்ணுவதையே பரம புருஷார்த்தமாகவுடையவர்களான கூரத்தாழ்வான்
உடையார்	போல்வாருடைய
அடிக்கீழ்	திருவடிகளின் கீழே
என்னை	(பரம நீசனாயிருந்த) என்னை
சேர்த்ததற்கே	கொண்டு சேர்த்த மஹோபகாரத்திற்காகவே (உன்னை அடி பணிந்தேன்)

* * * பரம நீசர்களோடு எனக்கிருந்த ஸம்ஸர்க்கத்தைப் போக்கடித்து, ஒப்பற்ற குணசாலியான எம்பெருமானாருடைய திருவடிகளில் ப்ராவண்யமாகிற பரமபுருஷார்த்தத்தைப் பெற்றுள்ள ஆழ்வான் போல்வாருடைய திருவடிகளின் கீழே என்னைக் கொண்டு சேர்த்த நெஞ்சே! இப்பெரு நன்றிபுரிந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? “தலையில்லா கைம்மாறிலேனே” என்றாற்போலே உன்னைத் தலையால் வணங்குவது தவிர வேறொறு கைம்மாறு நான் செய்யகில்லேன் என்றாரயிற்று. பூரியர் = இழிபிறப்பாளர். புலர்த்துதல் – உலரச் செய்தல்; அதாவது போக்கடித்தல். பொருவு – ஒப்பு.

“இராமாநுசனடிக் கன்புசெய்யுஞ் சீரிய பேறுடையார்” என்றவிடத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களெல்லாரையும் விவக்ஷிக்கிறார் என்றாலும், கூரத்தாழ்வானை விசேஷித்துக் கருதுகின்றாரென்றலும் ஒக்கும். (3)

~~*~*~*~*~*~*~*

4. என்னைப்புவியிலொருபொருளாக்கி * மருள் சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்து * ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்த விராமாநுசன் பரன்பாதமுமென்
சென்னித்தரிக்க வைத்தான் * எனக்கேதுஞ்சிதைவில்லையே. (4)

ஊழி முதல்வனையே	காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரண பூதனான எம்பெருமானையே
பன்ன	(எல்லாரும் விவேகித்து) அநு ஸந்திக்கும்படி
பணித்த	(ஸ்ரீ பாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த
பரன் இராமாநுசன்	ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார்
புவியில்	இந்த பூமியிலே
என்னை ஒரு பொருள் ஆக்கி	(அபார்த்தமாய்க் கிடந்த) என்னை ஒரு பதார்த்தமாக்கி
மருள் சுரந்த முன்னை பழை வினை வேர் அறுத்து	அஜ்ஞான மூலகங்களாய் மிகவும் அநாதிகளான (எனது) பாவங்களை வேரற நீக்கி
பாதமும்	தமது திருவடிகளையும்
என் சென்னி	எனது தலையிலே
தரிக்க வைத்தான்	நான் உகந்து தரிக்கும் படியாக வைத்தருளினார்; (இவ்வளவு மஹாப்ரஸாதம் பெற்றேனான பின்பு)
எனக்கு	அடியேனுக்கு
ஏதும் சிதைவு இல்லை	எவ்விதமான ஹாநியும் இனி உண்டாக வழியில்லை.

* * * எம்பெருமானாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு ஆளான நான் இனி ஒரு நாளும் எவ்விதமான ஹாநியையும் அடையமாட்டேன் என்கிறார். பதார்த்த கோடியில் சேராமல் துச்சனாயிருந்த எனது கருமங்களையெல்லாம் வேரற நீக்கி, தமது பாதாரவிந்தங்களையும் என் தலைமேலே வைத்தருளினார் எம்பெருமானனர்; இப்பேறு பெற்ற எனக்கு இனி ஒரு குறையுமில்லை என்றாராயிற்று.

மருள் சுரந்த – அஜ்ஞாநத்தாலே செய்யப்பட்ட என்கை; மருளாலே சுரக்கப்பட்ட என்றவாறு; ஊழிமுதல்வனையே பன்னப்பணித்த – ஊழிமுதல்வனான எம்பெருமானையே பரவும்படி அமுதனாராகிய தம்மைச் செய்தருளின – என்று அர்த்தமல்ல; பகவத்விமுகரா யிருந்தவர்களை யெல்லாம் உபதேசாதி முகத்தாலே பகவத் ப்ரவணராம்படி செய்தருளினவர் என்று பொதுப்படியாகச் சொன்னபடி. ஊழிமுதல்வன் – பிரளயகாலத்தில் முழுமுதற் கடவுளாயிருந்தவன் என்றுமாம். (4)

~~*~*~*~*~*~*~*~*

5. எனக்குற்றசெல்வமிராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் * அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன் திருநாமங்கள்சாற்றும், என்பா
வினக்குற்றங்காணகில்லார் * பத்தியேந்தவியல்விதென்றே. (5)

எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் என்று	“நமக்கு ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானாரே” என்று

இசைய கில்லா	அத்யவஸாயங் கொண்டிருக்க மாட்டாத
மனக்குற்றம் மாந்தர்	துஷ்ட ஹ்ருதயர்களான மனிசர்
பழிக்கில்	(இந்நூலைப்) பழிப்பர்களாகில்
புகழ்	(அன்னவர்களுடைய பழிப்பே இதற்குப்) புகழாய்விடும்;
அவன்	அவ்வெம்பெருமானாருடைய
மன்னிய சீர் தனக்கு	நித்யஸித்தமான கல்யாணகுணங்களுக்கு
உற்ற	தகுதியான
அன்பர்	அன்பையுடையவர்களான மஹான்கள்
பத்தி ஏய்ந்த இயல்விது என்று	இந்நூலானது பக்தியோடு கூடின ப்ரவ்ருத்தியையுடையதென்று (திருவுள்ளம் பற்றி)
அவன் திருநாமங்கள்	அவ்விராமாநுசனுடைய திருநாமங்களைச் சொல்லுகின்ற என்னுடைய (இந்தப்)
சாற்றும் என்பா இனம்	பாசுரமாலைகளிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள்
குற்றம்காண கில்லார்	

* * உலகத்தில் ஒரு பிரபந்தம் பிறந்தால் அதனைத் தூஷிப்பர் பலரும், பூஷிப்பார் சிலரும் ஏற்படுவது வழக்கம். உண்மையில் தோஷங்கள் இல்லாதிருந்தாலும் எதையாவது சொல்லித் தூஷித்தே தீருவர்கள்; குற்றம் குறைகள் இருந்துவிட்டால் தூஷகர்களின் உத்ஸாஹம் கேட்கவே வேண்டியதில்லை. அறிவிலியான நான் இயற்றும் இந்நூலில் தோஷங்கள் தான் மிகையாக இருக்கக் கூடும். அவற்றைக்கண்டு சிலர் நிந்திப்பர்களாகில், அன்னவருடைய தூஷணம் நமக்கு பூஷணமேயா மித்தனை என்கிறார்.

"பிறருடைய பழிப்பு நமக்கு அப்ரயோஜகம்" என்று சொல்லவேண்டியிருக்க, அவர்களுடைய பழிப்புதானே நமக்குப் புகழாம் என்கைக்குக் கருத்தென்? அவர்களது பழிப்பு இவர்க்கு எப்படி புகழாய் விடும்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். அவர்கள் தெளியுமாறு சொல்லுகிறோம்; அமுதனாராம் ஒருவர்; அவர் இராமாநுச நூற்றந்தாதி என்றொரு பிரபந்தம் பாடினாராம்; அதில் ஒவ்வொருபாட்டிலும் இராமாநுசன் என்று சொன்னதையே சொல்லிக்கொண்டு கிடக்கிறார். தவிரவும், சாஸ்திரங்களில் புருஷார்த்தமாகச் சொல்லப்பட்டுள்ள ஐச்வர்யம் முதலானவற்றை இகழ்ந்துரைகிறார்; ஸகல புருஷார்த்தங்களும் தமக்கு "உடையவர்" தானாம்; எம்பெருமானைக்கூட அவர் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாராம். என்றிவைபோல்வன சில வார்த்தைகளைச் சொல்லிப் பழிப்பர்கள் வாஸ்தவத்தில் இவையெல்லாம் குணமேயாதலால் குணகீர்த்தநத்தில் சேர்ந்து புகழ்ச்சியேயாய்முடியக் குறையில்லையென்க. எம்பெருமானைப் பழித்த சிசுபாலாதிகளும் பர்யாயேண குணகீர்த்தநம் பண்ணினார்களாகவன்றே உய்ந்து போனது. (5)

~~*~*~*~*~*~*~*~*

6. இயலும்பொருளு மிசையத் தொடுத்து * ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்துமிராமாநுசனை * மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்றன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (6)

ஈன் கவிகள்	விலக்ஷணரான கவிகள்
அன்பால்	ப்ரீதியினாலே
இயலும் பொருளும்	சப்தமும் அர்த்தமும்

இசைய	நன்கு பொருந்தும்படியாக
மயல் கொண்டு	வ்யாமோஹம் தலையெடுத்து
கவிகளில்	பாடல்களிலே
பத்தி இல்லாத	பக்தியற்றதான
என் பாவி நெஞ்சால்	என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே
அவன் தன்	அவ்வெம்பெருமானாருடைய
பெரு கீர்த்தி	அளவற்றகீர்த்திகளை
மொழிந்திட	பேசுவதாக
மதிஇன்மையால்	புத்தியில்லாமையினாலே ப்ரவர்த்திக்கின்றேன்
முயல்கின்றனன்	

* * * “பத்தியேந்த வியல்விதென்றே” என்று கீழ்பாட்டிற் சொன்னவிவர், அப்படிப்பட்ட பக்தி தமக்கு உண்டோவென்று பார்த்தார்; “அந்தோ! நாமோ அவ்வெம்பெருமானாரைத் துதிக்க இழிந்தது!” என்று தம்மைத்தாமே வெறுத்துக் கொள்ளுகிறார் இதில்; இன்கவி பாடும் பரமகவிகளான சில மஹான்கள் சொல்லின்பமும், பொருளின்பமும் நன்கு பொருந்துமாறு கவி பண்ணி ஆந்தரமான அன்பினாலே வ்யாமோஹித்து இராமாநுசனை வாழ்த்தா நிற்பர்கள்; அன்னவர்களுடைய பக்திபரீவாஹ ரூபமான கவிகளில் ஆதரமற்ற எனது பாவி நெஞ்சால் அவ்விராமாநுசனுடைய பெருப்பெருத்த புகழ்களையெல்லாம் பேசுவதாக நான் முயல்கின்றேனே! இஃது என்ன புத்திகெட்ட தன்மை! என்று வெறுத்துக்கொள்ளுகிறார். (6)

~~*~*~*~*~*~*~*~*

7. மொழியைக்கடக்கும்பெரும்புகழான் * வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்துமிராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினியாதும் வருத்தமன்றே (7)

மொழியைக் கடக்கும்	வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான
பெரு புகழான்	பெரிய புகழையுடையவரும்
முக்குறும்பு ஆம் வஞ்சக்	கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்னும் மூவகைக்
குழியை கடக்கும்	குறும்புகளாகிற படுகுழியைக் கடந்திருப்பவரும்
நம்	நமக்கு நாதருமான
கூரத்து ஆழ்வான்	கூரத்தாழ்வானுடைய
சரண்	திருவடிகளை
கூடியபின்	நான் ஆச்ரயித்த பின்பு
பழியைக் கடத்தும்	ஸர்வபாப நிவர்த்தகரான
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
புகழ் பாடி	நற்குணங்களைப்பாடி
அல்லாவழியைக் கடத்தல்	ஸ்வரூபத்திற்குச் சேராத தீயவழிகளைத் தப்பிப் பிழைக்கயானது
எனக்கு	அடியேனுக்கு
இனி	இனிமேலுள்ள காலமெல்லாம்

யாதும் வருத்தம் அன்று	ஈஷத்தும் ப்ராயஸ ஸாத்யமன்று [எளிதேயாம்]

* * * எம்பெருமானாரைத் துதிப்பதற்குத் தாம் யோக்யதையற்றவர் என்று பின்வாங்கப் பார்த்த அமுதனார், தமக்குள்ள ஆழ்வான் திருவடி ஸம்பந்தத்தை நினைத்து, இஃது இருக்கும்போது எனக்கு அஸாத்யமானது ஒன்றுமில்லையென்று துணிவு கொள்ளுகிறார் இதில். வாய்கொண்டு வருணிக்கமுடியாத பெரும் புகழ் படைத்தவரும், கல்வி, செல்வம், குலம் என்ற மூன்றுவகை ஸம்பத்தும் புஷ்கலமாயிருந்தும் அவற்றால் இறையும் அஹங்கார மடையாதவருமான கூரத்தாழ்வானுடைய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்து க்ருதக்ருத்யனான வெனக்கு எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் பாடுதலும் அதுவே காரணமாக அர்ச்சிராதிகதியொழிந்த மற்ற கதிகளிற் போகாதபடி அவ்வழியேபோதலும் மிகவுமெளிதேயாம் என்றாராயிற்று.

நம் பூருவாசாரியர்கள் எல்லாருமே சிறந்த புகழுடையராயினும் ஆழ்வானுடைய புகழ் அத்யந்த விலக்ஷணமென்பது ப்ரஸித்தமான விஷயம். நம் தர்சநத்துக்கு மஹாத்ரோஹியான நாலூரானுக்குக் கொடிய நரகங்களைக் கொடுக்க வேணுமென்று பகவத்ஸந்நிதியிலே ப்ரார்த்திக்கவேண்டியிருக்க, பேரருளாளன் திருமுன்பே வரதராஜஸ்தவத்தை விண்ணப்பம்செய்து கண்தெரியும்படி வரம் வேண்டிக்கொள்ளீர் என்ற ஸ்வாசார்ய நியமநத்தையும் அதிக்ரமித்து “நான் பெற்றபேறு நாலூரானும் பெறவேணும்” என்று வரம் வேண்டிக்கொள்ளும்படி விசாலமான திருவுள்ளம்பெற்ற ஆழ்வானுடைய புகழை நாம் என்சொல்வோம்! “மொழியைக் கடக்கும் பெரும்புகழான்” என்று சொல்லுவது தவிர வேறுவாசகமில்லைகாணும்.

[வஞ்சமுக்குறும்பாமித்யாதி] கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்ற இம்மூன்று அஹங்காரங்கள் மிகக்கொடியவை; இவற்றைக் கடத்தல் ஆர்க்கும் அரிது; இவற்றைக் கடந்தவர் என்னும் ஏற்றம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பதாக எம்பெருமானார் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. திருவாய்மொழியில் “பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பன்” என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் ஆழ்வான் விஷயமாக அருளிச்செய்யப்பட்டதொரு ஐதீஹ்யம் குறிக்கொள்ளத்தக்கதாகும். மற்றும் பல இதிஹாஸங்களும் பன்னியுரைக்குங்காற் பாரதமாம். (7)

~~*~*~*~*~*~*~*

8. வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையும்செந்தமிழ்தன்னையுங்கூட்டி * ஒன்றத்
திரித்தன் தெறித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
யிருத்தும் பரமன் * இராமாநுசனெம்மிறையவனே. (8)

வருத்தும்	வருத்தத்தை யுண்டுபண்ணக்கூடிய
புறம் இருள்	பாஹ்ய விஷயங்களைப் பற்றின அஜ்ஞானமாகிற இருளை
மாற்று	போக்குவதற்காக
எம் பொய்கைப்பிரான்	நமது குலத்தலைவரான பொய்கையாழ்வார்
அன்று	முற்காலத்தில்
மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்ற திரித்து	வேதாந்தங்களிற் பதிந்துகிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையுங் கூட்டி இரண்டையும் ஒன்று சேர ஒரு திரியாக்கி
எரித்த திருவிளக்கை	ஜ்வலிக்கச்செய்த (முதல் திருவந்தாதியாகிற) திருவிளக்கை

தன் திருவுள்ளத்தே	தமது திருவுள்ளத்திலே
இருத்தும்	வைத்துக்கொண்டிரா நின்ற
பரமன் இராமானுசன்	மஹாவைபவசாலியான எம்பெருமானார்
எம் இறையவன்	நமக்கு ஸ்வாமி

* * * பகவத்பாகவத விஷயம் அந்தரங்கவிஷயமென்றும், சப்தாதி விஷயங்கள் பாஹ்ய விஷயம் (அதாவது – புறவிஷயம்) என்றும் சொல்லப்படும். அந்த பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞாநாந்தகாரமானது புறவிருள் எனப்படும்; [புறம்பான விஷயங்களைப்பற்றின இருள் புறவிருள்] இவ்விருளானது முதலிலே ஸுகரூபம்போல் தோன்றினாலும் பிறகு மிக்க வருத்தத்தை விளைக்கக்கூடியது; அப்படிப்பட்ட கொடிய இருளை அகற்றுவதற்காகப் பொய்கையாழ்வார் “வையம் தகளியா வார்கடலே வெய்யகதிரோன் விளக்காக” என்று தொடங்கித் திருவந்தாதி திவ்யப் ப்ரபந்தமென்னும் ஒரு விளக்கை ஏற்றியருளினார். அவ்விளக்குக்கு எதைத் திரியாக்கினார் என்றால், வேதாந்தங்களில் திரண்டு கிடக்கும் ஸாரப்பொருள்களையும் இனிய தமிழ்சொற்களையும் ஒன்று சேர்த்துத் திரித்தார். அப்படிப்பட்ட திருவிளக்கை எம்பெருமானார் தமது திருவுள்ளத்தினுள்ளே எப்போதும் அணையாதபடி ஸ்தாபித்தருளினார்; அவரே அடியேனுக்கு ஸ்வாமி என்றாராயிற்று. (8)

~~*~*~*~*~*~*~*~*

9. இறைவனைக்காணு மிதயத் திருள்கெட* ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள் * நெஞ்சத்
துறையவைத்தாளு மிராமாநுசன் புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்னவைப்பரே. (9)

இறைவனை	ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை
காணும்	ஸாக்ஷாத்கரிப்பதற்கு உபகரணமான
இதயத்து	ஹ்ருதயத்திளுள்ள
இருள்	அஜ்ஞானமாகிற அந்தகாரமானது
கெட	நசிக்கும்படியாக
ஞானம் என்னும் நிறை	ஞானமாகிற பூர்ண தீபத்தை ப்ரகாசிப்பித்தருளி இரண்டாந் திருவந்தாதியை
விளக்கு ஏற்றிய	அருளிச்செய்த
பூதத் திருவடி	பூதத்தாழ்வாருடைய
தாள்கள்	திருவடிகளை
நெஞ்சத்து	தமது திருவுள்ளத்திலே
உறைய வைத்து	சாச்வதமாக ஸ்தாபித்து
ஆளும்	(அவற்றையே) அநுபவிக்கின்ற
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
புகழ்	திவ்ய குணங்களை
ஓதும்	இடைவிடாது அநுஸந்திக்கின்ற
நல்லோர்	விலக்ஷண புருஷர்கள்தாம்
இந்த மண் அகத்தே	இப் பூமண்டலத்திலே
மறையினை	வேதங்களை

காத்து	ரக்ஷித்து
மன்ன வைப்பவர்	என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ண வல்லவர்கள்

* * * "ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்" என்னும் விருது இராமாநுசனுடையார்க்கே ஏற்குமென்கிறார்; ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு எல்லார்க்கும் உபகரணமாயிராநின்ற ஹ்ருதயமானது அஜ்ஞாநாந்தகாரத்தாலே இருண்டு கெட்டுப் போகாதபடி பரஜ்ஞானமாகிற பூர்ணதீபத்தை ஏற்றினவரான பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே இடைவிடாது வைத்துக்கொண்டு அவற்றையே அனுபவிக்கும் எம்பெருமானாருடைய குணகீர்த்தனமே போது போக்காக இருக்கும் விலக்ஷணர் யாரோ அவர்கள் தான் வேதத்தை நன்றாக ரக்ஷித்து இந்நிலவுலகத்தில் நிலைநிறுத்தவல்ல மஹான்கள் என்றாராயிற்று. பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானமென்னும் நிறைவிளக்கானது இரண்டாந்திருவந்தாதியாகிற அவருடைய அருளிச்செயல். பூதத்திருவடி – திருவடியென்று இங்கே ஸ்வாமிக்கு வாசகம்; பூதத்தாரென்னும் ஸ்வாமி என்றபடி.

[மறையினைக்காத்து மன்னவைப்பவர்] எம்பெருமானார் ஸம்பந்தம்பெறாத மற்றையோர்கள் "வேதம் ப்ரமாணமேயல்ல" என்று சொல்லுவாரும், அதனை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டும் அபார்த்தங்கள் பண்ணுவாருமாய் இருப்பதால் அவர்கள் யாவரும் வேதமார்க்க வித்வம்ஸிகள்; இராமாநுசனுடையார் தாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள் என்றபடி. (9)

~~*~*~*~*~*~*~*~*

10. மன்னியபேரிருள் மாண்டபின் * கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமைகாட்டும் * தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றுமிராமாநுசற்கன்பு பூண்டவர்தாள்
சென்னியிற்சூடும் * திருவுடியாரென் றுஞ்சீரியரே. (10)

மன்னிய	ஒருவராலும் பேர்க்கமுடியாதபடி நிலைத்துநின்ற
பேர் இருள்	(அஜ்ஞானமாகிற) பெருத்த இருளானது
மாண்ட பின்	(முற்பட்ட ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே) நன்றாக நீங்கின பின்பு
கோவலுள் ஆயனை	திருக்கோவிலூரில் ஆயனாரை
மா மலரான் தன்னொடு	பிராட்டியோடு கூடிய
கண்டமை	தாம் ஸேவித்தபடியை
காட்டும்	("திருக்கண்டேன்" இத்யாதி ப்ரபந்த முகத்தாலே) வெளியிட்டருளின
தமிழ் தலைவன்	தமிழ்க்குத் தலைவரான பேயாழ்வாருடைய
பொன் அடி	அழகிய திருவடிகளை
போற்றும்	புகழுமவரான
இராமாநுசற்கு	எம்பெருமானார் திறத்தில்
அன்பு பூண்டவர்	பக்தியையுடையவர்களினது
தாள்	திருவடிகளை
சென்னியில் சூடும் திரு உடையார்	சிரோ பூஷணமாகக் கொள்ளுஞ் செல்வமுடையோர் தாம்
என்றும் சீரியர்	என்றைக்கும் ஸ்ரீமான்கள்

* * பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றின இரண்டு திருவிளக்குகளாலும் இருள் நீங்கவே, “திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்” என்று திருக்கோவலூராயனாரைப் பிராட்டியோடுகூட ஸேவிக்கப்பெற்றார் பேயாழ்வார். தாம் அப்படி ஸேவித்ததாக மூன்றாந்திருவந்தாதி முகத்தால் வெளியிட்டருளின அவ்வாழ்வாருடைய திருவடிகளைத் துதிக்குமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியையுடையவர்கள் யாரோ, அவர்களுடைய திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்வதையே அழியாச் செல்வமாக நினைத்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய திருவடியைச் சிரமேற்கொள்ளுமவர்கள் தாம் நித்திய ஸ்ரீமான்கள் என்றாராயிற்று.

இப்பாட்டில் பேயாழ்வார் “தமிழ்த்தலைவன்” என்று சிறப்பித்துக் கூறப்பட்டார். (10)

~~*~*~*~*~*~*~*~*

11. *சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழாலளித்த*
*பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணாம்பதுமத்*
தாரியல்சென்னி யிராமாநுசன்தன்னைச் சார்ந்தவர்தம்
*காரியவண்மை * என்னால் சொல்லொணாதிக்கடலிடத்தே.* (11)

சீரிய நான் மறை செம் பொருள்	சிறந்த நால் வேதங்களிலுள்ள செவ்விய பொருள்களை
செம் தமிழால்	அழகிய தமிழ் பாசுரங்களால்
அளித்த	அருளிச்செய்தவரும்
சரண் ஆம் பதுமம் தார் இயல் சென்னி	திருவடிகளாகிற தாமரைப்பூவாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியுடையரான
இராமாநுசன் தன்னை	எம்பெருமானாரை
சார்ந்தவர் தம்	ஆச்ரயமாகப் பற்றினவர்களுடைய
பார் இயலும் புகழ்	பூமியெங்கும் பொருந்தின புகழையுடையவருமான
பாண் பெருமாள்	திருப்பாணாழ்வாருடைய
காரியம் வண்மை	அநுஷ்டாநவைலக்ஷண்யமானது
இக்கடல் இடத்து	கடல் சூழ்ந்த இப்பூமியில்
என்னால் சொல்ல ஒணாது	(இப்படிப்பட்ட வைபவமுடையதென்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாது.

* * * எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளையெல்லாம் விசதமாகப் பேசுகையாலே சிறந்தவையான நால்வேதங்களில் பொதிந்து கிடக்கும் நற்பொருள்களை “அமலனாதிபிரான்” என்னும் திவ்ய ப்ரபந்தத்தில் சுருக்கி அருளிச்செய்தவராய் நாடெங்கும் பரவின புகழுடையரான திருப்பாணாழ்வாருடைய சரணாரவிந்தங்களாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியையுடையவரான எம்பெருமானாரை அடிபணிந்தவருடைய ஆசாரவைலக்ஷண்யமானது என் வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி மிகவும் சிறந்தது என்றாராயிற்று. (11)

~~*~*~*~*~*~*~*~*

12. இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போ
தடங்குமிதயத் திராமாநுசன் * அம்பொற்பாத மென்றுங்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேனன்புசெய்வதுவே (12)

இடங் கொண்ட கீர்த்தி பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியை யுடையரான
மழிசைக்கு இறைவன் திருமழைசைப் பிரானுடைய
இணை அடி போது உபயபாதாரவிந்தங்கள்
அடங்கும் குடிகொண்டிருக்கப் பெற்ற
இதயத்து திருவுள்ளத்தை யுடையரான
இராமாநுசன் எம்பெருமானாருடைய
அம் பொன் பாதம் மிகவும் அழகிய திருவடிகளை
என்றும் எக்காலத்திலும்
கடம் கொண்டு இறைஞ்சும் இதுவே நமக்கு ஸ்வரூபமென்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தை
திரு யுடையரான
முனிவர்க்கு அன்றி மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு
காதல் செய்யா அன்பு பூண்டிராத
திடம் கொண்ட மிக்க உறுதியையுடையரான ஞானிகளுக்குத் தான்
ஞானியர்க்கே
அடியேன் அன்பு செய்வது அடியேன் பக்தனாயிருப்பேன்

* * * உலகமெங்கும் பரவின புகழையுடையரான திருமழிசைப்பிரானுடைய பாதார விந்தங்கள் அடங்கியிருக்கப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை ஸ்வரூப ப்ராப்தத்வ புத்தியோடே அநவரதம் ஆச்ரயிக்கின்ற மஹாபாகவதர்கட்குத் தவிர வேறொருவர்க்கும் விதேயப்படாத மாஞானிகளுக்கே அடியேன் அன்பனாயிருப்பன் என்கிறார். இப்பாட்டால், “ஸ்ரீராமாநுஜ பக்த பக்த பக்தன் அடியேன்” என்றாராயிற்று.

கடங்கொண்டு = கடமையாகக் கொண்டு. (12)

~~*~*~*~*~*~*~*~*

13. செய்யும்பசுந்துளவத்தொழின்மாலையும் * செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும் பரந்தாளன்றி ஆதரியா
மெய்யன் * இராமாநுசன்சரணேகதி வேறெனக்கே. (13)

செய்யும் (தொண்டரடிப்பொடியாழ்வாராகிற தம்மாலே) செய்யப்பட்ட தாய்
பசுந் துளவம் பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய்
தொழில் வேலைப்பாடுகளை யுடைத்தான
மாலையும் பூமாலைகளையும்
செம் தமிழில் அழகிய தமிழ் பாஷையிலே

பெய்யும்	உண்டாக்கப் பட்டதாய்
மறை	வேதஸத்ருசமான
தமிழ் மாலையும்	திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும்
பேராத சீர் அரங்கத்து	நித்ய ஸித்தமான கல்யாண குணங்களையுடையரான ஸ்ரீரங்கநாதனுடைய
ஐயன் கழற்கு அணியும்	திருவடிகளிலே சாத்தினவரான
பரன்	தொண்டரடிப்பொடி யாழ்வாராகிற பெரியவருடைய
தாள் அன்றி ஆதரியா	திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத
மெய்யன்	ஸத்ய சீலரான
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
சரணே	திருவடிகளே
எனக்கு	அடியேனுக்கு
வேறுகதி	விலக்ஷணமாக ப்ராப்ய வஸ்துவாம்

* * * தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை யன்றி மற்றொன்றில் ஆதரம் அற்றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே நமக்குச் சரணமென்கிறார் இதில்.

தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளைச்செய்து ஸமர்ப்பித்தரென்று சடுக்தியாகச் சொல்லுகிறார் அமுதனார். “துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி” என்றும் “தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி” என்றும் தாமே அருளிச்செய்தபடிக்குப் பொருந்தத் திருத்துழாய் மாலைகளையும், திருமாலை, திருப்பள்ளியெழுச்சியென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல்மாலைகளையும் அரங்கத்தையன் கழல்களிலே ஸமர்ப்பித்தவரிறே தொண்டரடிப்பொடியாழ்வார்.

துளபத்தொழில் மாலையும்” என்றும் சிலர் பாடங்கூறுவர்; துளபத்து – துளஸியினாலாகிய, எழில் மாலை – அழகிய மாலை என்றபடி. இப்பாடம் அழகியதேயாயினும் வியாக்கியானத்தில் ஆதரிக்கப்பட்ட பாடமன்றாதலால் உபேக்ஷிக்கத்தக்கதென்க. (13)

~~*~*~*~*~*~*~*

14. கதிக்குப்பதறி * வெங்கானமுங் கல்லுங் கடலுமெல்லாம்
கொதிக்கத் தவஞ்செய்யும் கொள்கையற்றேன் * கொல்லி காவலன்சொல்
பதிக்குங்கலைக் கவிபாடும்பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுச னென்னைச் சோர்விலேனே (14)

கொல்லி காவலன்	குலசேகரப் பெருமாளாலே அருளிச்செய்யப்பட்டதாய்
கலை சொல் பதிக்கும்	சாஸ்திரச் சொற்கள் அமையப் பெற்றதான
கவி	பெருமாள் திருமொழிப் பாசுரங்களை
பாடும் பெரியவர்	பாடுகின்ற பெரியோர்களது
பாதங்களே	திருவடிகளையே
துதிக்கும்	ஸ்தோத்ரம் செய்பவராய்
பரமன்	உத்க்ருஷ்டரான

இராமாநுசன்	எம்பெருமானார்
என்னை சோர்விலன்	என்னைவிட்டு நீங்குகிறாரில்லை (ஆதலால்)
கதிக்கு பதறி	ப்ராப்ய லாபத்துக்காக விரைந்து
வெம் கானமும் கல்லும்	அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும்
கடலும்	கடல்களிலும் (நின்று கொண்டு)
எல்லாம் கொதிக்க	எல்லா அவயங்களும் கொதிக்கும்படியாக
தவம் செய்யும் கொள்கை	தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவத்தை
அற்றேன்	விட்டொழிந்தேன்

* * * ஸகல சாஸ்த்ரங்களின் ஸாரப்பொருள்களையும் திரட்டி ஸ்ரீகுலசேகரப் பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி யென்னுந் திவ்யப்ரபந்தத்தை அநுஸந்திகின்ற பெரியவர்களது திருவடிகளையே போற்றுமியல்வினரான எம்பெருமானார் வந்து தாமே என்னை ஸ்வீகரித்தாராதலால் இனி ஒருநாளும் அவர் அடியேனைக் கைவிடமாட்டார்; ஆனபின்பு நமக்கு ப்ராப்யம் வேறு ஒன்று மில்லாமையாலே, வநபர்வத ஸமுத்ர தீரங்களில் நின்று க்ரூரமாகச் செய்யும் தவங்களில் இனி எனக்கு அந்வயமில்லை என்றாராயிற்று.

"எல்லாங் கொதிக்கத் தவஞ்செய்யும் கொள்கை" என்றதற்கு – இவனுடைய தவத்தின் கொடுமையைக் கண்டு கானமும் கல்லும் கடலும் பரிதபிக்கும்படியாக அந்தந்த ஸ்தலங்களிலே நின்று தபஸ்ஸுபண்ணும் ஸ்வபாவம் என்று பொருள் கூறுவாருமுளர்.

சோர்வு இலன் – பிரிவிலன் என்றபடி (14)

~~*~*~*~*~*~*~*~*

15. சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் * பான்மையன் தாள்
பேராத வுள்ளத் திராமானுசன்றன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன் * எனக்கென்ன தாழ்வினியே? (15)

சோராத காதல் பெரு சுழிப்பால்	ஒருநாளும் குறைவு படாத ப்ரேமத்தில் பெருஞ்சுழிப் படுகையாலே
தொல்லை மாலை ஒன்றும் பாராது	நித்யனான எம்பெருமான் படியைச் சிறிதும் நிரூபியாமல்
அவனை	அவ் வெம்பெருமானை நோக்கி
பல்லாண்டு என்று	பல்லாண்டு பல்லாண்டென்று மங்களாசாஸநம் பண்ணுகையையே நித்ய
காப்பிடும் பான்மையன்	ஸ்வபாவமாக வுடையரான பெரியாழ்வாருடைய
தாள் பேராத உள்ளத்து	திருவடிகள் விட்டகலாத திருவுள்ளத்தை யுடையவரான
இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
பிறங்கிய சீர்	மிக்க திருக்குணங்களை
சாரா	தங்களுக்கு அநுபாவ்யமாகக் கொள்ளாத
மனிசரை	மநுஷ்யர்களை
சேரேன்	பற்றமாட்டேன்
இனி	இப்படிப்பட்ட உறுதி பிறந்தபின்பு

எனக்கு என்ன தாழ்வு	அடியேனுக்கு என்ன குறை?

* * * பாண்டியராஜனுடைய பண்டித சபையில் எழுந்தருளி “எம்பெருமானே பரதத்துவம்” என்று ஸ்தாபநம் செய்து கிழியறுத்துவிட்ட காலத்து, அப்பாண்டியன் தம்மை யானைமேலேற்றி ஊர்வலம் வருவிக்கையில் தம் வைபவத்தைக் காணவந்து ஆகாசத்திலே கருடாரூபனாய் நின்ற திருமாலைச் சேவித்து அப்பெருமானிடத்துள்ள பெருங்காதாலாலே ரக்ஷ்யபூதரான தம்மையும் ரக்ஷகனான அவனையும் மறந்து, தம்மை ரக்ஷகராகவும் அவனை ரக்ஷ்யகனாவுமெண்ணி அவனுக்குப் “பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்” டென்று தொடங்கி மங்களாசாஸநம் செய்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளையே அநவரதம் தியானித்தருளும் எம்பெருமானாருடைய குணங்களைச் சிந்திக்ககில்லாத மனிசரோடு நான் ஸஹவாஸம் செய்ய மாட்டேன்; இந்நினைவு பிறந்தபின் இனி எனக்கு ஒரு குறையுமில்லை என்றாராயிற்று.

முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டுள்ள சரிதையின் விரிவு பெரியாழ்வார் வைபவத்திற் காணத்தக்கது. (15)

~~*~*~*~*~*~*~*~*

16. தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலைமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள் வந்தளித்தவன்காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுசனென்னும் மாமுனியே (16)

அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையை	ஸ்ரீரங்கநாதனுடைய திருமுடியிலே சாத்தக்கடவதான பூமாலையை
சூடிக்கொடுத்தவள்	தனது திருக் குழலிலே அணிந்து வாஸிதமாக்கிக் கொடுத்தவளான ஆண்டாளுடைய
தொல் அருளால் வாழ்கின்ற வள்ளல்	அவ்யாஜமான அருளாலே வாழ்பவரும் உதாரருமான
இராமாநுசன் என்னும் மாமுனி	ஸ்ரீ ராமாநுச முனியானவர் (எப்படிப் பட்டவரென்றால்)
தாழ்வு ஒன்று இல்லா மறை	ஒரு குறையுமில்லாதிருந்த வேதமானது
தாழ்ந்து	(குத்ருஷ்டிகளாலே) இழிவு பெற
தலம் முழுதும்	பூமியெங்கும்
கலியே ஆள்கின்ற நாள்	கலியே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே
வந்து	இங்கே வந்தவதரித்து
அளித்தவன் காண்மின்	அந்த வேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை ரக்ஷித்தருளினவர்

* * * ப்ராமாணங்களிற் சிறந்து உத்துங்கமாயிருந்த வேதமானது பாஹ்ய குத்ருஷ்டிகளால் தாழ்வு பெற்றுக் கலிபுருஷனே செங்கோல் செலுத்திக் கிடந்த காலத்திலே வந்து திருவவதரித்தருளி அக்கலியைக் கெடுத்து வேதத்தை நிலைநிறுத்தின மஹாநுபவர் காண்மின் எம்பெருமானார்.

அரங்கர்மௌலி சூழ்கின்ற மாலையைச்சூடிக்கொடுத்த வரலாறு ஆண்டாள் வைபவத்திற் காணத்தக்கது, சூடிக்கொடுத்த நாச்சியாருடைய பரமக்ருபைக்குப் பாத்ரபூதர் எம்பெருமானார் என்றதாயிற்றுப் பின்னடிகளால் (16)

~~*~*~*~*~*~*~*~*

17. முனியார் துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினுங்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானை * கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகி
லினியானை * எங்களிராமாநுசனை வந்தெய்தினரே. (17)

கலை பரவும் தனி ஆனையை	ஸகல சாஸ்த்ரங்களாலும் துதிக்கப் பெற்ற அத்விதீயமான மத்த கஜம்போன்ற
கண்ண மங்கை நின்றானை	திருக்கண்ண மங்கையிலே நிற்கும் பத்தாரவிப் பெருமாளைக் குறித்து
உலகில்	இவ்வுலகில்
தண் தமிழ் செய்த	ஸம்ஸார தாபஹரமான திவ்ய ப்ரபந்தத்தைச் செய்தருளின
நீலன் தனக்கு	திருமங்கையாழ்வார் பக்கல்
இனியானை	ப்ரேம முடியவராய்
எங்கள்	எங்களுக்குத் தலைவரான
இராமாநுசனை	எம்பெருமானாரை
வந்து எய்தினர்	வந்து பணிந்த மஹான்கள்
துயரங்கள் முந்திலும் முனியார்	தாபத்ரயம் செறிந்தாலும் வருத்தப்பட மாட்டார்கள்
இன்பங்கள் மொய்த்திடினும் மனம் கனியார்	ஸுகங்கள் செறிந்தாலும் களிப்படைய மாட்டார்கள்

* * * ஸகல சாஸ்த்ரப்ரதிபாத்யனான எம்பெருமானைத் தம்முடைய திவ்யப்ரபந்தங்களிலே அமைத்துப் பாடின திருமங்கையாழ்வார்க்கு அந்தரங்க பக்தரான எம்பெருமானாரை ஆச்ரயித்த மாஹானகள் ஸுகதுக்கங்கள் மேலிடுங்காலத்தில் மற்ற ஸம்ஸாரிகளைப்போல் ஹர்ஷ சோகங்களையடையாமல் எவ்வித விகாரமும் அற்றிருப்பர்கள்; நீங்களும் ஹர்ஷ சோகங்களில் கலங்கவேண்டா என்றபடி.

கண்ண மங்கை நின்றானை – திருக்கண்ண மங்கையைச் சொன்னது மற்றுள்ள எல்லாத் திருப்பதிகட்கும் உபலக்ஷணம். பல திருப்பதிகளிலும் புக்குக் கவிபாடின கலியன் என்றபடி. நீலன் – திருமங்கையாழ்வாருடைய திருநாமங்களில் ஒன்று. (17)

~~*~*~*~*~*~*~*

18. எய்தற்கரியமறைகளை * ஆயிரமின் தமிழால்
செய்தற்குலகில்வருஞ் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரை யுயிர்களெல்லாம்
உய்தற்குதவும் * இராமாநுசனெம்முறு துணையே (18)

எய்தற்கு அரிய மறைகளை	அதிகரிக்க முடியாத (அளவற்ற) வேதங்களை
இன் தமிழ் ஆயிரத்தால்	இனிய தமிழாலாகிய ஆயிரம் பாசுரங்களினால்
செய்தற்கு	அருளிச்செய்வதற்காக
உலகில் வரும்	இவ்வுலகில் வந்துதித்த
சடகோபனை	நம்மாழ்வாரை
சிந்தை உள்ளே	தமது ஹ்ருதயத்தினுள்ளே

பெய்தற்கு இசையும்	த்யானிப்பதற்கு இணங்கின
பெரியவர்	ஸ்ரீ மதுரகவிகளுடைய
சீரை	ஜ்ஞாநாதி குணங்களை
உயிர்கள் எல்லாம் உய்தற்கு உதவும்	ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்குமாறு உபகரித்தருளாநிற்கிற
இராமாநுசன்	எம்பெருமானார்
எம் உறு துணை	எமக்கு உற்ற துணை

* * * வேதந் தமிழ்செய்த மாறன் சடகோபனையே வாழ்த்தும் ஸ்ரீமதுரகவிகளின் பக்தரான எம்பெருமானார் நமக்கு உற்றதுணை யென்றாராயிற்று. இப்பாட்டில், ஸ்ரீமதுரகவிகள் பெரியவர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டமை நோக்கத்தக்கது. "புவியு மிருவிசும்பும் நின்னகத்த, நீ யென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் அவிவின்றி, யான் பெரியவன் நீ பெரியை யென்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாயுள்ளு" [பெரிய திருவந்தாதி] என்று பெரிதான பரப்ரஹ்மத்தை உள்ளடக்கின பெரியவரையும் [நம்மாழ்வாரையும்] உள்ளடக்கின பெரியவரிறே மதுரகவிகள். (18)

~~*~*~*~*~*~*~*

19. உறுபெருஞ்செல்வமுந் தந்தையுந்தாயும் * உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும் * மாறன்விளங்கியசீர்
நெறிதருஞ்செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோர்
ஆறிதரநின்ற * இராமாநுசனெனக்காரமுதே (19)

உறு பெறு செல்வமும்	சிறந்த பெரிய ஸம்பத்தும்
தந்தையும் தாயும்	மாத பிதாக்களும்
உயர் குருவும்	ஸதாசார்யனும்
வெறி தரு பூமகள் நாதனும்	மணம் மிக்க பூவை பிறப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருக்குக் கொழுநனான ஸர்வேச்வரனும் (ஆகிய எல்லாம்)
மாறன் விளங்கிய சீர் நெறி தரும் செம்தமிழ் ஆரணமே என்று	நம்மாழ்வார் (தமக்கு) ப்ரகாசித்த பகவத் குணங்களின் அடைவே அருளிச் செய்த செந்தமிழ் வேதமேயென்று
இ நீள் நிலத்தோர் அறிதர நின்ற	இப்பெரிய வுலகிலுள்ளார் யாவரும் அறியும்படி நின்ற
இராமாநுசன்	எம்பெருமானார்
எனக்கு	அடியேனுக்கு
ஆர் அமுது	பரம போக்யர்.

* * * "நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழிதான் நமக்கு ஸர்வஸ்வம்" என்கிற அத்யவஸாயமுடைய உடையவர் திறத்து அடியேன் அநந்ய போக்யத்வ புத்தியையுடையேன் என்றாராயிற்று.

மாறன் விளங்கிய சீர்நெறிதரும் செந்தமிழாரணம் – திருவாய்மொழியில் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திவ்யகுணத்தை வெளியிட்டிருக்கிறார்; அது வெளியிட்டவாறு என்னென்னில்,

எம்பெருமான் ஆழ்வார்க்கு எந்த க்ரமமாகக் குணங்களை அநுபவிப்பித்தானோ அந்த க்ரமமாகவே இவர் வெளியிட்டாரென்க. (19)

~~*~*~*~*~*~*~*

20. ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத்திருவாய்
ஈரத்தமிழி னிசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தஞ்
சீரைப்பயின் றுய்யுஞ்சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசனென்றன் மாநிதியே. (20)

ஆரம் பொழில்	சந்தன சோலைகளையுடைய
தென் குருகை	அழகிய திருக்குருகூரிலே (அவதரித்த)
பிரான்	மஹோபகாரகரான ஆழ்வாருடைய
அமுதம் திருவாய்	பரம போக்யமான திருப்பவளத்தில் பிறந்த
ஈரம் தமிழின் இசை	ஈரச்சொல்லாகிய திருவாய்மொழியின் இசையை
உணர்ந்தோர்கட்கு	அறிந்தவர்களுக்கு
இனியவர் தம்	இஷ்டராயிருப்பவர்களுடைய
சீரை	குணங்களை
பயின்று	அப்யஸித்து
உய்யும் சீலம் கொள்	ஸத்தை பெறும் சீலத்தையுடையரான
நாதமுனியை	நாதமுனிகளை
நெஞ்சால்	தம் திருவுள்ளத்தாலே
வாரி பருகும்	அபிநிவேசத்தோடு அனுபவிக்கின்ற
இராமாநுசன்	எம்பெருமானார்
என் தன் மா நிதி	எனக்கு அக்ஷயமான நிதி

~~*~*~*~*~*~*~*

21. நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர் தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகிற் றுவள்கின்றிலேனினி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவ னிணையடியாம்
கதிபெற்றுடைய * இராமாநுசனென்னைக்காத்தனே. (21)

தூய் நெறி சேர் எதிகட்கு	பரிசுத்தமான அனுட்டானமுடைய யதிகளுக்கு
இறைவன்	தலைவரான
யமுனைத் துறைவன்	ஆளவந்தாருடைய
இணை அடி ஆம் கதி	உபய பாதங்களாகிற ப்ராப்யத்தை
பெற்று	பெற்று (அதனாலே)
உடைய	உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற
இராமாநுசன்	எம்பெருமானார்
என்னைக் காத்தனன்	என்னை ரக்ஷித் தருளினார் (ஆன பின்பு)

இனி	இனிமேல்
நீதியை பொழியும் முகில் என்று	"நிதிகளை வைஷிக்கிற மேகமே" என்று
துதி கற்று	ஸ்தோத்ரங்களைப் பண்ணிக் கொண்டு
உலகில்	இவ்வுலகத்தில்
நீசர் தம்	நீசராயிருப்பவருடைய
வாசல் பற்றி	வாசலைப்பற்றி நின்று
துவள்கின்றிலேன்	வருந்தமாட்டேன்

* * * நேற்றுவரையிலும் நான் கண்டபேர்களுடைய வாசற் கடைகளிலும் போய் நின்று வாயைக்காட்டி வயிற்றைக்காட்டி "மாஹாநிதிகளைப் பொழிகின்ற மேகமே!" என்று பொய்யான நரஸ்துதிகளைச் செய்து துவண்டேன். இன்று முதல் எந்நாளும் இனி நான் அவ்வாறு துவள மாட்டேன். ஒரு நீசனுடைய வாசலையும் பற்றமாட்டேன். இன்று நான் எம்பெருமானாருடைய ஸம்ரக்ஷணைக்கு ஆளாய்விட்டேன். அவரோ, எதிகளுக்குத் தலைவரான ஆளவந்தாருடைய ஸம்ரக்ஷணையைப் பெற்று உய்ந்தவர். அன்னவராலே ஸம்ரக்ஷிக்கப் பெற்றேனானபின்பு இனி நான் ஏதுக்காக ஒரு நீசன் வாசலைப் பற்றித்துவளவேண்டும்! துவள்கின்றிலேனினி. (21)

~~*~*~*~*~*~*~*~*

22. கார்த்திகையானுங் கரிமுகத்தானும் * கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும்வெப்பும்முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனேயென்று போற்றிட வாணன்பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும் * இராமாநுசனென்றன்சேமவைப்பே. (22)

கார்த்திகையானும்	ஸுப்ரஹ்மண்யனும்
கரிமுகத்தானும்	கணபதியும்
கனலும்	(அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்நியும்
முக்கண் மூர்த்தியும்	சிவனும்
மோடியும்	துர்க்கையும்
வெப்பும்	ஜ்வரதேவதையும்
முதுகு இட்டு	முதுகுகாட்டி ஓடிப்போன பின்பு (அநந்யகதியான பாணாஸுரனானவன்)
மூ உலகும் பூத்தவனே	"மூன்று உலகங்களையும் திருநாபிக்கமலத்திலே உண்டாக்கின பெருமானே!"
என்று போற்றிட	(என்னைக் காத்தருள் என்று போற்ற)
வாணன் பிழை பொறுத்த	(அந்த) பாணாஸுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின
தீர்த்தனை	பாவநனான ஸர்வேச்வரனை
ஏத்தும்	நித்யம் துதிக்கின்ற
இராமாநுசன்	எம்பெருமானார்
என் தன் சேம வைப்பு	எனக்கு ஆபத்தநம்

* * * [ஐச்வர்யம் சங்கராதிச்சேத்; ஆரோக்யம் பாஸ்கராத் ததா; சிவன் பக்கல் செல்வம் பெற விரும்பவேண்டும்; ஸுர்யன் பக்கல் ஆரோக்யம் பெற விரும்ப வேண்டும்] என்று ஸாமாந்யமாகச் சிலர் சொல்லுவதுண்டே; அதனைக் கொண்டு ஒருவன் அமுதனாரை நோக்கி "ஓய்! நீர் எம்பெருமானாரைப் பற்றினால் உம்முடைய தாரித்ரியம்

நீங்குமோ? சிவனைப் பற்றினாலன்றோ செல்வம் மிகும்" என்று கூற, அந்தச் சிவன் பட்ட பரிபவங்களை விளக்கும் ஒரு இதிஹாஸத்தைப் பரக்கப்பேசிக் கொண்டு, "எம்பெருமானார்தாம் தமக்கு ஆபத்தனம்" என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை உறுத்திக் கூறுகின்றார் இதில். (22)

~~*~*~*~*~*~*~*~*

23. வைப்பாய வான்பொருளென்று * நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும் வைக்குமிராமாநுசனை * இருநிலத்தில்
ஒப்பாரிலாத உறுவினையேன் வஞ்சநெஞ்சில்வைத்து
முப்போதும்வாழ்த்துவன் * என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே? (23)

நல் அன்பர்	விலக்ஷண பக்தியுடையவர்கள்
வைப்பு ஆய வான் பொருள் என்று	"எம்பெருமானார் தாம் நமக்கு ஆபத் ரக்ஷகமான அக்ஷயதநம்" என்று கொண்டு
மனத்தகத்தே	தங்கள் ஹ்ருதயத்திலே
எப்போதும் வைக்கும்	எப்போதும் த்யாநிப்பதற்கு விஷயமான
இராமாநுசனை	எம்பெருமானாரை
இரு நிலத்தில்	இந்தப்பெரிய வுலகத்திலே
ஒப்பார் இலாத உறு வினையேன்	ஒப்பற்ற மஹாபாபியான அடியேன்
வஞ்சம் நெஞ்சில் வைத்து	என்னுடைய க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து
முப்போதும் வாழ்த்துவன்	ஸர்வ காலமும் ஏத்தா நின்றேன்
இது	மிகப்பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது
அவன்	அவ்வெம்பெருமானாருடைய
மொய் புகழ்க்கு	சிறந்த கீர்த்திக்கு
என் ஆம்	என்னாகுமோ? [அவத்யமாமே!]

* * * "வளவேழுலகின் முதலாய" என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் நைச்யாநு ஸந்தானம் பண்ணியதுபோல, இப்பாட்டில் இவ்வமுதனாரும் நைச்யாநுஸந்தானம் பண்ணுகிறார். (23)

~~*~*~*~*~*~*~*~*

24. மொய்த்தவெந்தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து * அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம் * இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து * இராமாநுச னென்னும் கார்தன்னையே. (24)

முன நாள்கள் எல்லாம்	கீழ்கழிந்த அநாதிகால மெல்லாம்
பல் உடல் தொறும்	பலபல சரீரங்கள் தோறும்
மொய்த்த வெம் தீவினையால் மூத்து	ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதி க்ரூரமான கர்மத்தாலே கிழித்தனம் வருமளவும் வாஸஞ்செய்து

அதனால்	அத்தாலே
எய்த்து ஒழிந்தேன்	மிக்க பரிதாபமடைந்தேன்
பொய் தவம் போற்றும் புலைச் சமயங்கள்	கபடமான அநுஷ்டாநங்களை நடத்திப் போருகிற நீச மதஸ்தர்கள்
நிலத்து அவிய	இந்நில வுலகத்திலே வேரற்றொழியும்படி
கைத்த	நிரஸித்தருளின
மெய் ஞானத்து	உண்மை ஞானமுடையரான
இராமாநுசன் என்னும் கார் தன்னை	எம்பெருமானாகிற காள மேகத்தை
இன்று கண்டு	இன்று அடியேன் ஸேவிக்கப் பெற்று
உயர்ந்தேன்	சிறந்தவனானேன்.

* * * நெடுநாளாக ஸம்ஸாரத்திலிருந்து பலபல கருமங்களைப்பண்ணி, அக்கருமங்களின் பலனாகப் பலபல பிறவிகளிற் பிறந்து படாதனபட்டு இப்படியாகவே அநேக பர்யாயம் அவஸந்நனாய்க் கிடந்தேன் நான். இப்பொழுது, பரம உதாரரான எம்பெருமானார் இப்பூமியிலவதரித்துப் பல துர்மதங்களை வேரறுத்தொழித்ததுபோல எனது கருமங்களையும் வேரறுத்துத் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே தம்மைக் காட்டியருளக் கண்டு கிருதார்த்தனானேனென்கிறார்.

பொய்த்தவம் போற்றும் புலைச்சமயங்கள் – ராவண ஸம்ந்யாஸம், காலநேமிஜபம் முதலியவைபோலே மதாந்தரஸ்தர்கள் க்ருத்ரிமமான ஆசாரங்களை அனுட்டிப்பார்களென்க. மெய்ஞானத்திராமாநுசன் – "யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்" என்று ஸ்தாபித்தருளினவர் எம்பெருமானார். (24)

~~*~*~*~*~*~*~*~*

25. காரேய் கருணையிராமாநுச * இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை * அல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான்வந்துநீயென்னை யுற்றபினுன்
சீரே யுயிர்க்குயிராய்* அடியேற்கின்று தித்திக்குமே. (25)

கார் ஏய் கருணை இராமாநுச!	மேகத்தையொத்த கருணையையுடைய எம்பெருமானாரே!
நான்	அடியேன்
அல்லலுக்கு நேரே உறைவு இடம்	துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமா யிருப்பவன்;
என்னை	இப்படிப்பட்ட அடியேனை
நீ வந்து உற்ற பின்	தேவரீர் தாமாகவே ஸ்வீகரித்தருளின பின்பு
உன்சீரே	தேவரீருடைய கல்யாண குணங்களே
உயிர்க்கு உயிர் ஆய்	ஆத்மாவுக்கு தாரகமாய்
அடியேற்கு	அடியேனுக்கு
இன்று தித்திக்கும்	இன்று ரஸியா நின்றது
நின் அருளின் தன்மை	தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை

இ கடல் இடத்தில்	கடல் சூழ்ந்த இப் பூமண்டலத்தில்
ஆரே அறிபவர்	அறியக்கூடியவர்கள் ஆருமில்லை

* * * ஜலஸ்தலவிபாகம் பாராமல் ஸர்வத்ர ஸமமாக வர்ஷிக்கின்ற மேகம்போலே, தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வாசிபாராமல் எல்லார்திறத்தும் அருள்புரிகின்ற எம்பெருமானாரே! மிகக்கொடிய துக்கங்களுக்கெல்லாம் இருப்பிடமான என்னை தேவரீர் தாமே வந்து விஷயீகரித்த பின்பு தேவரீருடைய திருக்கல்யாண குணங்களே எனக்குப் பரமயோக்யமாய் ஆத்ம தாரகமுமாய்விட்டது. தேவரீர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்னுமிடத்தை இவ்வுலகில் உள்ளபடியே ஒருவருமறியார்கள். (25)

~~*~*~*~*~*~*~*~*

26. திக்குற்றகீர்த்தி யிராமாநுசனை * என் செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை * மேவும்நல்லோர்
எக்குற்றவாள ரெதுபிறப் பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்பு * அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே. (26)

என் செய்வினை ஆம்	என்னாலே செய்யப்பட்ட வினையாகிற
மெய் குற்றம் நீக்கி	நிலைநின்ற தோஷங்களைப்போக்கி
விளங்கிய	(இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோமென்னும் மகிழ்ச்சியாலே) உஜ்வலரான
மேகத்தை	பரம உதாரராய்
திக்கு உற்ற கீர்த்தி	திசைகள் தோறும் விரிந்த புகழையுடையரான
இராமாநுசனை	எம்பெருமானாரை
மேவும்	பொருந்தியிருக்கின்ற
நல்லோர்	விலக்ஷணர்கள்
எக் குற்றவாளர்	யாதொரு குற்றத்தையுடையராகவும்
எது பிறப்பு	யாதொரு ஜன்மத்தையுடையராகவும்
எது இயல்வு ஆக	யாதொரு சரிதையை யுடையவராகவும்
நின்றோர்	முன்பு நின்றார்களோ
அக்குற்றம்	அந்தக் குற்றம்
அப்பிறப்பு	அந்த ஜன்மமும்
அது இயல்வே	அந்த சரிதையுமே
நம்மை	நம்மை
ஆள் கொள்ளும்	அடிமைப்படுத்திக் கொள்ளவற்று.

* * * ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய ஜாதி முதலியவை ஏதாயினும் அவர்களெல்லாரும் அப்படியே நமக்கு உத்தேச்யர்கள் என்று காட்டியவாறு. (26)

~~*~*~*~*~*~*~*~*

27. கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்துவிட் டோங்கியவுன்
வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம் நீபுகுந்தாய் *
வெள்ளைச் சுடர்விடுமுன் பெருமேன்மைக் கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமாநுசவென் தனி நெஞ்சமே. (27)

இராமாநுச	எம்பெருமானாரே!
கொள்ள குறைவு அற்ற	கொள்ளக் கொள்ளக் குறையாமல் தானே விளங்கி
இலங்கி	
கொழுந்துவிட்டு ஓங்கிய	மேன்மேலும் இளகிப்பதித்து வளர்ந்திருப்பதான
உன் வள்ளல் தனத்தினால்	தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே
வல்வினையேன் மனம்	மஹாபாபியான எனது நெஞ்சிலே
நீ புகுந்தாய்	(தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று;
இது	(வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந்தாற்போலே) புகுந்த விது,
வெள்ளை	பரிசுத்தமாய்
சுடர் விடும்	விளங்காநின்றுள்ள
உன் பெருமேன்மைக்கு	தேவரீருடைய ப்ரபாவத்திற்கு
இழுக்கு என்று	அத்யாவஹம் என்று
என் தனி நெஞ்சம்	எனது துணையற்ற நெஞ்சானது
தள்ளூற்று இரங்கும்	தளர்ந்து ஈடுபடா நின்றது.

* * * ஸ்வாமிந்! தேவரீருடைய பெருமையையும் அடியேனுடைய சிறுமையையும் சிறிதும் பாராமல் “இவன் நம் அடியார் விஷயத்திலே சபலனாயிருப்பானொருவன்” என்கிற இவ்வளவையேகொண்டு பாபிஷ்டமான என் ஹ்ருதயத்திலே தேவரீர் புகுந்தருளிற்று; வஸிஷ்டன் சண்டாளர் மனையிற் புகுந்தாற்போல் தேவரீர் என் நெஞ்சில் புகுந்தவிது, தேவரீருடைய பரிசுத்தமாய் விளங்கும் மஹிமைக்கு என்ன அவத்யத்தை விளைத்திடுமோவென்று அஞ்சாநின்றேன். (27)

~~*~*~*~*~*~*~*~*

28. நெஞ்சில்கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய விராமாநுசன் புகழின்றி யென்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்னவாழ்வின்று கூடியதே (28)

நெஞ்சில் கறைகொண்ட	செஞ்சிலே கல்மஷத்தை யுடையனாயிருந்த கம்ஸனை
கஞ்சனை	
காய்ந்த	முடித்த
நிமலன்	ஹேயப்ரத்யநீகனாய்
நங்கள் பஞ்சித் திருவடி	ஆச்ரிதர் பக்கல் அபிமானமுடையளாய் பஞ்சு போல் மெல்லிய
	திருவடிகளையுடையளான
பின்னை தன் காதலன்	நப்பின்னை பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய

பாதம் நண்ணா	திருவடிகளை ஆச்ரயியாத
வஞ்சர்க்கு	ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு
அரிய	துர்லபரான
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
புகழ் அன்றி	குணங்களை யொழிய (மற்றொன்றை)
என் வாய்	என் வாக்கானது
கொஞ்சி பரவகில்லாது	குலாவி ஏத்தமாட்டாது
இன்று கூடியது வாழ்வு	இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது
என்ன	ஆச்சர்யமானது

* * * நேற்றுவரை அபதார்த்தமாய்க் கிடந்த அடியேன் இன்று ஸத்தை பெற்று வாழ்ந்த அதிசயம் சொல்லி முடியுமோ? இன்று உமக்குவந்த அதிசயம் என்னவென்று கேட்கிறீர்களோ? எம்பெருமானாருடைய குண கீர்த்தநத்தில் நேற்றுவரை உதாஸீகமாய்க் கிடந்த என் வாயானது இன்று அவருடைய திவ்ய கீர்த்திகளையன்றி வேறொன்றையும் அநுசந்திக்கமாட்டேனென்று அதுதன்னிலே ஊன்றிக்கிடக்கிறதே, இதைவிட அதிசயமுண்டோ? என்கிறார். (28)

~~*~*~*~*~*~*~*~*

29. கூட்டும் விதியென்று கூடுங்கொலோ? * தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னைத் * தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த விராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோ
ரீட்டங்கள்தன்னை * என்நாட்டங்கள் கண்டின்ப மேய்திடவே. (29)

தென் குருகை பிரான்	நம்மாழ்வாருடைய
பாட்டு என்னும்	பாசுரங்கள் என்று ப்ரஸித்தமாய்
வேதம்	வேதரூபமாய்
பசும் தமிழ் தன்னை	செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை
தன் பத்தி என்னும் வீட்டின் கண் வைத்த	தம்முடைய பக்தியாகிற மாளிகையிலே ஸ்தாபித்தருளிய
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
புகழ்	கல்யாண குணங்களை
மெய் உணர்ந்தோர்	உள்ளபடி அறிந்திருக்குமவர்களுக்கு
ஈட்டங்கள் தன்னை	கோஷ்டிகளை
என் நாட்டங்கள் கண்டு	என் கண்களானவை ஸேவித்து
இன்பம் எய்திட	ஸுகிக்கும்படியாக
கூட்டும் விதி	அமைக்கவல்ல (அவருடைய) க்ருபையானது
என்று கூடுங்கொல்	என்றைக்கு வாய்க்குமோ?

* * * நம்மாழ்வாரருளிச்செய்த தமிழ் வேதத்தைப் பத்தியுடன் பரவும் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை உள்ளபடி உணர்ந்து ஈடுபட்டிருக்கும் மஹான்களுடைய கோஷ்டிகளை அடியேன் ஸேவித்து ஆநந்திக்கும்படியான பாக்கியம் என்றைக்கு வாய்க்குமோ என்கிறார்.

தன்பத்தி யென்னும் வீட்டின்கண் வைத்த – விலையுயர்ந்த மாணிக்கத்தைச் செப்பிலே வைத்துக்கொண்டிருப்பாரைப்போலே அநர்க்கமான அருளிச்செயலைத் தம்முடிய பக்தியாகிற உயர்ந்த மாளிகையிலே வைத்துப் பேணிக்கொண்டிராநின்ற உடையவர் என்றபடி. நாட்டம் – கண். (29)

~~*~*~*~*~*~*~*

30. இன்பந்தருபெருவீடுவந் தெய்திலேன்? * எண்ணிறந்த
துன்பந்தரு நிரயம்பல சூழிலேன்? * தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட் கிறைவன் மாயனென மொழிந்த
அன்பனனகன் * இராமாநுசனென்னை யாண்டனனே. (30)

தொல் உலகில்	அனாதியான இவ்வுலகத்தில்
மன் பல் உயிர்கட்கு	நித்யரான எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷியானவன் விஷ்ணுவே
இறைவன் மாயன்	
என மொழிந்த	என்று (ஸ்ரீபாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த
அன்பன்	பரமகாருணிகராய்
அனகன்	நிர்தோஷரான
இராமாநுசன்	எம்பெருமானார்
என்னை ஆண்டனன்	என்னை அடிமை கொண்டருளினார்
	(ஆனபின்பு)
இன்பம் தரு பெரு வீடு	ஆநந்தாவஹமான மோக்ஷம்
வந்து எய்தில் என்	வந்து ஸித்தித்தாலென்ன
எண் இறந்த துன்பம் தரு பல நிரயம் சூழில் என்	அளவற்ற துக்கங்களைத் தருகிற பல நரகங்கள் வந்து சூழ்ந்துகொண்டால் தான் என்ன?

* * * எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளப் பெற்ற பின்பு எனக்கு மோக்ஷம் கிடைத்தாலென்ன? பலபல நரகங்கள் தான் நேர்ந்தாலென்ன? எனக்கு எது பரம ப்ராப்யமோ அது கிடைத்து விட்டது! என்று சரக்கறப் பேசுகிறார்.

நிரயம் – வட சொல். அனகன் – வடசொல். விகாரம் – ஹேய ப்ரதிபடர் என்றபடி. (30)

~~*~*~*~*~*~*~*

31. ஆண்டுகள்நாள் திங்களாய் * நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டுபல்யோனிகள் தோறுழல்வோம் * இன்றோரெண்ணின்றியே
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூர் கழலிணைக்கீழ்ப்
பூண்டவன் பாளன் * இராமாநுசனைப் பொருந்தினமே. (31)

மனமே	நெஞ்சே!

நாள் ஆய்	நாள்களாகவும்
திங்கள் ஆய்	மாதங்களாகவும்
ஆண்டுகள் ஆய்	ஆண்டுகளாகவும்
	(இப்படி)
நிகழ்காலம் எல்லாம்	நடந்து செல்லுகிற ஸர்வ காலங்களிலும்
ஈண்டு பல் யோனிகள் தோறு	திரண்டு பலவகைப்பட்ட யோனிகள் தோறும்
உழல்வோம்	தட்டித் திரிந்த நாம்
இன்று ஓர் எண் இன்றியே	இன்று ஒரு நினைவுமில்லாதிருக்கட்செய்தே (அகஸ்மாத்தாக)
காண் தரு தோள் அண்ணல் தென் அத்தியூர் கழல் இணைக்கீழ் பூண்ட அன்பு ஆளன் இராமாநுசனைப் பொருந்தினம்	கண்ணாரக் காணத்தக்க தோள்களையுடைய ஸ்வாமியான பேரருளாளனுடைய திருவடிகளில் அன்பு பூண்ட எம்பெருமானாரைச் சேரப்பெற்றோம். (என்ன பாக்கியம்!)

* * * நெஞ்சே! இன்றளவும் நமக்கு கழிந்த காலங்கள் கணக்கிடமுடியா. வருஷக்கணக்காகவும், மாதக்கணக்காகவும், நாட்கணக்காகவும் கழிந்து செல்லுகின்ற காலமெல்லாம் மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து தடுமாறித் திரிந்த நாம் இன்று ஒரு நினைவின்றியே அகஸ்மாத்தாக எம்பெருமானாரை அடிபணியப் பெற்றோமே! நம்முடைய அத்ருஷ்டம் எப்படிப்பட்டது! கண்டாயே! என்று தம் திருவுள்ளத்தோடே உசாவுகின்றார். (31)

~~*~*~*~*~*~*~*

32. பொருந்தியதேசும் பொறையுந்திறலும் புகழும் * நல்ல
திருந்தியஞானமுஞ் செல்வமுஞ்சேரும் * செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் * எங்களிராமாநுசனை யடைபவர்க்கே. (32)

செறு கலியால்	தரும நெறியைத் திரஸ்கரிக்கின்ற கலியினாலே
வருந்திய	துக்கப்பட்ட
ஞாலத்தை	பூமியை
வண்மையினால் வந்து எடுத்து அளித்த	தமது நிர்ஹேதுக க்ருபையாலே வந்து உத்தரித்து ரக்ஷித்தவரும்
அரும் தவன்	சரணாகதியென்ற அரிய தபஸ்ஸை அநுஷ்டித்தவரும்
எங்கள்	எமக்கு ஸ்வாமியான
இராமாநுசனை	எம்பெருமானாரை
அடைபவர்க்கு	ஆச்ரயிக்குமவர்களுக்கு
பொருந்திய தேசும்	ஸ்வரூபானு ரூபமான தேஜஸ்ஸும்
பொறையும்	க்ஷமா குணமும்
திறலும்	ஜிதேந்த்ரியத்வமாகிற பலமும்
புகழும்	கீர்த்தியும்

நல்ல திருந்திய ஞானமும்	பரம விலக்ஷணமான அறிவும்
செல்வமும்	பக்தியாகிற ஸம்பத்தும்
சேரும்	தானே வந்துசேரும்

~~*~*~*~*~*~*~*~*

33. அடையார்கமலத் தலர்மகள் கேள்வன் * கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும் * ஒண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமுமிந்தப்பூதலம் காப்பதற்கென்று
இடையே யிராமாநுசமுனியாயின விந்நிலத்தே (33)

அடை ஆர் கமலத்து அலை மகள் கேள்வன்	தளங்கள் நெருங்கிய தாமரைப்பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார்க்கு வல்லபனான எம்பெருமானுடைய
கை	திருக்கையிலே (விளங்காநின்ற)
ஆழி என்னும் படையோடு	திருவாழியென்கின்ற திவ்யாயுதத்தோடே
நாந்தகமும்	நந்தக வாளும்
படர் தண்டும்	ரக்ஷணத்தொழிலிலே பரந்திராநின்ற கதையும்
ஒண் சார்ங்கம் வில்லும்	அழகிய ஸ்ரீ சார்ங்கமென்கிற வில்லும்
புடை ஆர் புரி சங்கமும்	ஒருபக்கத்துக்குத்தானே ஆபரணமாகப் போரும்படியான அழகிய ஸ்ரீ பாஞ்சஜந்யமும் (ஆக இப் பஞ்சாயுதாழ்வார்கள்)
இந்த பூதலம் காப்பதற்கு என்று	இந்த பூமியை ரக்ஷிக்கைக்காக
இந்நிலத்து	இப்பூமண்டலத்திலே
இராமாநுச முனி இடையே ஆயின	எம்பெருமானார் பக்கலில் ஆயினர்

* * * ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களும் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலேவந்து குடிகொண்டனர் என்கிறார் இப்பாட்டில்.

“அடையார் + புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இந்நிலத்தே இராமானுச முனியிடையே ஆயின” என்று அந்வயித்தவாறு. ஸ்ரீபஞ்சாயுதாழ்வார்கள் இவர்பக்கலிலே ஆகையாவது – இவருடைய நினைவைக் கடாக்ஷித்துநின்று இவர் அதிகரித்த காரியத்திற்குத் துணை செய்கையாம். அம்பரீஷனுக்குத் திருவாழியாழ்வான் ஸஹகரித்ததுபோல.

இப்பாட்டை மற்றொரு வகையாகவும் அந்வயிக்க இடமுண்டு: “அடையார் + புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இந்நிலத்திடையே இராமாநுசமுனியாயின” என்று. இப்பக்ஷத்தில் ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களே இந்நிலவுலகைக் காக்க எம்பெருமானாராக வந்து திருவவதரித்தார்களென்றாகிறது.

இப்பாட்டினால், எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களுடைய திருவவதாரமென்று விளங்கா நின்றமையால், திருவனந்தாழ்வானுடைய அவதாரமென்று சொல்லுவது எங்கனே? என்று சங்கிக்குமவர்கள் நமது சேஷாவதாரச் சிறப்பு நூல் காண்க. (33)

~~*~*~*~*~*~*~*~*

34. நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை * நினைப்பரிய
பெலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை* என்பெய்வினைதென்
புலத்தில் பொறித்து வப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது * இராமாநுசன் தன் நயப்புகழே. (34)

இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
நயம் புகழ்	கல்யாணகுணங்களானவை
நிலத்தை செறுத்து	பூலோகத்தை ஹிம்ஸித்துத் தின்கிற நீசனான கலிபுருஷனுடைய
உண்ணும் நீசம் கலியை	
நினைப்பு அரிய பெலத்தை	இவ்வளவென்று நினைக்கமுடியாதபடி அளவற்றதான பராக்ரமத்தை
செறுத்தும்	தொலைத்தவளவிலும்
பிறங்கியது இல்லை	பிரகாசிக்கவில்லை
	பின்னை எப்போது பிரகாசித்தன என்னில்
என் பெய் வினை	என்னாலே செய்யப்பட்ட பாவங்களை
தென் புலத்தில்	யம லோகத்தில்
பொறித்த	எழுதி வைத்த
அப் புத்தகம் சும்மை	அந்த புத்தகக் கட்டுகளை
பொறுக்கிய பின்	கொளுத்திவிட்ட பின்பு
நலத்தை பொறுத்தது	விளக்கம் பெற்றன.

* * * எம்பெருமானாருடைய ஞானம், சக்தி முதலிய திருக்கல்யாண குணங்கள் எப்போது பிரகாசித்தனவென்றால், இந்நிலவுலகத்தில் கலிபுருஷன் செங்கோல் செலுத்த முடியாதபடி அவனுடைய வலிமையைத் தொலைத்துக் கிருதயுக தர்மமே எங்கும் நடைபெறும்படி செய்தருளினவாறே. “இவர் மஹா புருஷர்; அரிய பெரிய ஞான சக்திகளையுடையவர்” என்று உலகத்தாரனைவரும் போற்ற நேர்ந்ததனால் கலியின் கொடுமையைக் கெடுத்தது காரணமாகவே இவருடைய திருக்கல்யாண குணங்கள் நன்றாக விளங்கின – என்பர் சிலர்; அது தகுதியல்ல; கலிதோஷத்தைப் போக்கினவளவிலும் எம்பெருமானாருடைய திருக்குணங்கள் பொலிவு பெறவில்லை. பின்னை எப்போது பொலிவு பெற்றனவென்றால், எனது அளவற்ற பாவங்களையெல்லாம் சித்ரகுப்தன் எழுதிவைத்திருந்த பெரிய புத்தகச் சுமையைக் கொளுத்திவிட்டு என்னை நிஷ்கல்மஷனாக்கி அடிமை கொண்டாரென்கிற விஷயம் வெளிவந்த பிறகுதான் அவருடைய திருக்குணங்கள் ஆச்சரியமாக விளங்கின என்கிறார். இதனால், தம்முடைய பாவங்கள் ஸர்வசக்த்தனாலும் போக்க முடியாதவை என்பதும், கலியின் கொடுமையிற் காட்டிலும் தமது கொடுமை வலிதாயிருந்ததென்பதும், இப்படி மஹா பாபிஷ்டராயிருந்த தம்மை க்ஷமித்தருளி உஜ்ஜீவிக்கச் செய்தமையைக்கண்டு உலகத்தாரனைவரும் ஆச்சரியப்பட்டார்களென்பதும் தெரிவிக்கப்பட்டன. (34)

~~*~*~*~*~*~*~*~*

35. நயவே னொருதெய்வம் நானிலத்தே * சிலமானிடத்தைப்
புயலே யெனக்கவி போற்றிசெய்யேன் * பொன்னரங்கமென்னில்
மயலேபெருகு மிராமாநுசன் மன்னு மாமலர்த்தா
ளயரேன் * அருவினையென்னை யெவ்வாறின் றடர்ப்பதுவே? (35)

ஒரு தெய்வம்	வேறொரு தெய்வத்தை
நயவேன்	விரும்பமாட்டேன்
நானிலத்தே	இவ்வுலகில்
சில மானிடத்தை	சில நீசமனிதர்களைக் குறித்து
புயலே என	மேகம் போல வர்ஷிக்கிற உதாரனே! என்று அதிவாதமாகச் சொல்லி
கவி போற்றி செய்யேன்	கவிகள் கட்டி ஸ்தோத்ரம் செய்ய மாட்டேன்
பொன் அரங்கம் என்னில்	திருவரங்கம் என்று சொன்னவாறே
மயல் பெருகும்	அளவற்ற வ்யாமோஹத்தை யடைகின்ற
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
மன்னு மா தாள் மலர்	பொருந்திய சிறந்த திருவடித் தாமரைகளை
அயரேன்	மறக்க மாட்டேன் (ஆன பின்பு)
அரு வினை	கொடிய பாவங்கள்
என்னை	என்னை
இன்று	இன்று முதலாக
எவ்வாறு அடர்ப்பது	எப்படி ஆக்ரமிக்கக் கூடும்?

~~*~*~*~*~*~*~*~*

36. அடல்கொண்டநேமிய னாருயிர்நாதன் * அன்றாரணச்சொற்
கடல்கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப * பின்னுங்காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானு மவ்வொண்பொருள் கொண்டவர் பின்
படருங்குணன் * எம்மிராமாநுசன்தன் படியிதுவே (36)

அடல் கொண்ட நேமியன்	(ஆச்ரித விரோதிகளை அழிக்கவல்ல) மிடுக்கையுடைய திருவாழியை ஏந்தினவனாய்
ஆர் உயிர் நாதன்	ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான்
அன்று	அர்ஜுநனுக்கு ஸாரதியாயிருந்த வக்காலத்தில்
ஆரணச்சொல் கடல்	வேதங்களாகிய கடலில் மறைந்து கிடந்த நல்ல அர்த்தங்களை ஆராய்ந்து
கொண்ட ஒண் பொருள்	(கீதாமூலமாக) உபதேசிக்க
கண்டு அளிப்ப	
பின்னும்	அதற்கு பின்பும்
காசினியோர்	பூமியிலுள்ளவர்கள்
இடரின் கண் வீழ்ந்திட	ஸம்ஸார துக்கத்தில் அழுந்திக் கிடக்க
தானும்	எம்பெருமானாராகிய தாமும்
அ ஒண் பொருள் கொண்டு	(முன்பு ஸர்வேச்வரனருளிச் செய்த) அந்தச் சிறந்த அர்த்தங்களைக் கொண்டு
அவர் பின் படரும் குணன்	அந்த ஸம்ஸாரிகளைப் பின் தொடரும் சீலமுடையவர்;
எம் இராமாநுசன் தன்	அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானாருடைய
படி இது	ஸ்வபாவம் இது.

* * * முன்பு பகவான் பல சிறந்த அர்த்தங்களை ஸ்ரீபகவத் கீதாமுகத்தாலே வெளிப்படுத்தினவளவிலும் பாழும் ஸம்ஸாரிகள் அவ்வர்த்தங்களைத் தெரிந்துகொண்டு உஜ்ஜீவிக்க மாட்டாமல் மேன்மேலும் ஸம்ஸாரத்தையே பெருக்கிக் கொண்டு அதோகதியை யடைந்துவிடவே, "ஐயோ! இப்படி நித்ய ஸம்ஸாரிகளாய்க் கெட்டுப் போகிறார்களே!" என்று அநுதாபங்கொண்ட எம்பெருமானார், அந்த கீதா சாஸ்த்ரத்திலுள்ள பொருள்களையே விளங்க உரைத்துக்கொண்டு, இது கேட்டுத் திருந்துவார் ஆரேனுமுண்டோ? என்று ஸம்ஸாரிகளைப் பின்தொடர்ந்து செல்லுகிறார்; நம்மை பெறுதற்கு அவர் தாமே முயற்சி செய்துகொண்டு ஆள்பார்த்து உழிதருகின்றார்; இந்த திருக்குணம் உங்களுக்குத் தெரியவில்லையா? என்கிறார்.

தானும் அவ்வொண் பொருள் கொண்டு – கீதா பாஷ்யம் அருளிச்செய்து என்று கருத்து. திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சரமச்லோகார்த்தத்தை ஏகாந்தமாகக் கேட்டு அதனை யெல்லாரு மறிந்து உஜ்ஜீவிக்குமாறு கோபுரத்தின் மேலேறி விளம்பரப்படுத்தின திருக்குணத்தை இப்பாட்டில் பேசுகின்றாரென்னவுமாம். (36)

~~*~*~*~*~*~*~*

37. படிகொண்ட கீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம் *
குடிகொண்ட கோயி லிராமாநுசன்குணங்கூறும் * அன்பர்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளங்கனியும்நல்லோ
ரடிகண்டு கொண்டுகந்து * என்னையுமாளவர்க்காக்கினரே. (37)

படிகொண்ட கீர்த்தி	உலக மெங்கும் பரந்த புகழையுடைத்தான
இராமாயணம் என்னும்	ஸ்ரீராமாயனமென்கிற
பத்தி வெள்ளம்	பக்தி ஸமுத்ரம்
குடி கொண்ட கோயில்	நித்யவாஸம் பண்ணுகிற திவ்ய ஸ்தாநமாயிறுக்கிற
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
குணம் கூறும் அன்பர்	திருக்குணங்களைப் பேசுகின்ற பக்திமான்களுடைய
கடிகொண்ட மாதாள் மலர்	மணம்மிக்குச் சிறந்த பாதார விந்தங்களில்
உள்ளம் கலந்து	நெஞ்சு பொருந்தி
கனியும்	ஸ்நேஹித்திருக்கிற
நல்லோர்	மஹாநுபாவர்கள்
அடிகண்டு கொண்டு	(இவ்வாத்ம வஸ்துவானது உடையவர்க்கு சேஷப்பட்டதென்கிற) மூலப்பொருளைத் தெரிந்துகொண்டு
உகந்து	ஆதரித்து
என்னையும்	அடியேனையும்
அவர்க்கு	அவ்வெம்பெருமானார்க்கு
ஆள் ஆக்கினர்	ஆட்படுத்தினார்கள்

* * * இப்படிப்பட்ட எம்பெருமானாரை நீரே சென்று பற்றினீரோ? அன்றி அவர் தாமே ஸ்வீகரித்தருளினாரோ? என்று அமுதனாரைச் சிலர் கேட்க, நானும் பற்றவில்லை, அவரும் ஸ்வீகரிக்கவில்லை; அவருடைய ஸம்பந்த ஸம்பந்திகள் என்னைக் கொண்டு சேர்த்தார்கள் என்கிறார்.

அடி கண்டு கொண்டு – அடியாவது மூலம்; எம்பெருமானார்க்கு உரித்தாயிருக்கையாகிற மூலத்தைத் தெரிந்துகொண்டு சேர்த்தார்களென்கை. மருமமறிந்து காரியஞ்செய்தார்களென்றவாறு. (37)

~~*~*~*~*~*~*~*~*

38. ஆக்கியடிமை நிலைப்பித்தனையென்னையின்று * அவமே
போக்கிப் புறத்திட்ட தென்பொருளாமுன்பு? * புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா விராமாநுச நின்னருளின்வண்ணம்
நோக்கிற்றெரிவரிதால் * உரையாயிந்த நுண்பொருளே (38)

என்னை	(ஸ்வாமிந்! நெடுநாளாக அஹங்காரியாய்க்கிடந்த) என்னை
இன்று	இன்றைத் தினத்தில்
ஆக்கி	ஒரு பொருளாக்கி
அடிமை	சேஷத்வத்தில்
நிலைப்பித்தனை	நிலை நிறுத்தினீர்; (இன்று இப்படி செய்தருளின தேவரீர்)
முன்பு	முற்காலமெல்லாம்
அவமே போக்கி	வீணாகப் போக்கி
புறத்து இட்டது	வெளி விஷயங்களிலே தள்ளி விட்டு வைத்தது
என் பொருளா	என்ன நிமித்தமாக?
புண்ணியர் தம்	(தேவரீரை இடைவிடாது அநுபவிக்கும்) பாக்யசாலிகளுடைய
வாக்கில் பிரியா	வாக்கை விட்டுப் பிரியாத
இராமாநுச	எம்பெருமானாரே!
நின் அருளின் வண்ணம்	தேவரீருடைய திருவருளிருக்கும் பரிசு
நோக்கில்	நோக்கு மளவில்
தெரிவு அரிது	அறிய முடியாததாயிரா நின்றது
இந்த நுண் பொருள்	இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை
உரையாய்	தேவரீரே அருளிச்செய்ய வேணும்.

* * * கூரத்தாழ்வானைக் கொண்டு அடியேனை இன்று திருத்திப் பணிகொண்ட தேவரீர் இதற்கு முற்காலமெல்லாம் இந்த சேஷத்வரஸத்தை அடியேனுக்கு ஊட்டாமல் வீணாக விஷயாந்தரங்களிலே அகலவைத்திருந்ததற்கு என்ன காரணம்? இன்று இங்கனே திருவுள்ளம் பற்றும்படியாக என்னிடத்தில் என்ன ஸுக்ருதமுண்டாயிற்று? ஒன்றுமில்லை; அப்படியிருக்கச் செய்தேயும் தேவரீர் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையைக் கொண்டேயன்றோ இன்று ஆட்படுத்திக் கொண்டது. ஹா ஹா இப்படியும் ஒரு க்ருபையுண்டோ? இவ்வருளின் திறத்தை அறிவாரார்! அறிந்த தேவரீரே அருளிச் செய்ய வேணும் என்றாராயிற்று.

நிலைப்பித்தனை – முன்னிலை ஒருமை வினைமுற்று. அவம் – வீண். “இன்று என்னை ஆக்கி அடிமை நிலைப்பித்தனை, முன்பு அவமே போக்கிப் புறத்திட்டது என் பொருளா!” இன்று ஸ்வீகரித்ததற்கும், இத்தனை நாள் ஒதுக்கிவைத்ததற்கும் என்ன காரணம்? (38)

~~*~*~*~*~*~*~*~*

39. பொருளும்புதல்வரும்பூமியும் * பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சே! * மற்றுளார்தரமோ?
இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன்னீறில் பெரும்புகழே
தெருளுந்தெருள் தந்து * இராமாநுசன் செய்யும் சேமங்களே. (39)

பொருள் என்றும்	த்ரவ்யம் என்று சொல்லிக் கொண்டும்
புதல்வர் என்றும்	புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும்
பூமி என்றும்	க்ஷேத்ரமென்று சொல்லிக் கொண்டும்
பூ குழலார் என்றுமே	அழகிய குழலையுடைய ஸ்திரீகள் என்று சொல்லிக் கொண்டும் (அர்த்த புத்திராதிகளையே விரும்பி)
மருள் கொண்டு	அறிவு கெட்டு
இளைக்கும் நமக்கு	வருந்திக் கொண்டு கிடக்கிற நமக்கு
இருள் கொண்ட	அஜ்ஞாநத்தோடு கூடிய
வெம் துயர்	க்ரூரமான துக்கங்களை
மாற்றி	போக்கடித்து
தன் ஈறு இல் பெரு புகழே	தம்முடைய முடிவில்லாத சிறந்தகல்யாண குணங்களையே சிந்திக்கக் கடவதான
தெருளும் தெருள்	ஞானத்தை
தந்து	அளித்தருளி
இராமாநுசன்	எம்பெருமானார்
செய்யும் சேமங்கள்	செய்கிற க்ஷேமங்களானவை
நெஞ்சே	ஓ மனமே!
மற்று உளார் தரமோ	மற்ற பேர்களுக்குச் செய்கிற மாதிரியோ? [அல்ல விலக்ஷணம் என்றபடி]

* * * எம்பெருமானாருடைய திருவருளாலே தாம் பெற்ற நன்மைகளை நினைத்து நினைத்து ஆநந்தமுள்ளடங்காமல் அவ்வாநந்தத்தை நெஞ்சோடே கூடி உசாவுகிறார். நெஞ்சே! அன்னை அத்தன் என் புத்திரர் பூமி வாசவார் குழலாள் என்று மயங்கிப் புத்ர தார க்ருஹ க்ஷேத்ரங்களுக்கு மேற்பட வொன்றுமறியாமல் உடலுக்கே கரைந்து நைந்துகிடந்த நமக்கு அஜ்ஞானங்களையும் அது காரணமாக வரும் பாவங்களையும் தொலைத்தருளித் தமது திவ்ய கீர்த்திகளையே அநவரதம் பேசும்படியான நிலைமையிலே நம்மைக் கொண்டு நிறுத்தினார் எம்பெருமானார். இப்படியாக அவர் நமக்குச் செய்தருளும் க்ஷேமங்கள் இவ்வுலகில் வேறு யார்க்காவது கிடைக்கக் கூடியதோ? நம்முடைய பாக்கியமே பாகியமன்றோ என்றாராயிற்று.

மற்றுளார் தரமே? என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்; இப்படிப்பட்ட க்ஷேமங்களை நமக்கு எம்பெருமானார் தவிர வேறு யாரேனும் அளிக்கக்கூடுமோ? என்றும், இப்படிப்பட்ட க்ஷேமங்கள் நமக்குத் தவிர வேறு ஆர்க்கேனும் கிடைக்கத் தகுமோ? என்றும். (39)

~~*~*~*~*~*~*~*

40. சேமநல்வீடும்பொருளுந்தருமமும் * சீரியநற்
காமமுமென்றிவை நான்கென்பர் * நான்கினுங்கண்ணனுக்கே
ஆமதுகாம மறம்பொருள்வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன்சீலன் * இராமாநுசனிந்தமண்மிசையே. (40)

சேமம் நல் வீடும்	அனைவர்க்கும் க்ஷேமரூபமான சிறந்த மோக்ஷமும்
பொருளும்	அர்த்தமும்
தருமமும்	தர்மமும்
சீரிய நல் காமமும் என்று இவை	மிகவுஞ் சிறந்த காமமும் ஆக இப்படி சொல்லப்பட்டுள்ள இவை
நான்கு என்பர்	நான்கு புருஷார்த்தங்கள் என்று வைதிகர் கூறுவர்கள்
நான்கினும்	இந்த நான்கு புருஷார்த்தங்களுள்
காமம்	காமமாவது
கண்ணனுக்கே ஆமது	எம்பெருமான் விஷயத்திலேயே உண்டாமது
அறம் பொருள் வீடு	தர்ம அர்த்த மோக்ஷங்கள் மூன்றும்
இதற்கு என்று	இந்தக் காம புருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் என்று
வாமநன் சீலன் இராமாநுசன்	வாமநாவதாரம் செய்த பெருமானோடு ஒத்த சீலத்தையுடையரான எம்பெருமானார்
இந்த மண் மிசை உரைத்தான்	இவ்வுலகில் அருளிச்செய்தார்

* * * எம்பெருமானார் இவ்வுலகத்தார்க்கு உபதேசித்தருளின அர்த்தங்களில் ஒரு அர்த்த விசேஷத்தை இப்பாட்டில் எடுத்துரைக்கின்றார். ஸகல சாஸ்த்ரங்களாலும் பிரதிபாதிக்கப்படுமவை தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்கு புருஷார்த்தங்களாம். அந்த நான்கினுள் காமமென்பது பகவத் விஷய காமம்; விஷயாந்தரங்களைப் பற்றின காமம் சிற்றின்பமாதலால் அது புருஷார்த்தமன்று; பேரின்பமாகிய பகவத் காமமே காமம். அதுவே புருஷார்த்தம். மற்ற மூன்று புருஷார்த்தங்கள் மேற்சொன்ன காம புருஷார்த்தத்திற்கு சேஷப்பட்டவைகள்; காமமே ப்ரதாநசேஷியான புருஷார்த்தம் என்று உலகத்தாரெல்லார்க்கும் உபதேசித்தருளினார் எம்பெருமானார் என்றாராயிற்று.

சேம நல்வீடு மென்று தொடங்கி அறம் பொருள் வீடிதற்கே என்னுமளவும் எம்பெருமானாருடைய உபதேச வடிவம்.

கண்ணனுக்கேயாமது காமம் – காமக்ரோதங்களைக் கெட்ட குணமாகக் கூறியிருப்பது தகாத விஷயங்களில் காமம் கூடாதென்பதுபற்றி. பகவத் விஷயத்தில் காமம் சாஸ்த்ரவிஹிதம். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் இக்காமமே பொலியும்.

வாமநன் சீலன் – வாமநாவதாரம் செய்த எம்பெருமானுடைய சீலம் போன்ற சீலத்தையுடையவர் என்கை. ஒருவரும் அபேக்ஷியாதிருக்கத் தன்பேறாக எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்துத் திரிவிக்ரமனானதுபோல், ரஸ்யமாயும் ரஹஸ்யமாயுள்ள அர்த்த விசேஷங்களைத் தமது நிர்ஹேதுகக்ருபையாலே வெளியிடுபவர் எம்பெருமானார் என்கிறது. (40)

~~*~*~*~*~*~*~*~*

41. மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்க ளெல்லாம்
அண்ண லிராமாநுசன் வந்துதோன்றிய வப்பொழுதே
நண்ணரு ஞானந் தலைக்கொண்டு * நாரணற்காயினரே. (41)

எங்கள் மாதவனே	நமக்கு நாதனான திருமால் தானே
மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து	(இப்பூமியிலுள்ள மநுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்து
கண் உற நிற்கிலும்	எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டு நின்ற விடத்திலும்
காணநில்லா உலகோர்கள் எல்லாம்	(அவனை நம்முடைய நாதனென்று) காணமாட்டாதிருந்த இவ்வுலகத்தாரெல்லாரும்
அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே	ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் இங்கே வந்தவதரித்தவுடனே
நண்ண அரு ஞானம் தலைக் கொண்டு	பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப்பெற்று
நாரணற்கு ஆயினர்	ஸ்ரீமந் நாராயணனுக்கு சேஷப் பட்டனர்.

* * * எம்பெருமானுடைய அவதாரத்திற்காட்டிலும் எம்பெருமானாருடைய அவதாரமே சிறப்புற்ற தென்கிறார். எம்பெருமான் பலபலயோனிகளிற் பலவகைப் பிறவி பிறந்து கண்காண வந்துநின்று உபதேசங்களாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்த விடத்திலும் யாரும் அவனை லக்ஷியம் பண்ணவில்லை; "அவஜாநந்தி மாம் மூடா:" [என்னை மூடர்கள் அவமானப்படுத்துகிறார்கள்] என்று அவன்றானே சொல்லிகொண்டு வருத்தப்படவேண்டியதாயிற்று. ஆகையாலே பகவானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளுடைய தெள்ளறிவுக்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானாருடைய அவதாரமோ வென்னில் பயன்பெற்றது. இவர்தாம் திருவவதரித்தவுடனே எல்லாவுலகத்தாரும் ஆச்சரியமான ஞானத்தைப் பெற்று உஜ்ஜீவித்தார்கள் என்றாராயிற்று. (41)

~~*~*~*~*~*~*~*

42. ஆயிழையார் கொங்கை தங்கும் * அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியை வந்தெடுத்தா னின்று * மாமலராள்
நாயக னெல்லாவுயிர்கட்கும் நாத னரங்கனென்னுந்
தூயவன் * தீதிலிராமாநுசன் தொல்லருள் சுரந்ததே. (42)

மா மலராள் நாயகன்	லக்ஷ்மீபதியான
அரங்கன்	பெரிய பெருமாள்
எல்லா உயிர்கட்கும் நாதன் என்னும்	ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷி என்று உபதேசிப்பவரும்
தூயவன்	பரம பரிசுத்தரும்
தீது இல்	எவ்வகை குற்றமுமில்லாதவருமான
இராமாநுசன்	எம்பெருமானார் (என்ன செய்தாரென்றால்)
ஆய் இழையார் கொங்கை	அழகிய ஆபரணங்களணிந்த ஸ்த்ரீகளுடைய கொங்கைத் தடத்தில் தங்கும்
தங்கும் அக்காதல் அளறு அழுந்திமாயும் என் ஆவியை	ஆசையாகிற சேற்றிலே அழுந்தி நசித்துப் போகிற என் ஆத்மாவை

தொல் அருள் சுரந்து வந்து இன்று எடுத்தான்	இன்று நிர்ஹேதுக க்ருபை பண்ணிவந்து உத்தரித்தருளினார்

* * * பகவானுடைய அவதார காலங்களில் திருந்தாத ஸம்ஸாரிகளும் எம்பெருமானார் காலத்தில் திருந்திவிட்டார்களென்று கீழ்ப்பாட்டில் கூறியதற்கு வேறு த்ருஷ்டாந்தம் காட்ட வேணுமோ? என்னைத் திருத்திப் பணி கொண்ட விஷயமொன்றே போராதோ வென்பார் போலத் தம்மைத் திருத்தினதைச் சொல்லி ஆநந்தப்படுகிறார். (42)

~~*~*~*~*~*~*~*

43. சுரக்குங் திருவுமுணர்வும் * சொலப்புகில் வாயமுதம்
பரக்கு மிருவினை பற்றற வோடும் * படியிலுள்ளீர்!
உறைக்கின்றன னுமக்கியானறஞ்சீறு முறுகலியைத்
துரக்கும் பெருமை * இராமாநுசனென்று சொல்லுமினே. (43)

படியில் உள்ளீர்	இப்பூமியிலுள்ளவர்களே!
யான் உமக்கு உரைக்கின்றனன்	நான் உங்களுக்கு (ஒரு ஹிதம்) சொல்லுகிறேன் (என்னவென்றால்)
அறம் சீறும் உறுகலியை துரக்கும் பெருமை இராமாநுசன் என்று சொல்லுமின்	தர்மமார்கத்தில் சீற்றமுடைத்தாய் ப்ரபலமான கலியை ஓட்டிவிடும் எம்பெருமானாருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள் (அப்படிச் சொன்னால்)
திருவும்	பக்திப் பெருஞ்செல்வமும்
உணர்வும்	ஞானமும்
சுரக்கும்	மேன் மேலும் பெருகும்
சொல புகில்	அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொடங்கும் போதே
வாய் அமுதம் பரக்கும்	வாக்கிலே அம்ருதரஸம் வியாபிக்கும்
இருவினை	மஹாபாவங்கள்
பற்று அற ஓடும்	அடியோடே போய் விடும்

* * * உலகத்தாரை நோக்கி நீங்களெல்லாரும் ஸ்ரீராமாநுஜ திவ்ய நாமத்தை வாயாரச் சொல்லுங்கள், உங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகுமென்கிறார். ஓ ஜனங்களே! உங்களுக்கு ஓர் அருமையான அர்த்தத்தை உபதேசிக்கின்றேன் கேளுங்கள். எம்பெருமானாருடைய ஸம்பந்தமுள்ள தேசத்தில் தருமத்திற்கு மாறான கலிபுருஷன் நிற்கப்பெறமாட்டான். அன்னவரது திருநாமங்களை நீங்கள் அநுஸந்தாநம் பண்ணுங்கள். உங்களுக்கும் ஜ்ஞாநபக்திகள் தலையெடுக்கும். பாவங்களும் தொலையும். அத்திருநாமங்கள் நாவுக்கும் இனிதாயிருக்கும். சொல்லிப்பாருங்கள்.

உமக்கு + யான், உமக்கியான். "யவ்வரின் இய்யாம்" என்பது நன்னூல்;

"நேர்பதினாறே நிரைபதினேழென் றோதினர் கலித்துறையோரடிக்கெழுத்தே" என்ற இலக்கணத்திற்கு மாறாக இப்பாட்டின் மூன்றாமடியில் (ஒற்றொழித்துப்) பதினெட்டெழுத்து வந்தது என்னெனில்; உமக்கியான் என்ற விடத்தில் ககரத்தின் மேலேறின இகரம் குற்றிய லிகரமாகையாலே வண்ணங்கெடாமைக்குக் கழித்து உடலெழுத்தான

ககரத்தைக் கீழோடே ஒன்றுவித்துப் பதினேழெழுத்தாகவே எண்ணத்தக்கது. கம்பர் இயற்றிய சடகோபரந்தாதியில் “என் முடியாதெனக்கியாதே யரிய திரா வணன்றன்” என்ற இருபத்தொன்பதாம்பாட்டிலும் இப்படியே பிரயோகம் வந்தமை காண்க. இந்த நூற்றந்தாதியிலும் மேல் ஐம்பத்து மூன்றாம் பாட்டில் “பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்” என்ற விடத்திலும் இங்கனமே கொள்க. (43)

~~*~*~*~*~*~*~*~*

44. சொல்லார் தமிழொருமூன்றும் * சுருதிகள் நான்குமெல்லை
யில்லா வறநெறியாவுந் தெரிந்தவன் * எண்ணருஞ்சீர்
நல்லார்பரவு மிராமாநுசன் திருநாமம் நம்பிக்
கல்லாரகலிடத்தோர் * எதுபேறென்று காமிப்பரே. (44)

அகல் இடத்தோர்	விசாலமான இப்பூமியிலுள்ளவர்கள்
சொல் ஆர் தமிழ் ஒரு மூன்றும்	சொல் நிரம்பிய இயல் இசை நாடகம் என்கிற ஒப்பற்ற முத்தமிழையும்
சுருதிகள் நான்கும்	நான்கு வேதங்களையும்
எல்லை இல்லா அறம் நெறியாவும்	கணக்கில்லாத தரும சாஸ்திரங்களையும் மற்றும் எல்லாக் கலைகளையும்
தெரிந்தவன்	அறிந்தவராயும்
எண் அரு சீர்	எண்ண முடியாத குணங்களையுடையவராயும்
நல்லார் பரவும்	ஸத்துக்களால் துதிக்கப்படுபவராயு மிருக்கிற
இராமாநுசன்	எம்பெருமானாருடைய
திரு நாமம்	திரு நாமத்தை
நம்பி கல்லார்	(என் வார்த்தையை) நம்பிக் கற்கின்றார்களில்லை
	ஸ்ரீராமாநுஜ நாமஸங்கீர்த்தநமே புருஷார்த்தமென்று அறியாதவர்களாய்
எது பேறு என்று காமிப்பரே!	நமக்குப் புருஷர்த்தம் எது? என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஐயோ!

* * * சொல் ஆர் தமிழொரு மூன்றும் – இயல் இசை நாடகம் என மூவைகப்படும் தமிழ். “எழுத்துப் பதின்மூன்று இரண்டசை சீர்முப்பதேழ்தளை ஐந்து, இழுக்கிலடி தொடை நாற்பதின் மூன்று ஐந்துபா இனம் மூன்று, ஒழுக்கிய வண்ணங்கள் நூறு ஒன்பது ஒண்பொருள், கோள் இருமூ, வழுக்கில்விகாரம் வனப்பெட்டு யாப்புள் வகுத்தனவே” என்று தொகுத்து உணர்த்தப்படும் இயற்றமிழின் இலக்கணங்கள். குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம், காந்தாரம், பாலையாழ் முதலிய பண்களைக் கொண்டுள்ள தமிழ் இசைத் தமிழாம். இயலுக்கும் இசைக்கும் பொதுவானது நாடகத் தமிழாம். திராவிட சாஸ்த்ரங்களெல்லாவற்றையும் அறிந்தவர் எம்பெருமானார் என்கிறது.

சுருதிகள் நான்கும் – ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என வேதங்கள் நான்காம். எல்லையில்லா அறநெறி – தர்மசாஸ்த்ரங்கட்கு அளவேயில்லை. யாவும் – கீழ்சொன்னவற்றையும் மற்றுமுள்ள கலைகளையும். (44)

~~*~*~*~*~*~*~*~*

45. பேறொன்றுமில்லை நின்சரணன்றி * அப்பேறளித்தற்
காறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * ஏன்றிப்பொருளைத்
தேறுமவர்க்கு மெனக்கு முனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும்பரமன்று * இராமாநுசா ! மெய்ம்மை கூறிடிலே. (45)

இராமாநுச	எம்பெருமானாரே!
நின் சரண் அன்றி	தேவரீருடைய திருவடிகளைத் தவிர
மற்று பேறு ஒன்றும் இல்லை	உபேயம் வேறு ஒன்றும் இல்லை
அப்பேறு அளித்தற்கு	தேவரீர் திருவடிகளாகிற அந்த உபேயத்தைத் தருவதற்கு
அச்சரண் அன்றி	அத்திருவடிகள் தவிர
மற்று ஆறு ஒன்றும் இல்லை	வேறு உபாயம் ஒன்றும் இல்லை
என்று இப்பொருளை	என்கிற இவ்வுண்மையை
தேறுமவர்க்கும்	தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிற மஹான்களுக்கும்
எனக்கும்	(இந்த தெளிவு சிறிதும் இல்லாத) எனக்கும்
உனை தந்த செம்மை	(வாசி பாராமல் ஸமமாகவே) தேவரீரைக் காட்டிக் கொடுத்த செம்மைக் குணமானது
மெய்ம்மை கூறிடில்	உண்மை சொல்லில்
சொல்லாமல் கூறும் பரம் அன்று	வாய் கொண்டு சொல்லத்தரமன்று [அநுபவித்து உருகுமித்தனை]

* * * "உபாயமும் உபேயமும் எம்பெருமானார் திருவடிகளே" என்றிருக்கும் மஹான்களுக்கு தேவரீர் எவ்வாறு அருள் புரிகின்றதோ அவ்வாறாகவே சிறிதும் வாசிவையாமல் பாவியேனுக்கும் அருள் புரிகின்றதே! இஃது என்ன பெருங்குணம்! த்ரிடவிச்வாஸமுடைய ஆழ்வான் ஆண்டான் போல்வாரை அடிமை கொள்வது போலவே அவிச்வாஸியான என்னையும் அடிமை கொள்வதே! இச்செம்மைக் குணைத்தின் பெருமையைப் பாசுரமிட்டுச் சொல்லை எனக்கு சக்தியில்லையென்று தடுமாறுகின்றார். (45)

~~*~*~*~*~*~*~*~*

46. கூறுஞ்சமயங்க ளாறுங்குலைய * குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை * மதியிலியேன்
தேறும்படியென் மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறுங்குணனை * இராமாநுசனை யிறைஞ்சினமே. (46)

கூறும் சமங்கள் ஆறும் குலைய	மனம் போனபடி சொல்லிகொண்டிருக்கிற ஆறுபாஹ்யமதங்களும் தலை மடங்கும் படி
குவலயத்தே	இப்பூமண்டலத்திலே
மாறன் பணித்த மறை	நம்மாழ்வார் அருளிச் செய்த தமிழ் வேதத்தை
உணர்ந்தோனை	கற்று அறிந்தவராயும்

மதியிலியேன் தேறும்படி	ஜ்ஞாநஹீநனான நானும் தெளியும்படியாக
என்மனம்	என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தவராயும்
திசை அனைத்தும் ஏறும் குணனை	எல்லாத் திக்குகளிலும் பரவிய திருக்குணங்களையுடையவராயுமிருக்கிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
இறைஞ்சினோம்	வணங்கினோம்.

* * * எம்பெருமானார் செய்தருளின அரியபெரிய உபகாரங்கள் நெஞ்சில் ஊற ஊற, பரவசராய்த் திருவடிகளிலே வணங்குகிறார். உலகத்தில் பிரமாணமில்லாமலும் யுக்தியில்லாமலும் மனம் போனபடி சொல்லிக்கொண்டு திரிகிற மதாந்தரஸ்தர்களையெல்லாம் பங்கப்படுத்துவதற்காக நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதமான திருவாய்மொழியை ஓதியுணர்ந்தவரும், அவிவேகியான நான் கூடத் தேறுதலையடையும்படி என் நெஞ்சினுள்ளே புகுந்து என் ஸத்தையை நோக்குபவரும், திசைகளிலெங்கும் பரவிய புகழையுடையவருமான எம்பெருமானாரை வணங்கினோமென்றாராகிறது.

சமயங்கள் ஆறும் – தேஹாத்மவாதி, தேஹபரிணாமாத்மவாதி, விஜ்ஞாநாத்மவாதி, சூந்யவாதி, அத்வைதவாதி, சிவபரத்வவாதி – என்றிப்படி ஆறுமதஸ்தர்களுண்டு. வேறு வகைகளும் உண்டு. எல்லா மதங்களும் திருவாய்மொழியில் நெற்செய்யப் புல்தேயுங்கணக்கிலே தொலைக்கப்பட்டனவெண்க. குவலயம். – வடசொல். தேறும்படி – "ஒரு வழியாலும் நாம் உஜ்ஜீவிக்க வகையில்லையே! என்செய்வோம்" என்று தடுமாறிக்கிடந்த நானும் "இனி நமக்கு குறையுமில்லை" என்று தேறி மார்விலே கையைவைத்துறங்கும்படியாக என்கை. (46)

~~*~*~*~*~*~*~*

47. இறைஞ்சப்படும் பரனீச னரங்கனென்று * இவ்வுலகைத்
தறம் செப்புமண்ண லிராமாநுசன் * என்னருவினையின்
திறஞ்செற்றிரவும் பகலும் விடா தென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் * எனக்காரும் நிகரில்லையே. (47)

இறைஞ்சப்படும் பரன்	"எல்லாராலும் வணங்கத்தக்க பரதெய்வம் (எதுவென்றால்) ஈசனாகிய
ஈசன் அரங்கன் என்று	ஸ்ரீரங்கநாதனேயாம்" என்று
இ உலகத்து	இப்பூமண்டலத்திலே
அறம் செய்யும்	ஸக்ஷாத் தர்மத்தை அருளிச்செய்யுமவராய்
அண்ணல்	ஸர்வஸ்வாமியான
இராமாநுசன்	எம்பெருமானார்
என் அருவினையின் திறம் செற்று	என்னுடைய போக்க முடியாத கர்ம ஸமூகத்தைப் போக்கி
பகலும் இரவும் விடாது	ஸர்வ காலத்திலும்
எந்தன் சிந்தையுள்ளே	என் ஹ்ருதயத்தினுள்ளே
நிறைந்து	பரிபூர்ணராகி
ஒப்பு அற இருந்தான்	(இவ்விருப்புக்கு) ஒப்பில்லாதபடி எழுந்தருளுயிருக்கிறார்
எனக்கு	இப்படிப்பட்ட அருளைப்பெற்ற எனக்கு
ஆரும் நிகர் இல்லை	ஒப்புவார் ஆருமில்லை

* * * ஸ்ரீரங்கநாதனே எல்லாரும் வணங்கத்தக்க பரதெய்வமென்னும் உண்மையை உலகத்தார்க்கு உபதேசித்து எல்லாரையும் பகவத் ஸமாச்ரயணத்தில் ருசியுடையவர்களாக்கிப் போருகின்ற எம்பெருமானார் என்னுடைய தீவினைகளை வேரோடே களைந்தொழித்து அநவரதமும் எனது ஹ்ருதயத்தினுள்ளே பரிபூர்ணராயெழுந்தருளியிராநின்றார். இப்படிப்பட்ட பரமபாக்கியம் பெற்றவன் இவ்வுலகில் நானொருவனேயாகையால் "இல்லை யெனக் கெதிரிலில்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரே". (47)

~~*~*~*~*~*~*~*

48. நிகரின்றிநின்றவென் நீசதைக்கு * நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல் * புண்மையிலோர்
பகரும்பெருமை யிராமாநுசவினி நாம்பழுதே
அகலும் பொருளென் * பயனிருவோமுக்கு மானபின்னே. (48)

புன்மையிலோர் பகலும் பெருமை	மஹான்கள் பேச வேண்டும்படியான பெருமையையுடைய எம்பெருமானாரே!
நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு	என்னுடைய ஒப்பற்ற தாழ்மைக்கு
நின் அருளின் கண் அன்றி	தேவரீருடைய க்ருபையினிடத்தில் தவிர
புகல் ஓன்றும் இல்லை	வேறு எவ்விடத்திலும் ஒதுங்க இடமில்லை
அருட்கும்	தேவரீருடைய அந்த க்ருபைக்கும்
அஃதே புகல்	என் போல்வாருடைய அந்தத் தாழ்மையே சரணம் (ஆக இவ்வகையாலே)
இருவோமுக்கும் பயன்	அடியேனால் தேவரீருக்குப் பயன், தேவரீரால் அடியேனுக்குப் பயன் என்று
ஆன பின்	ஸித்தமான பின்பு
இனி நாம்	இனி மேலும் நாம்
பழுதே	வியர்த்தமாக
அகலும் பொருள் என்	பிரிந்திருக்கைக்குக் காரணம் என்ன?

* * * எனக்காரும் நிகரில்லையே என்று களித்துக்கூறின அமுதனாரை நோக்கி எம்பெருமானார் "இக்களிப்பு உமக்கு எத்தனை நாளைக்கு நிற்கும்? நான் உம்மை விட்டுவிடவுங்கூடும்; நீர் என்னை விட்டுவிடவுங்கூடும். இரண்டத் தொன்று நேர்ந்தால் இக்களிப்பு மாறக்கூடியது தானே" என்ன – இனி நாம் வீணாக விட்டுப் பிரிவதற்குக் காரணமேயில்லையென்கிறார்.

"ததஹம் த்வத்ருதே ந நாதவாந் மத்ருதே த்வம் தயநீயவாந் நச, விதிநிர்மிதமேத தந்வயம் பகவந் பாலய மா ஸ்ம ஜீஹப:" என்ற ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ந ச்லோகமும் இப்பொருள் கொண்டதே.

நீசதை – "நீசதா" என்ற வடசொல் ஐயீறாயிற்று. நீசஸ்ய பவ: நீசதா – நீசனாயிருக்குந் தன்மை. அருட்குமஃதேபுகல் – நீசர்கள் விஷயத்தில் க்ருபை பண்ணினாலன்றோ அருள் விளங்குவதும் பயன் பெறுவதும். (48)

~~*~*~*~*~*~*~*

49. ஆனதுசெம்மையறநெறி * பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றி இறந்தது வெங்கலி * பூங்கமலத்
தேனதிபாய்வயல் தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்
தானதில்மன்னும் * இராமாநுச னித்தலத்துதித்தே. (49)

பூ கமலம் தேன்	தாமரைப் பூக்களிலுண்டான மகரந்தமானது
நதி பாய்	ஆறாகப் பெருகப் பெற்ற
வயல்	கழனிகளையுடைய
தென் அரங்கன்	ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கிற பெரிய பெருமாளுடைய
கழல்	திருவடிகளை
சென்னி வைத்து	சிரஸாவஹித்துக் கொண்டு
தான் அதில் மன்னும்	தாம் அத்திருவடிகளிலேயே ப்ரவணாராயிருக்கிற
இராமாநுசன்	எம்பெருமானார்
இ தலத்து உதித்து	இப்பூமியிலே திருவவதரித்ததனால்
செம்மை அறம் நெறி	ருஜுவான தர்மமார்க்கமானது
ஆனது	ஸத்தைப் பெற்றது
பொய்மை அறு சமயம்	பொய்யே நிறந்து கிடக்கிற அறுசமயங்களும்
பொன்றி போனது	நாசமடைந்தன
வெம் கலி இறந்தது	கொடிய கலியுகமும் மாண்டது

* * * எம்பெருமானார் திருவவதரித்ததனாலே இவ்வுலகத்துக்கு உண்டான நன்மைகளை அருளிச் செய்கிறார் இதில். முன்பு குத்ருஷ்டிகளினால் அழிந்து கிடந்த தர்மமார்க்கம் மீண்டு நிலை பெற்றது. சாஸ்த்ரவிருத்தமான புறமதங்களெல்லாம் தலை சாய்ந்தன. கலிதோஷமும் கெட்டுப்போயிற்று. (49)

~~*~*~*~*~*~*~*~*

50. உதிப்பனவுத்தமர் சிந்தையுள் * ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன * கொள்ளைவன் குற்றமெல்லாம்
பதித்தனவென் புன்கவிப் பாவினம் பூண்டன பாவுதொல்சீர்
எதித்தலைநாதன் * இராமாநுசன்றன் னிணையடியே. (50)

பாவு தொல் சீர்	உலகமெங்கும் பரவின நித்ய கல்யாண குணங்களையுடையவரும்
எதி தலை நாதன்	யதிகளுக்கு தலையான நாயகருமான
இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
இணை அடி	திருவடியிணைகள்
	எப்படிப்பட்டவையென்றால்
உத்தமர் சிந்தையுள் உதிப்பன	உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே ப்ரகாசிப்பவை
ஒன்னலர் நெஞ்சம்	ப்ரதிபக்ஷிகளுடைய நெஞ்சானது
அஞ்சி கொதித்திட	பயப்பட்டு பரிதவிக்கும் படி

மாறி நடப்பன	மாறிமாறியிட்டு நடக்குந்தன்மையுடையன
கொள்ளை வன் குற்றம் எல்லாம் பதித்த	அபாரமான வலிய தோஷங்கள் யாவும் அழுந்திக்கிடக்கிற
என் புன் கவி	என்னுடைய க்ஷுத்ரமான கவனமாகிய
பா இனம் பூண்டன	பாசுரங்களை (ஸ்தோத்ரமாகப்) பெற்றுக் கொண்டவை

* * * தமக்குப் பரமப்ராப்யமான எம்பெருமானார் திருவடிகளை வருணிக்கிறார் இதில். வடுகநம்பி போல்வரான உத்தமாதிகாரிகளாலே இடைவிடாது சிந்திக்கப்படுவன. பிரதிபக்ஷிகளுடைய நெஞ்சிலே பரிதாபத்தை உண்டுபண்ணுவன. பல்வகைக் குற்றங்கள் நிறந்த எனது கவிகளையும் ஏற்றுக்கொள்வன அத்திருவடிகள் என்றாராயிற்று.

ஒன்னலர் நெஞ்ச மஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன – பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிப்பதற்காகப் பலவிடங்களிலும் ஸஞ்சரித்தருளினமை அறிக. மாறிநடத்தல் – ஒரு அழகான நடை. நம்பெருமாள் நடை போலே. (50)

~~*~*~*~*~*~*~*~*

51. அடியைத்தொடர்ந்தெழு மைவர்கட்காய் * அன்றுபாரதப்போர்
முடியைப் பரிநெடுந் தேர்விடுங்கோனை * முழுதுணர்ந்த
அடியர்க்கமுத மிராமாநுசனென்னை யாளவந்திப்
படியிற்பிறந்தது * மற்றில்லைகாரணம் பார்த்திடிலே (51)

அன்று	முக்காலத்தில்
அடியை தொடர்ந்து	திருவடிகளை அவலம்பித்து
எழும்	செருக்கிக்கிளர்ந்த
ஐவர்கட்கு ஆய்	பஞ்ச பாண்டவர்களுக்காக [பக்ஷபாதம் பூண்டு]
பாரதப்போர்	பாரத யுத்தத்திலே
முடிய பரி நெடுந் தேர்	(துரியோதனாதிகள்) மாளும்படியாக குதிரை பூண்ட பெரிய தேரை
விடும்	நடத்தின
கோனை	ஸர்வேச்வரனை
முழுது உணர்ந்த	(ஸ்வரூப ஸ்வபாவங்களில் ஒன்றுங் குறையாதபடி) பூர்த்தியாகத் தெரிந்துகொண்ட
அடியர்க்கு	பாகவதர்களுக்கு
அமுதம்	பரமயோக்யனான
இராமாநுசன்	எம்பெருமானார்
இப்படியில்	இப்பூமண்டலத்தில்
வந்து பிறந்தது என்னை	வந்து அவதரித்தது (எதற்காகவென்னில்) அடியேனை
ஆள	ஆட்கொள்ளுகைக்காகவேயாம்
பார்த்திடில் மற்று காரணம் இல்லை	ஆராய்ந்து பார்க்குமளவில் இது தவிர வேறொரு காரணம் இல்லை

~~*~*~*~*~*~*~*~*

52. பார்த்தானறுசமயங்கள் பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு புன்மையினேனிடைத் தான்புகுந்து *
தீர்த்தானிருவினை தீர்ந்தரங்கன் செய்ய தாளிணையோ
டார்த்தான் * இவை யெம்மிராமாநுசன் செய்யு மற்புதமே. (52)

எம்பெருமானாரானவர்

அறு சமயங்கள் பதைப்ப	(வேத பாஹ்யங்களான) ஆறு தர்சநங்களும் துடிக்கும்படியாக
பார்த்தான்	திருக்கண் செலுத்தினார்
இப்பார் முழுதும்	இப்பூமண்டலம் முழுவதையும்
புகழ் கொண்டு	தமது கீர்த்தியினாலே
போர்த்தான்	மூடிவிட்டார்
புன்மையினேனிடை	நீசனான அடியேன் பக்கலிலே
தான் புகுந்து	தாமாகவே (நிர்ஹேதுக க்ருபையினால்) வந்து புகுந்து
இரு வினை	பெரிய பாவங்களை
தீர்த்தான்	போக்கியருளினார்
தீர்த்து	பாவங்களைப் போக்கினதுமன்றியில்
அரங்கன்	ஸ்ரீரங்கநாதனுடைய
செய்ய தாள் இணையோடு ஆர்த்தான்	அழகிய திருவடிகளோடே (என்னை) அந்வயிப்பித்தார்
இவை	ஆகிய இக்காரியங்களெல்லாம்
எம் இராமாநுசன் செய்யும் அற்புதம்	எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச் செயல்களாம்

* * * எம்பெருமானாருடைய ஆச்சரியமான சில செயல்களை எடுத்துக்கூறுகின்றார். சாக்யர், உலுக்கியர், பௌத்தர், சார்வாகர், பாசுபதர், காணாதர் என்றிப்படி சொல்லப்படுகிற புறமதத்தவர்களையெல்லாம் நடுங்கச்செய்தார். இப்பூமண்டலமெங்கும் தமது திருப்புகழே பரவும்படி செய்தார். ஆத்மகுண மொன்றில்லாத என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து என் பாவங்களைப் போக்கி அழகிய மணவாளனுடைய ஸ்ரீ பாதங்களிலே என்னை ஆச்ரயிக்கச் செய்தார். இப்படியாக எம்பெருமானார் செய்தருளுமவையெல்லாம் மிக அற்புதமானவை. (52)

~~*~*~*~*~*~*~*~*

53. அற்புதன்செம்மை யிராமாநுசன் * என்னையாளவந்த
கற்பகங் கற்றவர்காமுறுசீலன் * கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகியாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை * இந்நானிலத்தேவந்து நாட்டினனே (53)

என்னை ஆள வந்த	என்னை ஆட்கொள்வதற்காக அவதரித்த
கற்பகம்	உதாரரும்
கற்றவர் காமுறு சீலன்	ஞானிகள் ஆசைப்படும்படியான சீல குணத்தையுடையவரும்
அற்புதன்	ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவரும்

செம்மை	ருஜுவாயிருக்குந் தன்மை பொருந்தியவருமான
இராமாநுசன்	எம்பெருமானார்
கருத அரிய பல் பல் உயிர்களும்	நினைக்கவும் முடியாதபடி எண்ணிறந்திருக்கிற ஆத்மவர்கங்களும்
பல் உலகு யாவும்	(அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான) அளவிறந்த எல்லா வுலகங்களும்
பரனது என்னும் நல் பொருள் தன்னை	எம்பெருமானுடைய ஸொத்துக்களாம் என்கிற ஸாரார்த்தத்தை
இ நானிலத்தே	இவ்வுலகிலே
வந்து	வந்தவதரித்து
நாட்டினன்	ஸ்தாபித்தருளினார்

* * * எம்பெருமானார் மதாந்தரங்களைக் கண்டித்து நிலைநாட்டிய ஸித்தாந்தம் இன்னதென்கிறார். சிறந்த ஞானிகளனைவரும் கொண்டாடுதற்குரிய திருக்குணங்களையும் அதிமாநுஷவ்யாபாரங்களையும் உடையரான எம்பெருமானார் இவ்வுலகில் திருவவதரித்து "ஸகல ப்ராணிகளும் அந்தப் பிராணிகளுக்கு இருப்பிடமாயுள்ள ஸகல லோகங்களும் ஸ்ரீமந் நாரயணனுக்கே உரிமைப்பட்டவை" என்கிற பரமார்த்தத்தை நிலைநாட்டியருளினார் என்கை.

உலகு – யாவும், உலகியாவும் : "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல் விதி. (53)

~~*~*~*~*~*~*~*

54. நாட்டியம் நீசச் சமயங்கள் மாண்டன * நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது * தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து * இராமாநுசன் தன்னியல்வுகண்டே (54)

மண் உலகில் ஈட்டியசீலத்து	இப் பூலோகத்தில் மேன் மேலும் திரட்டிக் கொண்ட சீல குணத்தையுடையரான
இராமாநுசன் தன்	எம்பெருமானாருடைய
இயல்வு	ஸ்வபாவத்தை
கண்டு	பார்த்து
நாட்டிய நீச சமயங்கள் மாண்டன	(துஷ்டயுக்திகளாலே) நிலை நிறுத்தப்பட்டிருந்த க்ஷுத்ர மதங்களெல்லாம் ஒழிந்தன
நாரணனை காட்டிய	ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதித்த
வேதம்	வேதங்களானவை
களிப்பு உற்றது	(நமக்கு இனி ஒரு குறையுமில்லையென்று) செருக்கடைந்தன
தென் குருகை வள்ளல்	அழகிய திருக்குருகூரில் அவதரித்த உதாரரான ஆழ்வார் (அருளிச்செய்த)
வாட்டம் இலா	ஒரு குறையுமற்ற
வண் தமிழ் மறை	சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி
வாழ்ந்தது	வாழ்வு பெற்றது

* * * சிங்கத்தைக் கனவில் கண்டாலும் ஸாமான்யமிருகங்கள் நசித்தொழியும்; அவற்றைக் கொல்லுவதற்காகச் சிங்கம் ஒரு முயற்சியும் செய்யவேண்டா. அது போல, இவ்வுலகில் கிளர்ந்து கிடந்த பாஹ்யகுத்ருஷ்டி மதங்களைத்

தொலைப்பதற்காக எம்பெருமானார் ஒரு பிரயத்நமும் எடுத்துக் கொள்ளவில்லை. அவருடைய இயல்வைக் கண்ட காட்சியில் தானே மதாந்தரங்கள் யாவும் மாண்டு போயின. அவை மாளவே ஸ்ரீமந்நாராயணபரங்களான வேதங்களும் அந்த வேதங்களின் ஸாரமாகிய அருளிச் செயல்களும் பொலிவு பெற்று ஓங்கின என்றாராயிற்று. (54)

~~*~*~*~*~*~*~*

55. கண்டவர் சிந்தைகவரும் கடிபொழில் தென்னரங்கன் *
தொண்டர்குலாவு மிராமாநுசனை * தொகையிறந்த
பண்டருவேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும் * குடியாமெங்கள் கோக்குலமே (55)

தொகை இறந்த	கணக்கில்லாத
பண் தரு வேதங்கள்	ஸ்வரப்ரதாநங்களான வேதங்கள்
பார்மேல்	இப்பூமியிலே
நிலவிட	ஓங்கி வளரும்படி
பார்த்தருளும்	செய்தருளினவரும்
கொண்டலை	பரம உதாரரும்
கண்டவர் சிந்தை கவரும்	கண்டவர்களின் நெஞ்சைக் கவர்கின்ற
கடி பொழில்	மணமிக்க சோலைகள் சூழ்ந்த
தென் அரங்கன்	தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு
தொண்டர்	அடிமைப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களால்
குலாவும்	கொண்டாடப்படுபவருமான
இராமாநுசனை	எம்பெருமானாரை
மேவி தொழும் குடி	பொருந்தி ஆச்ரயிக்கிற குலம்
எங்கள் கோக்குலம் ஆம்	எங்களுக்கு ஸ்வாமியாகக் கூடிய குலமாம்

* * * எம்பெருமானாரை அடிபணிந்து உஜ்ஜீவிக்கும் மஹான்கள் தாம் அடியேனை ஆள்வதற்கு உரியவர்கள் என்றாராயிற்று. ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு அடியேன் தாஸனாயிருப்பேன் என்றவாறு.

இராமாநுசனை மேவித் தொழுங்குடி எங்கள் கோக்குலமாம் – எம்பெருமானாரன்று எமக்கு ஸ்வாமி; அவரை ஆச்ரயிப்பவர்களே எமக்கு ஸ்வாமிகள்.

கோ என்பதற்கு மேன்மையென்றும் பொருள் உண்டாதலால் “எங்கள் கோக்குலம்” – எங்களுடைய மேன்மையயன குலம் (எப்படிப்பட்டதென்றால்) இராமாநுசனை மேவித் தொழுங்குடியாம் என்பதாகவும் உரைக்கலாம். “எங்கள் கோக் குடியே” என்றும் பாடமுண்டு. பொருள் ஒன்றே. (55)

~~*~*~*~*~*~*~*

56. கோக்குலமன்னரை மூவெழுகால் * ஒரு கூர்மழுவால்
போக்கியதேவனைப் போற்றும் புனிதன் * புவனமெங்கு
மாக்கியகீர்த்தி யிராமாநுசனை யடைந்தபின், என்
வாக்குரையாது * என்மனம் நினையாதினி மற்றொன்றையே (56)

கோக்குலம் மன்னரை	க்ஷத்திரிய குலத்து அரசர்களை
மூ எழு கால்	இருபத்தொரு தலைமுறையளவும்
ஒரு கூர் மழுவால்	கூர்மை பொருந்திய ஒரு மழுவாலே
போக்கிய	(பரசுராமாவதாரத்தில்) தொலைத்தருளின
தேவனை	எம்பெருமானை
போற்றும்	துதிக்கின்ற
புனிதன்	பரமபரிசுத்தரும்
புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி	உலகமெங்கும் பரவின புகழையுடையவருமான
இராமாநுசனை	எம்பெருமானாரை
அடைந்த பின்	ஆச்ரயித்த பின்பு
இனி	மேலுள்ள காலமெல்லாம்
மற்று ஒன்றை	வேறு எந்த விஷயத்தையும்
என் வாக்கு	எனது வாக்கானது
உரையாது	சொல்ல மாட்டாது
என் மனம்	எனது மனமும்
நினையாது	நினைக்க மாட்டாது

* * * "அடைந்ததற்பின் வாக்குரையாது என்மனம் நினையாது" என்றும் பாட முண்டாம். (56)

~~*~*~*~*~*~*~*

57. மற்றொரு பேறு மதியாது * அரங்கன் மலரடிக்கா
ளுற்றவரேதனக் குற்றவராக் கொள்ளுமுத்தமனை *
நற்றவர் போற்று மிராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன் * பெற்றபின் மற்றறியேனொருபேதமையே. (57)

மற்று ஒரு பேறு	ப்ரயோஜநாந்தரங்களை
மதியாது	கணிசியாமல்
அரங்கன் மலர் அடிக்கு	அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளுக்கு
ஆள் உற்றவரே	அடிமைப்பட்டவர்களையே
தனக்கு உற்றவர் ஆ	தமக்கு ஆத்ம பந்துக்களாக
கொள்ளும்	திருவுள்ளம்பற்றுகிற
உத்தமனை	உத்தம புருஷராயும்
நல் தவர் போற்றும்	ப்ரபந்நர்களாலே புகழப்பட்டவராயுமிருக்கிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
இ நானிலத்தே பெற்றனன்	இந்த லோகத்திலே அடியேன் ஆச்ரயிக்கப் பெற்றேன்
பெற்றபின்	ஆச்ரயித்த பின்பு
மற்று ஒரு பேதமை	(வேறு விஷயங்களை விரும்புதல் முதலிய) எவ்வித அஜ்ஞாந கார்யமும் அறிய

அறியேன்	மாட்டேன்

* * * "இனி என்வாக்குறையாது, என்மனம் நினையாது மற்றொன்றை" என்று எப்படி நீர் சொல்லக்கூடும்? இருள் தருமா ஞாலத்தில் இருக்கிறீராகையாலே அவிவேகம் வந்து மூடிக்கொள்ள எத்தனை நாழிகை செல்லும்? என்று சிலர் கூற, எம்பெருமானாரை இந்த லோகத்திலே நான் ஆச்ரயித்தேனான பின்பு இனியொருநாளும் அவிவேகியாக ஆகமாட்டேனென்கிறார்.

"நல்தவர் போற்றும்" – ப்ரபத்தியாகிற நல்ல தபஸ்ஸைக் கைப்பற்றினவர்களாலே போற்றப்படுபவர். (57)

~~*~*~*~*~*~*~*

58. பேதையர்வேதப் பொருளிதென்றுன்னி * பிரமநன்றென்
றோதிமற்றெல்லா வுயிருமஃதென்று * உயிர்கள்மெய்விட்
டாதிப்பரனோ டொன்றாமென்று சொல்லுமவ் வல்லலெல்லாம்
வாதில்வென்றான் * எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே (58)

பேதையர்	(வேதத்தை ப்ரமாணமாகக் கொள்ளாத) அவிவேகிகள்
இது வேதப் பொருள் என்று உன்னி	"நாங்கள் சொல்லுகிற இது தான் வேதத்தின் அர்த்தம்" என்று நிரூபித்துக்கொண்டு
பிரமம் நன்று என்று ஓதி	பரப்ரஹ்மமானது எல்லாவற்றினும் விலக்ஷணம் என்று சொல்லி
மற்று எல்லா உயிரும் அஃது என்று	"அந்த ப்ரஹ்மந்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளும் அந்த ப்ரஹ்மமே" என்று சொல்லி
உயிர்கள் மெய்விட்டு	ஜீவாத்மாக்கள் தேஹத்தை விட்ட பின்பு
ஆதி பரனோடு ஒன்று ஆம்	ஸர்வ காரண பூதனான பரம புருஷனோடே ஐக்கியத்தையடைகின்றன என்று
என்று சொல்லும் அவ் அல்லல் எல்லாம்	சொல்லுகிற அந்த கோலாஹலங்களையெல்லாம்
மெய் மதி கடல்	தத்வஞாநக் கடலாகிய
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
வாதில் வென்றான்	வாதத்தில் நிரஸித்து வெற்றி பெற்றார்

* * * எம்பெருமானார் குத்ருஷ்டிகளின் குத்ஸிதமான வாதங்களைக் கண்டித்தபடிகளில் ஒருபடியைச் சொல்லி ஈடுபடுகிறார். சில மூர்க்கர்கள் தாங்கள் சொல்லுவதே வேதங்களின் உண்மையான பொருள் என்று கொக்கரித்துக் கொண்டு அபார்த்தங்களைப் பிதற்றுவார்கள். பரப்ரஹ்மம் ஸர்வவிலக்ஷணம்; ஜீவாத்மாக்களெல்லாம் பரப்ரஹ்மத்தில் ஓர் பகுதி; இப்போது உபாதியினால் வெவ்வேறாகத் தோன்றுகின்றன; அவ்வுபாதி கழிந்தபின் ஜீவர்களெல்லாம் பரப்ரஹ்மத்தோடு ஒற்றுமையை அடைந்து விடுகின்றன என்று மூர்க்கர் பிதற்றும் பிதற்றல்களையெல்லாம் தத்வஜ்ஞான நிதியான எம்பெருமானார் வாதில் கண்டித்து உண்மைப் பொருளை ஸ்தாபித்து வெற்றி பெற்றாரென்கிறது.

பிரமம் – ப்ரஹ்மம் என்ற வடசொல்விகாரம். உயிர்கள் மெய்விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாம் – ஜீவாத்மாக்கள் பரப்ரஹ்மத்தோடு ஐக்கியப்படுவது தான் மோக்ஷம் என்று குத்ருஷ்டிகள் உபபாதிப்பார்கள். "தத் த்வமஸி" என்றும் "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி" என்றுமுள்ள வேதவாக்யங்களுக்கு இப்படி அபார்த்தம் பண்ணுவார்கள்.

வென்றான் என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் வினையாலணையும் பெயராகக்கொண்டு வாதில் வென்றவராகிய எம்பெருமானார், மெய்ம்மதிக் கடல் – ஸத்யஜ்ஞாந ஸமுத்ரமாயிருப்பவர் என்று முடிப்பதாக உரைத்தலுமாம். (58)

~~*~*~*~*~*~*~*

59. கடலளவாகிய திசையெட்டினுள்ளும் * கலியிருளே
மிடைதரு காலத்திராமாநுசன் * மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத்துரந்திலனேல் * உயிரை
யுடையவன் நாரணனென்றறிவாரில்லை யுற்றுணர்ந்தே (59)

கடல் அளவு ஆய	நான்கு ஸமுத்ரங்களை எல்லையாகவுடைய
திசை எட்டினுள்ளும்	எல்லாவிடங்களிலும்
கலி இருளே மிடைதரு காலத்து	கலி புருஷனாகிற அந்தகாரமே நெருங்கிக் கிடந்த காலத்தில்
இராமாநுசன்	எம்பெருமானார் (திருவவதரித்து)
நான் மறையின்	நான்கு வேதங்களின்
மிக்க சுடர் ஒளியால்	அளவற்ற தேஜஸ்ஸைக் கொண்டு
அவ்விருளை துரந்திலன் ஏல்	அந்த கலிதோஷத்தைப் போக்கியிராமற் போனால்
உயிரை உடையவன் நாரணன் என்று	எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஸ்ரீமந்நாராயணனே என்று
உற்று உணர்ந்து அறிவார் இல்லை	யாரும் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்

* * * என்னப்பனிராமாநுசன் திருவவதரித்து வேதார்த்தங்களை விளங்கக்காட்டியருளாவிடில் இவ்வுலகமனைத்தும் அஜ்ஞாநமயமாகவே கிடக்கும்; தைவாதீநமாக என்னப்பன் திருவவதரித்து எங்கும் வியாபித்துக்கிடந்த கலிபுருஷனுடைய தோஷங்களைத் தொலைத்து வேதச் சுடர்விளக்கேற்றி அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கடிக்கவே எல்லாரும் ஸ்ரீமந் நாராயணனே ஸர்வசேஷியென்கிற பரமார்த்தத்தை தெரிந்து உய்வு பெறலாயிற்று என்கிறார்.

மிடைதருதல் – நெருங்கியிருத்தல்; இடைவிடாது எங்கும் பரவியிருத்தல் (59)

~~*~*~*~*~*~*~*

60. உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் * திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறும் * மாமலராள்
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும்பதிதொறும் புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் * இராமாநுசனெங் குலக்கொழுந்தே (60)

குணம் திகழ்	ஆத்ம குணங்களால் விளங்குபவரும்
கொண்டல்	(ஔதார்யத்தில்) காளமேகத்தை ஒத்தவரும்
எம் குலம் கொழுந்து	எங்கள் குலத்துக்குத் தலைவருமான

இராமாநுசன்	எம்பெருமானார் (எங்கே எழுந்தருளியிருப்பவரென்றால்)
உணர்ந்த மெய்ஞானியர் யோகம் தொறும்	கற்றுணர்ந்த தத்வ ஞானிகளுடைய கோஷ்டிகளெங்கும்
திருவாய்மொழியின் மணம் தரும் இன் இசை மன்னும் இடம் தொறும்	திருவாய்மொழியினுடைய பரிமளம் மிக்க இனிய இசையுள்ள இடங்களெங்கும்
மாமலராள் புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதி தொறும் புக்கு நிற்கும்	பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற அழகிய மார்பையுடைய திருமால் எழுந்தருளியிருக்கிற திவ்ய தேசங்களெங்கும் எழுந்தருளியிருப்பார்

* * * ஞானம் தலையெடுத்த மஹான்களுடைய திரள் எங்கெங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம் எழுந்தருளியிருப்பவரும், திருவாய்மொழியின் பரமபோக்கியமான இசை எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கெல்லாம் ஸேவை ஸாதிப்பவரும், ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் எங்கெங்கு ஸந்நிதாநம் பண்ணுகிறானோ அந்தத் திருப்பதிகளெங்கும் புகுந்து நிற்பவருமான எம்பெருமானார் அஸ்மத்குல கூடஸ்தர் என்றாராயிற்று. (60)

~~*~*~*~*~*~*~*~*

61. கொழுந்துவிட்டோடிப் படரும் வெங்கோள் வினையால் *நிரயத்
தழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும் * அருமுனிவர்
தொழுந்தவத்தோ னெம்மிராமானுசன் தொல்புகழ் சுடர்மிக்
கெழுந்தது * அத்தால்நல்லதிசயங்கண்ட திருநிலமே. (61)

அரு முனிவர் தொழும் தவத்தோன்	அருமையான நிஷ்டையையுடைய மஹான்களாலே ஸேவிக்கப் பெற்றவராயும் ப்ரபத்தியாகிற தபஸ்ஸையுடையவராயுமிருக்கிற
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானாருடைய
தொல் புகழ்	நித்யமான கல்யாண குணங்கள்
கொழுந்து விட்டு ஓடி படரும் வெம் கோள் வினையால்	மேன் மேலும் அதிகமாகப் பெருகுகின்ற க்ரூரமாய் ப்ரபலமான துஷ்கர்மத்தாலே
நிரயத்து அழுந்தியிட்டேனை	ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்திக் கிடந்த என்னை
வந்து ஆள் கொண்ட பின்னும் சுடர் மிக்கு எழுந்தது	வந்து ஆட்படுத்திக் கொண்ட பின்பும் ஒளி குன்றாதே முன்னிலும் விசேஷமாக விளங்காநின்றன
அத்தால்	அதைக் கண்டு
இரு நிலம்	விசாலமான இப்பூமண்டலம்
நல் அதிசயம் கண்டது	மிக்க ஆச்சரியங் கொண்டது

* * * எம்பெருமானாருடைய குணங்கள் மஹாபாபியான என்னை ஆட்படுத்திக்கொண்டவளவோடு த்ருப்திபெற்று விடாமல் “இப்படிப்பட்ட பாபிகள் இன்னும் யாரேனும் கிடைப்பாருண்டோ? கிடைப்பாருண்டோ?” என்று இன்னமும் நாக்கு நீட்டிக்கிளர்ந்து செல்லுகின்றன என்றும் கருத்தாகும். (61)

~~*~*~*~*~*~*~*

62. இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி * இன்றுயானிறையும்
வருந்தேனினியெம்மிராமாநுசன் * மன்னுமாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கொன்றும் நன்மை செய்யாப்
பெருந்தேவரைப்பரவும் * பெரியோர்தம் கழல்பிடித்தே (62)

எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானாருடைய
மன்னுமா தாள் மலர்	சிறந்த திருவடித்தாமரைகளில் சேராத ஸ்வபாவத்தையுடையவர்களான நீசர்களுக்கு
பொருந்தா நிலை உடை	
புன்மையினோர்க்கு	
ஒன்றும் நன்மை செய்யா	ஒருவிதமான உபகாரமும் செய்யாதே
பெரு தேவரை	பெரிய பெருமாளை
பரவும்	போற்றுகின்ற
பெரியோர் தம்	ஆழ்வானாகிற மஹானுடைய
கழல் இன்று பிடித்து	திருவடிகளை இன்று ஆச்ரயித்தேனான பின்பு
இரு வினை பாசம் கழற்றி	புண்ணியம் பாவமென்று இரண்டு வகையான கரும பாசங்களினின்று
இருந்தேன்	விடுபட்டவனானேன்
யான்	இப்படி நிர்மலனாகப் பெற்ற அடியேன்
இனி இறையும் வருந்தேன்	இனிமேல் கொஞ்சங் கூட வருத்தப்பட மாட்டேன்

* * * ஸ்ரீராமாநுச பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே ஸர்வஸ்வதாநம் பண்ணவல்ல பெரிய பெருமாளைப் போற்றா நின்ற கூரத்தாழ்வானை அடைந்து உஜ்ஜீவித்த அடியேனுக்கு இனி ஒரு வருத்தமும் விளையக் காரணமில்லையென்று தம்முடைய க்ருதக்ருத்யத்வத்தைக் கூறினாராயிற்று.

இருவினைப் பாசங்கழற்றி – பாவம்போலே புண்ணியமும் பரகதிக்குப் பிரதி பந்தகம் என்பதை உணர்க. பாவம் இரும்பு விலங்கென்றும், புண்ணியம் பொன் விலங்கென்றும் சாஸ்திரங்கள் கூறும். (62)

~~*~*~*~*~*~*~*

63. பிடியைத்தொடருங் களிறென்ன * யானுன்பிறங்கியசீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் * அறுசமயச்
செடியைத் தொடரும் மருள்செறிந்தோர் சிதைந்தோட வந்திப்
படியைத் தொடரும் * இராமாநுச மிக்க பண்டிதனே (63)

அறு சமயம் செடியை	பாஹ்யமான ஆறு மதங்களாகிற தூறுகளிலே படிவதற்குக் காரணமான அவிவேகம்
தொடரும் மருள் செறிந்தோர்	நிறைந்த மூடர்கள்
சிதைந்து ஓட	பங்கமடைந்து வெருவி ஓடும்படியாக
வந்து இப் படியை தொடரும்	இப்பூமியிலே வந்து அவதரித்து (நம்போல்வாரை விஷயீகரிப்பதற்குப்) பின் தொடர்கின்ற
மிக்க பண்டிதன்	மஹா பண்டிதரான

இராமாநுச	எம்பெருமானாரே!
பிடியை தொடரும் களிறு என்ன	யானைப் பேடையைப் பின்பற்றித் திரிகின்ற ஆண் யானை போல
யான்	அடியேன்
சீர் பிறங்கிய உன் அடியை	ஸௌந்தரியம் முதலிய குணங்கள் விளங்குகின்ற தேவரீரது திருவடிகளைப்
தொடரும் படி நல்க வேண்டும்	பின்பற்றும்படி கிருபை செய்தருள வேண்டும்

* * * ஸ்வாமி! யானையானது தன் பேடையினிடத்துப் பெருங்காதல் கொண்டு அதனையே பின்பற்றித் திரிவதுபோல் அடியேன் தேவரீருடைய அழகிய திருவடிகளையே அளவற்ற அபிநிவேசத்தோடு அநுவர்த்தித்துச் செல்லும்படியாக அருள் புரிய வேணுமென்று வேண்டினாராயிற்று. (63)

~~*~*~*~*~*~*~*~*

64. பண்டருமாறன் பசுந்தமிழ் * ஆனந்தம் பாய்மதமாய்
விண்டிடவெங்க ளிராமாநுசமுனிவேழம் * மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது * வாதியர்காளுங்கள் வாழ்வற்றதே (64)

எங்கள் இராமாநுச முனி வேழம்	எங்களுக்கு விதேயமான ஸ்ரீராமாநுச முனியாகிற மத்தகஜமானது
மாறன்	நம்மாழ்வார்
பண்	இசைகளாலே
தரு	அருளிச்செய்த
பசுந்தமிழ் ஆநந்தம்	செந்தமிழான திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம்
பாய்மதம் ஆய் விண்டிட	பெருகுமதநீராக ஒழுகப்பெற்று
மெய்ம்மை கொண்ட நல் வேதம் கொழு தண்டம் ஏந்தி	ஸத்யவாதியான நல்ல வேதமாகிற பெரிய தடியைத் தூக்கிக் கொண்டு
குவலயத்தே	இப்பூமண்டலத்திலே
மண்டி வந்து ஏன்றது	உங்களை நெருக்கிக் கொண்டு வந்து மேலிடா நின்றது
வாதியர்காள்	துர்வாதிகளே!
உங்கள் வாழ்வு அற்றது	உங்களுடைய பிழைப்பு போயிற்று

* * * குத்ஸிதவாதங்கள் பண்ணுகிற துர்வாதிகளே! இனி நீங்கள் பிழைக்க வழியில்லையென்று நிச்சயித்துக் கொள்ளுங்கள்; ஏன் ? என்கிறீர்களோ? எம்பெருமானாரென்னும் ஒரு மத யானையானது உங்களைப் புடைப்பதாகப் பெரிய தடியையெடுத்துக்கொண்டு எதிரிட்டு வாரா நின்றது; இதற்குத் தப்பிப்பிழைக்க உங்களாலாகாது என்கிறார்.

யானைக்கு மதநீர் பெருகுமே; இந்த ஸ்ரீராமாநுஜ கஜராஜனுக்கு எது மதநீர் என்ன; முதலடியிற் கூறுகின்றார். திருவாய்மொழியின் அநுபவத்தாலுண்டாலான ஆநந்தரஸமே இந்த கஜராஜனுக்கு மதநீர் பெருக்காம். இதனால், எம்பெருமானார் எப்போதும் திருவாய்மொழியை அநுபவித்துக் களிப்புறுவர் என்றதாகிறது. (64)

~~*~*~*~*~*~*~*~*

65. வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு* என்றும்மறையவர் தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது * தத்துவநூல்
கூழற்றது குற்றமெல்லாம்பதித்த குணர்த்தினர்க்கந்
நாழற்றது * நம்மிராமாநுசன் தந்தஞானத்திலே (65)

நம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
தந்த ஞாலத்தில்	அருளின ஞாலத்தினால்
தொல்லை வாதியர்க்கு	நெடுநாளாக இருந்த துர்வாதியர்களுக்கு
வாழ்வு அற்றது	வாழ்ச்சி அற்றுப் போயிற்று
மறையவர் தம் தாழ்வு	வைதிகர்களுடைய குறை
என்றும் அற்றது	இனி ஒரு நாளும் இல்லாதபடியாயிற்று
தாரணி	பூமண்டலமானது
தவம் பெற்றது	பாக்கியம் பெற்றது
தத்துவம் நூல்	தத்வபரமான சாஸ்திரங்கள்
கூழ் அற்றது	ஸந்தேஹமற நிச்சயமான பொருளைத் தெரிவிப்பவையாயின
குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு	பல்வகைக் குற்றங்களும் நிறந்த ஸ்வபாவத்தையுடைய ஜனங்களுக்கு
அ நாழ் அற்றது	அந்தக் குற்றங்கள் நீங்கின

* * * எம்பெருமானார் இவ்வுலகில் அவதரித்து உபதேசாதி முகத்தாலே உண்டாக்கின தத்துவ ஞானத்தால் பலித்த அம்சங்கள் எவையென்றால், துர்வாதிகளுடைய வாழ்வு மாண்டது; வைதிகர்களுக்கு இருந்த ஸங்கடங்கள் அற்றுப் போயின; பூமண்டலம் மஹாபாக்யம் பெற்றது; தத்வ சாஸ்த்ரங்களில் எவ்விதமான ஸந்தேஹமும் உண்டாகாதபடி நிச்சய ஞானமே உண்டாயிற்று; பாவிகளின் பாவங்களெல்லாம் தொலைந்து போயின; ஆகிய இவை எம்பெருமானாரளித்த தத்துவ ஞானத்தின் பயனாகத் தோன்றினவை என்றாராயிற்று.

தொல்லைவாதியர் – வைதிகர்கள் தாம் அநாதியாகவுள்ளவர்; துர்வாதிகளும் அநாதியாக உண்டோவெனில், பயிருள்ளபோதே தொடங்கிக் களையுமுண்டாவது போல, பாஹ்யர் குத்ருஷ்டிகள் என்கிற வாதிகளும் பழையராகவே யுண்டென்க.

தரணி என்ற வடசொல் தாரணியென நீட்டல் விகாரம் பெற்றது. கூழ் – ஸந்தேஹம். நாழ் – குற்றம். (65)

~~*~*~*~*~*~*~*

66. ஞானம்கனிந்த நலங்கொண்டு * நாடொறும் நைபவர்க்கு
வானங்கொடுப்பது மாதவன் * வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்த விராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
தானங்கொடுப்பது * தன்தகவென்னும் சரண்கொடுத்தே. (66)

மாதவன்	திருமால்
வானம் கொடுப்பது	மோக்ஷம் அளிப்பது
	எப்படிப்பட்டவர்களுக்கென்றால்
ஞானம் கனிந்த நலம் கொண்டு	ஞானம் பக்திரூபமாகப் பரிபக்வமாகி அந்த பக்தியினால் நித்யம்

நாள் தொறும் நைபவர்க்கு	உருகுகிறவர்களுக்கேயாம்
வல் வினையேன் மனத்தில்	மாஹாபாபியான எனது ஹ்ருதயத்திலிருந்த கல்மஷங்களைப் போக்கடித்த
ஈனம் கடிந்த இராமாநுசன்	எம்பெருமானார்
தன்னை எய்தினர்க்கு	தம்மைப் பற்றினவர்களுக்கு
அத்தானம் கொடுப்பது	அந்த மோக்ஷ ஸ்தானத்தை அளிப்பது
	எவ்விதமாக வென்றால்
தன் தகவு என்னும் சரண்	தம்முடைய க்ருபையாகிற ஸ்தானத்தை (அவர்களுக்கு கைம் முதலாகக்)
கொடுத்து	கொடுத்து. [தமது திவ்ய க்ருபையாலே]

* * * அடியார்களுக்கு மோக்ஷமளிக்கிற அதிகாரம் எம்பெருமானுக்குமுண்டு, எம்பெருமானார்க்குமுண்டு. எம்பெருமான் அளிப்பது மிகவும் ச்ரமப்படுத்தியே; எம்பெருமானார் அளிப்பது கேவலம் தம்முடைய திருவருளாலே என்கிறார் இதில்.

ஞானமானது நன்றாகக் கனிந்து அது பக்தி, பரபக்தி, பரமபக்தி என்னும்படியான அவஸ்தைகளையடைந்து, அதனால் இந்த ஸம்ஸாரத்தில் க்ஷணகாலமிருப்பதும் அஸஹ்யமாய் ஆழ்வார்களைப்போல "ஒரு பகலாயிர மூழியாலோ" என்று துடிப்பவர்களுக்குத்தான் எம்பெருமான் முக்தியளிப்பது. எம்பெருமானாரோ வென்னில் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யாராகையாலே அடியார்களிடத்தில் எவ்விதமான க்லேசத்தையும் எதிர்பாராமல் தமது திருவருளைக்கொண்டே அவர்களைக் கரையேற்றுவர் என்றதாயிற்று.

வல்வினையேன் மனத்திலீனங்கடிந்த என்பதற்கு மாதவனை அடிபணிந்து வருந்துகையாகிற ஈனத்தை எனக்குத் தவிர்த்த எம்பெருமானார் என்று உரைக்கவுமாம். (66)

~~*~*~*~*~*~*~*

67. சரணமடைந்த தருமனுக்கா * பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன் * தன்னை வணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென் றிராமாநுச னுயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் * அரணார்மற்றிவ் வாருயிர்க்கே. (67)

சரணம் அடைந்த தருமனுக்கு ஆ	தன்னைச் சரணம் பற்றின தர்ம புத்ரருக்காக
பண்டு	முற்காலத்திலே
நூற்றுவரை	துரியோதனன் முதலிய நூறு பேர்களை
மரணம் அடைவித்த மாயவன்	சாகும்படி செய்த எம்பெருமான்
தன்னை வணங்க வைத்த	தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்தி வைத்த இந்திரியங்களாம் இவை
கரணம் இவை	
உமக்கு அன்று	உங்களுக்கு உரிமைப் பட்டவையல்ல
என்று	என்று இவ்வாறாக உபதேசித்து
இராமாநுசன்	எம்பெருமானார்
உயிர்கட்கு	ஆத்மாக்களுக்கு
அரண் அமைத்திலன் ஏல்	ரக்ஷையைக் கற்பித்திலராகில்
இ ஆர் உயிர்க்கு	இந்த அருமை ஆத்மாக்களுக்கு
மற்று அரண் ஆர்	வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை)

~~*~*~*~*~*~*~*~*

68. ஆரனெக்கின்று நிகர்சொல்லில் * மாயனன்றைவர்தெய்வத்
தேரினில்செப்பிய கீதையின்செம்மை * பொருள்தெரியப்
பாரினில்சொன்ன விராமாநுசனைப் பணியும் நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது * என்னாவியும் சிந்தையுமே. (68)

மாயன்	ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான்
அன்று	முற்காலத்தில்
ஐவர்	பஞ்சபாண்டவர்களுடைய
தெய்வம் தேரினில்	தெய்வத் தன்மை பொருந்திய தேரின்மீது (இருந்து கொண்டு)
செப்பிய	அருளிச்செய்த
கீதையின்	பகவத் கீதையினுடைய
செம்மை பொருள்	ஸ்வரஸமான அர்த்தத்தை
தெரிய	(அனைவரும் எளிதாகத்) தெரிந்து கொள்ளும்படி
பாரினில்	இப்பூமியிலே
சொன்ன	(கீதா பாஷ்யமுகத்தாலே) அருளிச்செய்த
இராமாநுசனை	எம்பெருமானாரை
பணியும்	ஆச்ரயித்திருக்கிற
நல்லோர்	விலக்ஷண புருஷர்களுடைய
சீரினில்	கல்யாண குணங்களிலே
என் ஆவியும் சிந்தையும்	எனது ஆத்மாவும் மநஸ்ஸும்
சென்று பணிந்தது	சென்று சேர்ந்துவிட்டன
சொல்லில்	சொல்லுமளவில்
இன்று	இக்காலத்தில்
எனக்கு ஆர் நிகர்	எனக்கு ஆர் ஒப்பாவார்?

~~*~*~*~*~*~*~*~*

69. சிந்தையினோடு கரணங்கள்யாவும் சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * அவையென்றனக் கன்றருளால்
தந்தவரங்கனும் தன் சரண்தந்திலன் தானதுதந்து *
எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனனின் றென்னையே. (69)

முன் நாள்	ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில்
சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து	சிந்தையும் இந்திரியங்கள் எல்லாம் அழிந்து
அந்தம் உற்று ஆழ்ந்தது கண்டு	உபஸம்ஹாரத்தையடைந்து அசேதநப்ராயமா யிருப்பதைப் பார்த்து
என் தனக்கு	(அப்படி அசேதந ப்ராயராய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு
அவை	அந்த கரண களேபரங்களை

அன்று	அக்காலத்தில்
அருளால் தந்த அரங்கனும்	க்ருபையாலே உண்டாக்கின எம்பெருமானும்
தன் சரண் தந்திலன்	தனது திருவடிகளைக் காட்டிக்கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை
	(அக்குறை நீங்க)
எந்தை இராமானுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
தான் வந்து	தாமாகவே வந்து
அது தந்து	அந்தத் திருவடிகளைத் தந்தருளி
இன்று என்னை எடுத்தனன்	இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார்.

~~*~*~*~*~*~*~*~*

70. என்னையும் பார்த்தென்னியல்வையும்பார்த்து * எண்ணில் பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம்* அன்றியென்பால்
பின்னையும் பார்க்கில் நலமுளதேயுன் பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் * இராமானுசா உன்னைச் சார்ந்தவரே. (70)

இராமானுசா	எம்பெருமானாரே!
என்னையும் பார்த்து	(ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி
என் இயல்வையும் பார்த்து	(இனி மேலும் எவ்வித நன்மையும் ஸம்பாதித்துக் கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி
எண் இல் பல் குணத்த உன்னையும் பார்க்கில்	எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில்
அருள் செய்வதே நலம்	(இப்போது போல எப்போதும்) அருள் செய்திருப்பதே நல்லது
அன்றி	இதுவொழிய
பின்னையும் பார்க்கில்	மேலும் ஆராயுமளவில்
என் பால் நலம் உளதே	என்னிடத்தில் ஏதாவது நன்மையுண்டோ? (சிறிதும் இல்லை)
	(நன்மையொன்றுமில்லாவிடில் நாம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம் பற்றினால்)
உன்னை சார்ந்தவர்	தேவரீரை ஆச்ரயித்தவர்கள்
உன்பெரு கருணை தன்னை என் பார்ப்பர்	தேவரீருடைய கிருபையைப் பற்றி என்ன நினைப்பர்கள்? இளப்பமாக நினையார்களோ!

~~*~*~*~*~*~*~*~*

71. சார்ந்ததென்சிந்தையுன் தாளிணைக்கீழ் * அன்புதான் மிகவும்
கூர்ந்ததத் தாமரைத்தாள்களுக்கு * உந்தன் குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கை முன்செய்வினை நீ செய்வினையதனால்
பேர்ந்தது * வண்மை யிராமானுசா! எம்பெருந்தகையே. (71)

வண்மை	ஔதார்யமுடையவரும்
எம்	எமக்கு ஸ்வாமியும்
பெரு தகை	பெருந்தன்மையுடையவருமான

இராமாநுசா	எம்பெருமானாரே!
என் சிந்தை	எனது நெஞ்சு
உன் தாள் இணை கீழ் சார்ந்தது	தேவரீருடைய உபயபாதங்களின் கீழ் அமர்ந்து விட்டது
அன்புதான்	பக்தியும்
அத் தாமரைத் தாள்களுக்கு	அந்தத் திருவடித் தாமரைகள் விஷயத்திலேயே
மிகவும் கூர்ந்தது	மிகவும் அதிகரித்தது
என் செய்கை	எனது செயலும்
உன் தன் குணங்களுக்கே தீர்ந்தது	தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது
முன் செய்வினை	முன்னே செய்த பாவங்களெல்லாம்
நீ செய் வினை அதனால் பேர்ந்தது	தேவரீர் செய்தருளின (கடாக்ஷமாகிற) காரியத்தாலே தொலைந்து போயின

~~*~*~*~*~*~*~*

72. கைத்தனன்தீய சமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன்தூய மறைநெறிதன்னை * என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போ டிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை * இராமாநுசன்மிக்க வண்மைசெய்தே. (72)

இராமாநுசன்	எம்பெருமானார்
மிக்க வண்மை செய்து	தமது ஔதார்ய குணத்தை அதிகமாகக் காட்டி
தீய சமயம் கலகரை	தீய மதங்களிலிருந்துகொண்டு கலஹஞ் செய்கிறவர்களை
கைத்தனன்	ஒழித்துவிட்டார்
தூய	பரிசுத்தமான
மறை நெறி தன்னை	வேதமார்க்கத்தை
காசினிக்கு உய்த்தனன்	பூமியிலே ஸ்தாபித்தருளினார்
என்று உன்னி	என்று அநுஸந்தித்து
உள்ளம் நெய்து	நெஞ்சு கனிந்து
அவ்வன்போடு இருந்து	அந்த ப்ரீதியோடே கூடியிருந்து
ஏத்தும்	(அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற
நிறை புகழோருடனே	புகழ் நிறைந்த மஹான்களோடே
என்னை வைத்தனன்	(என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார்

* * * நிறைபுகழோருடனே வைத்தனன் – அஸத்துக்களோடே பழகிக்கிடந்த என்னை ஸத்துக்களோடே கூட்டி வைத்தார் என்னவுமாம். (72)

~~*~*~*~*~*~*~*

73. வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞான முரைத்தவிராமா நுசனையென்னும்
திண்மையில்லாலெனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே (73)

தன் வண்மையினாலும்	தம்முடைய ஔதார்ய குணத்தாலும்
மா தகவாலும்	பரம க்ருபையாலும்
மதி புரையும் தண்மையினாலும்	சந்திரனையொத்த திருவுள்ளக் குளிர்ச்சியாலும்
இத்தாரணியோர்கட்கு	இப்பூமியிலுள்ளவர்களுக்கு
தான் சரண் ஆய்	தாமே ரக்ஷகராய்க் கொண்டு
உண்மை நல் ஞானம் உரைத்த இராமாநுசனை	யதார்த்தமாய் விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கிற எம்பெருமானாரை
உன்னும் திண்மை அல்லால்	சிந்திப்பதாகிற அத்யவஸாயமொன்று தவிர
தேர்ந்திடில்	ஆராயுமளவில்
எனக்கு மற்று ஓர் நிலை இல்லை	அடியேனுக்கு வேறொரு அத்யவஸாயமில்லை

~~*~*~*~*~*~*~*~*

74. தேரார்மறையின் திறமென்று * மாயவன் தீயவரைக்
கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம் மிராமாநுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே. (74)

மறையின் திரம் தேரார் என்று	(இப்பாவிகள்) வேதஞ் சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லை யென்று
தீயவரை	பாவிகளை
மாயவன்	எம்பெருமான்
குறைப்பது	தண்டிப்பது
கூர் ஆழி கொண்டு	கூர்மையான தனது திருவாழியாலே
கொண்டல் அனைய வண்மை	மேகம் போன்ற ஔதார்ய குணமுடையவரும்
ஏர் ஆர் குணத்து	(மற்றும்) பல நல்ல குணங்களுடையவருமான
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
அ எழில் மறையில் சேராதவரை சிதைப்பது	அந்த சிறந்த வேதத்தில் அந்வயியாதவர்களை பங்கப் படுத்துவது (எப்படி யென்றால்)
அப்போது ஒரு சிந்தை செய்து	அப்போதப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம்

* * * எம்பெருமான் தனது ஆஜ்ஞாரூபமான வேதங்களின் கட்டளைப்படி நடவாத கொடியவர்களைத் தனது திருவாழியைக் கொண்டு த்வம்ஸம்பண்ணிவிடுவன். எம்பெருமானாரோவென்னில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக் கொள்வதில்லை. வேதங்களை அடியோடு ஒப்புக்கொள்ளாத பாஹ்யர்களையும், வேதங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டு அவற்றில் அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையும் வாதப் போரில் அப்போதப்போது திருவுள்ளத்தில் ஸ்புரிக்கின்ற நல்லயுக்திகளைக்கொண்டு கண்டித்து விடுவர் என்கை. (74)

~~*~*~*~*~*~*~*~*

75. செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசாவென்னை முற்றுநின்றே. (75)

செய் தலை	வயல்களில்
சங்கம்	சங்குகளானவை
செழு முத்தம்	அழகிய முத்துக்களை
ஈனும் திரு அரங்கர்	உண்டாக்குமிடமான திருவரங்க மாநகரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள்
கை தலத்து	தமது திருக்கையிலே
ஆழியும் சங்கமும் ஏந்தி	திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக்கொண்டு
நம் கண் முகப்பே	நமது கண்ணெதிரில்
மொய்த்து	வந்து நெருங்கி
அலைத்து	புத்தியைக் கெடுத்து
உன்னை விடேன் என்று இருக்கிலும்	உன்னை விடமாட்டேன் என்று இருந்தாலும்
இராமாநுசா	எம்பெருமானாரே!
நின் புகழே	தேவரீருடைய திவ்ய குணங்களே
என்னை வந்து முற்றும் மொய்த்து நின்று	என் பக்கல் வந்து சூழ்ந்து கொண்டு
அலைக்கும்	ஆகர்ஷிக்கின்றன

* * * எம்பெருமான் தனது விலக்ஷணமான அழகைக் காட்டிக் கொண்டு வந்து என் கண்ணெதிரே நின்றாலும், என்னை விடாதே வலியப்பற்றினாலும் அவனது அழகில் நான் மோஹிக்கப் பெறுவதில்லை. தேவரீருடைய திருக்குணங்களே என்னை ஈடுபடுத்துகின்றன. பகவத் குணங்களுக்கு நான் ஈடுபடுவதில்லை யென்றாராயிற்று.

“செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும்” என்கிற விசேஷணம் – திருவரங்கர் என்பதன் பகுதியாகிய திருவரங்கத்தில் அந்வயிக்கும் திருவரங்கம் எப்படிப்பட்டதென்றால், முத்துக்களை யுதிர்க்கும் சங்குகள் நிறைந்த வயல் சூழ்ந்தது என்றவாறு. ஈனுதல் – பிரஸவித்தல். (75)

~~*~*~*~*~*~*~*~*

76. நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் *
உன்றனக்கெத்தனை யின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமது * இராமாநுசா இவை யீந்தருளே. (76)

இராமாநுசா	எம்பெருமானாரே!
நின்ற வண்கீர்த்தியும் நீள்	நிலை நின்ற பெரும் புகழும் அதிகமான நீர்ப் பெருக்கும் நிறைந்துள்ள

புனலும் நிறை	
வேங்கடம் பொன் குன்றமும்	திருவேங்கடமென்னும் அழகிய திருமலையும்
வகுந்தம் நாடும்	ஸ்ரீ வைகுண்டமாகிய திரு நாடும்
குலவிய பால் கடலும்	கொண்டாடத்தக்க திருப்பாற் கடலும்
உன் தனக்கு	தேவரீருக்கு
எத்தனை இன்பம் தரும்	எவ்வளவு ஆநந்தத்தை விளைக்குமோ
உன் இணை மலர்தாள்	தேவரீருடைய உபய பாதாரவிந்தங்கள்
என் தனக்கும் அது	எனக்கும் அவ்வளவு ஆநந்தத்தையுண்டாக்கும்
இவை	இப்படிப்பட்ட திருவடிகளை
ஈந்தருள்	அடியேனுக்குத் தந்தருள வேணும்

* * * கீழ்ப்பாட்டில் அமுதனார் விளக்கிய பரமபக்தியை அறிந்த எம்பெருமானார் மிகவும் உகந்தருளி "இவர்க்கு நாம் எதைச் செய்வோம்" என்றிருப்பதாகக் கண்ட அமுதனார், "ஸ்வாமிந்! அடியேனுக்குத் தேவரீர் வேறொன்றும் செய்தருள வேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய இந்தத் திருவடித் தாமரைகளைத் தந்தருள வேண்டுமத்தனை" யென்கிறார். (76)

~~*~*~*~*~*~*~*~*

77. ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைகுறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினா லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மை யிராமாநுசற்கென் கருத்தினியே. (77)

ஈயாத	(இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத
இன் அருள்	விலக்ஷணமான க்ருபையை
ஈந்தனன்	அடியேனுக்குச் செய்தருளினவரும்
எண் இல் மறை குறும்பை	எண்ணிறந்த வேத விரோதி மதங்களை
அம்மறை பல் பொருளால்	அந்த வேதங்களின் அர்த்தங்களையே கொண்டு கண்டித்தவரும்
பாய்ந்தனன்	
கீர்த்தியினால்	தமது கீர்த்தியாலே
இப்படி அனைத்தும் ஏய்ந்தனன்	இப்பூமியெங்கும் வியாபித்தவரும்
என் வினைகளை	எனது கருமங்களை
வேர் பறிய காய்ந்தனன்	வேரோடே அறும்படி போக்கினவரும்
வண்மை	ஔதார்யமே வடிவு கொண்டவருமான
இராமாநுசற்கு	எம்பெருமானார்க்கு
இனி என் கருத்து	இன்னமும் (செய்யத்தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனுமுண்டோ?

* * * கீழ்ப்பாட்டில் தாம் அபேக்ஷித்தபடியே திருவருளைத் தந்தருளப்பெற்று, க்ருத க்ருத்யராய், அவர் செய்தருளின உபகாரங்களை அநுஸந்தித்து, இவையெல்லாம் செய்த பின்பு இன்னமும் செய்தருள்வதாகத் திருவுள்ளம் பற்றியிருப்பது எதுவோ என்கிறார்.

மறைக்குறும்பாவது – வேதத்திற்கு மாறாகச்சொல்லும் தப்புப் பொருள்கள். ஈந்தனன், பாய்ந்தனன், ஏய்ந்தனன், காய்ந்தனன் என்பவற்றை வினைமுற்றாகவே கொண்டு உறைத்தலுமாம். (77)

~~*~*~*~*~*~*~*

78. கருத்தில்புகுந்துள்ளில்கள்ளம்கழற்றி * கருதரிய
வருத்தத்தினால் மிகவஞ்சித்து * நீ யிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச! மற்றோர் பொய்ப்பொருளே. (78)

எம் இராமாநுச	எம்பெருமானாரே!
நீ	தேவரீர்
கருத அரிய வருத்தத்தினால் மிக வஞ்சித்து	நெஞ்சால் நினைக்கமுடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை நன்றாக ஏமாத்தி
கருத்தில் புகுந்து	(எனது) நெஞ்சிலே வந்து புகுந்து
உள்ளில் கள்ளம் கழற்றி	உள்ளேயிருந்து ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி
திருத்தி	சிக்ஷித்து
இந்த மண் அகத்தே	இந்த லோகத்திலே
திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின்	திருமாலுக்கு ஆளாம்படி பண்ணின பின்பு
மற்று ஓர் பொய் பொருள்	(இதற்கு மாறான) வேறு எந்த தப்பு விஷயமும்
என்நெஞ்சில்	என் மனத்தில்
பொருத்தப் படாது	பொருந்தமாட்டாது

* * * எம்பெருமானார் தம்மைத் திருத்துகைக்காகப் பட்டபாடுகளை எடுத்துச் சொல்லி, இப்படி என்னைத் திருத்தி தேவரீருக்கு உத்தேச்யமான விஷயத்திலே ஆட்படுத்தின பின்பு இனி வேறு எந்த விஷயமும் என்னெஞ்சுக்கு இசையமாட்டாதென்கிறார். (78)

~~*~*~*~*~*~*~*

79. பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து * இந்தப்பூதலத்தே
மெய்யைப் புரக்குமிராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ள வல்லதெய்வமிங்கியாதென் றுலர்ந்து அவமே
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே (79)

பொய்யை சுரக்கும் பொருளை	பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (புற மதத்தவர்களின்)
துரந்து	அர்த்தங்களைக் கண்டித்து
இந்த பூதலத்தே	இப்பூமியிலே
மெய்யைப் புரக்கும்	ஸத்யத்தை ரக்ஷிக்கிற
இராமாநுசன்	எம்பெருமானார்

நிற்க	எழுந்தருளியிருக்கும் போது (இவரை கணிசியாமல்)
வையத்து உள்ளோர்	இப்பூமியிளுள்ளவர்கள்
நம்மை உய்யக்கொள்ளவல்ல	நம்மை உஜ்ஜீவிக்கச் செய்யக்கூடிய
வேறு தெய்வம் இங்கு யாது என்று	வேறு ஏதாவது தேவதை இவ்வுலகில் உண்டோ? என்று விசாரித்துக் கொண்டு
உலர்ந்து	மனவருத்தத்தாலே உடம்பு உலர்ந்து
நல் அறிவு இழந்து	(எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்றிருக்கையாகிற) நல்ல ஞானம் பெறாமல்
அவமே	வீணாக
ஐயம் படா நிற்பர்	ஸம்சயப்படா நின்றார்கள். ஐயோ!

* * * பொய்யைச் சுரக்கும் பொருளென்றது – பொய் தவிர வேறில்லாத அர்த்தம் என்றபடி. "ஸர்வம் அஸத்யம்" என்கிறவர்களாகையாலே அஸத்யமயம். மெய்யைப் புரக்கு மிராமாநுசன் – "யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்" என்று ஸ்தாபித்தருளினவர். புரத்தல் – காப்பாற்றுதல். (79)

~~*~*~*~*~*~*~*~*

80. நல்லார்பரவு மிராமாநுசன் * திருநாமம் நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்றுமெப் போதிலுமெத்தொழும்பும் *
சொல்லால்மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே. (80)

நல்லார் பரவும் இராமாநுசன்	ஸத்துக்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானாருடைய
திரு நாமம்	திருநாமத்தை
நம்ப வல்லார் திறத்தை	(தங்களுக்குத் தஞ்சமாக) நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை
மறவாதவர்கள் எவர்	மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ
அவர்க்கே	அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே
எல்லா இடத்திலும்	ஸகல தேசங்களிலும்
என்றும்	ஸகல அவஸ்தைகளிலும்
எப்போதிலும்	ஸகல காலங்களிலும்
எத்தொழும்பும்	ஸகலவித கைங்கரியங்களையும்
சொல்லால் மனத்தால் கருமத்தினனல்	மன மொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும்
சோர்வு இன்றி செய்வன்	பிரியாதேயிருந்து செய்வேன்

* * * தம்முடைய நிலைநின்ற நிஷ்டையைப் பேசுகிறார் இதில். ஸத்துக்களனைவரும் கொண்டாடும்படியான எம்பெருமானாருடைய திருநாமங்களையே தங்களுக்குத் தஞ்சமாக நம்பியிருக்கிற மஹான்களையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீராமாநுஜ பக்தபக்தர்களுக்கே அடியேன் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழிவிலா வடிமைகள் செய்யக்கடவே" னென்றாராயிற்று. தொழும்பு – அடிமை. (80)

~~*~*~*~*~*~*~*~*

81. சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்ற வெனக்கு * அரங்கன்செய்ய தாளிணைகள்
பேர்வின்றியின்று பெறுத்து மிராமாநுச வினியுன்
சீரொன்றிய கருணைக்கு * இல்லைமாறு தெரிவுறிலே. (81)

உன் தன் துணை அடி கீழ்	தேவரீருடைய உபய பாதங்களின் கீழே
சோர்வு இன்றி தொண்டு பட்டவர் பால்	சோராமல் அடிமைப்பட்டவர்கள் விஷயத்தில்
சார்வு இன்றி நின்ற எனக்கு	பொருத்தமில்லாமலிருந்த எனக்கு
இன்று	இன்றைத்தினத்தில்
அரங்கன் செய்ய தாள் இணைகள்	பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை
பேர்வு இன்றி பெருத்தும் இராமாநுசா	ஒருகாலும் விட்டு நீங்காத படி சிரோ பூஷணமாத தந்தருளின எம்பெருமானாரே!
இனி	இப்படியான பின்பு
தெரிவுறில்	ஆராயுமளவில்
உன்	தேவரீருடைய
சீர் ஒன்றிய கருணைக்கு	சிறந்த திருவருளுக்கு
மாறு இல்லை	ஒப்பு இல்லை

~~*~*~*~*~*~*~*~*

82. தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந் தீவினையால்
உருவற்றஞானத் துழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றானென்ன புண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்றும் சீர்முகிலே. (82)

தெரிவு உற்ற ஞானம் செரிய பெறாது	தெளிவான ஞானத்தைச் சேரப் பெறாமல்
வெம் தீ வினையால்	மிகவுங் கொடிதான கருமத்தாலே
உரு அற்ற ஞானத்து	உபயோகமற்ற ஞானத்தையுடையனாய் (ஒன்றிலும் நிலையிலாமல்) திரிகின்ற
உழல்கின்ற என்னை	என்னை
ஒரு பொழுதில்	ஒரு க்ஷணகாலத்தில்
பொருவு அற்ற கேள்வியன் ஆக்கி நின்றான்	ஒப்பற்ற பஹுச்ருதனாக ஆக்கியருளினவரும்
தெரிவு உற்ற கீர்த்தி	ப்ரஸித்தமான புகழையுடையவரும்
சீர் முகில் என்னும்	(ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத் தக்கவருமான
இராமாநுசன்	எம்பெருமானார்
என்ன புண்ணியனோ	என்ன தார்மிகரோ? [ஒப்பற்ற தர்மிஷ்டரென்றபடி]

~~*~*~*~*~*~*~*~*

83. சீர்கொண்டு பேரறம்செய்து * நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவ னுன்னுடைய
கார்கொண்ட வண்மை * இராமாநுசா! இது கண்டுகொள்ளே. (83)

இராமாநுசா	எம்பெருமானாரே!
சீர் கொண்டு	சமம் தமம் முதலிய குணங்களையுடையராய்
பேர் அறம் செய்து	சிறந்த தருமமாகிய சரணாகதி யோகத்தையநுஷ்டித்து
நல் வீடு செறிதும் என்னும்	பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற
பார்கொண்ட மேன்மையர்	ப்ரஸித்தமான ப்ரபாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியில் நான்
கூட்டன் அல்லேன்	சேர்ந்தவன் அல்லேன்
உன் பதயுகம் ஆம்	தேவரீருடைய உபயபாதங்களாகிற
ஏர் கொண்ட வீட்டை	பரம விலக்ஷணமான மோக்ஷத்தை
எளிதினில் எய்துவன்	ஸுலபமாக அடைந்திடுவேன்
கார் கொண்ட	(ஔதார்யத்தில்) மேகத்தை வென்றிருக்கிற
உன்னுடைய	தேவரீருடைய
வண்மை இது	ஔதார்யம் இப்படிப்பட்டது
கண்டு கொள்	தேவரீரே இதனைக் கண்டு கொள்ளலாம் (அடியேன் சொல்ல வேணுமோ?)

* * * சரமச்லோகத்திலே கண்ணபிரான் நியமித்தபடியே நாம் சரணாகதியை அநுஷ்டித்துவிட்டோமாகையால் நமக்கு மோக்ஷம் கைபுகுந்து விட்டதேயாமென்று அறுதியிட்டிருக்கும் மஹான்களில் அடியேன் சேர்ந்தவனல்லேன்; அப்படி அடியேன் ஒன்றும் அநுஷ்டிக்கவில்லை. தேவரீருடைய திருவடிகளாகிற மோக்ஷத்தை அடைந்திடத் தடையில்லையென்கிற மனவுறுதியே அடியேனுக்குள்ளது என்றாராயிற்று. (83)

~~*~*~*~*~*~*~*~*

84. கண்டுகொண்டே னெம்மிராமாநுசன் தன்னைக் காண்டலுமே*
தொண்டுகொண்டேனவன் தொண்டர்பொற்றாளில் * என் தொல்லை வெந்நோய்
விண்டுகொண்டேனவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத் தின்று
உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே. (84)

எம் இராமாநுசன் தன்னை	ஸ்வாமி எம்பெருமானாரை
இன்று கண்டு கொண்டேன்	இன்று (உள்ளபடி) தெரிந்து கொண்டேன்
காண்டலுமே	இப்படி தெரிந்துகொண்டவளவிலே
அவன் தொண்டர் பொன் தாளில்	அவரது பக்தர்களுடைய அழகிய திருவடிகளில்
தொண்டு கொண்டேன்	அடிமைப் பட்டேன் (அதனால்)
என் தொல்லை வெம் நோய்	எனது பழைய கொடு வினைகளை
விண்டு கொண்டேன்	நீக்கிக் கொண்டேன்
அவன் சீர்வெள்ளம் வாரியை	அவருடைய கல்யாண குண ப்ரவாஹமாகிற கடலை

வாய் மடுத்து உண்டு கொண்டேன்	வாயார அநுபவிக்கப் பெற்றேன்
இன்னம் உற்றன	இப்படியாக இன்னமும் நான் பெற்ற நன்மைகளை
ஓதில்	சொல்லத் தொடங்கினால்
உலப்பு இல்லை	(அதுக்கு) ஒரு முடிவு கிடையாது

* * * இனிமேலும் எம்பெருமானார் திருவருளால் நான் பெறப்போகிற நன்மைகள் அளவற உண்டு. எனினும் இன்றளவும் நான் பெற்ற பேறுகளுக்கு எல்லையுண்டோவென்றாராயிற்று. (84)

~~*~*~*~*~*~*~*~*

85. ஓதியவேதத்தி னுட்பொருளாய் * அதனுச்சி மிக்க
சோதியை நாத னெனவறியா துழல்கின்ற தொண்டர் *
பேதமைதீர்த்த விராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லாலென்றன் னாருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே. (85)

ஓதிய வேதத்தின் உள் பொருள் ஆய்	அத்யயநம் பண்ணப்படுகிற வேதங்களின் உட்பொருளாயும்
அதன் உச்சி மிக்க சோதியை	அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்குபவனாயுமுள்ள ஸ்ரீமந் நாராயணனை
நாதன் என அறியாது	ஸர்வ சேஷியென்று தெரிந்து கொள்ளாமல்
உழல்கின்ற தொண்டர்	கண்டவிடங்களிலும் அடிமை செய்து திரிகின்ற பாமரர்களுடைய
பேதைமை	அவிவேகத்தை
தீர்த்த	போக்கடித்த
இராமாநுசனை	எம்பெருமானாரை
தொழும்	ஸேவிக்கின்ற
பெரியோர்	மஹான்களுடைய
பாதம் அல்லால்	திருவடிகள் தவிர
என் தன் ஆர் உயிர்க்கு	எனது அருமையான ஆத்மாவுக்கு
யாது ஒன்றும் பற்று இல்லை	வேறு ஏதேனும் புகலிடமில்லை

* * * கீழ்ப்பாட்டில் “அவன் சீர் வெள்ளவாரியை வாய்மடுத்து உண்டு கொண்டேன்” என்றும் “அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்” என்றும் சொன்ன இரண்டு விஷயங்களுள் முதற்சொன்ன விஷயமே [அதாவது ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு பக்தனாயிருப்பதே] எனக்கு சிறந்த உத்தேச்யமென்கிறார் இதில். வேதத்தின் நுண் பொருள் என்றும் பிரிக்கலாம். (85)

~~*~*~*~*~*~*~*~*

86. பற்றாமனிசரைப்பற்றி * அப்பற்றுவிடாதவரே
உற்றாரென வுழன்றோடி நையேனினி * ஒள்ளிய நூல்
கற்றார்பரவு மிராமாநுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர் * அவரெம்மை நின்றாளும் பெரியவரே. (86)

பற்றா மனிசரை பற்றி	உபயோகமற்ற மநுஷ்யர்களைப் பற்றி
அப் பற்று விடாது	அந்தப் பற்றுதலை விடாமல்
அவரே உற்றார் என	அவர்களையே உறவினராகக் கொண்டு
உழன்று	அவர்கள் பின்னே அலைந்து
ஓடி	அவர்களிட்ட கார்யங்களைச் செய்ய ஓடி
இனி நையேன்	இனிமேல் துவள மாட்டேன்
ஒள்ளிய நூல் கற்றார்	சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே
பரவும்	கொண்டாடப்படுகிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
கருதும் உள்ளம் பெற்றார் யவர்	அநுசந்திக்கும்படியான நெஞ்சையுடையோர் யாவரோ
அவர்	அந்த மஹான்களே
எம்மை	நம்மை
நின்று ஆளும் பெரியவர்	சாச்வதமாக அடிமைகொள்ளும் மஹாத்மாக்கள்

* * * ஒள்ளிய நூல் – “சுடர்மிகு சுருதி” என்றார் ஆழ்வாரும். (86)

~~*~*~*~*~*~*~*

87. பெரியவர்பேசிலும் பேதையர் பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்வில் மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி யிராமாநுசன் மறை தேர்ந்துலகில்
புரியும்நன்ஞானம் * பொருந்தாதவரைப் பொரும் கலியே. (87)

பெரியவர் பேசிலும்	ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும்
பேதையர் பேசிலும்	ஒன்றுந் தெரியாதவர்கள் பேசினாலும்
தன் குணங்கட்கு உரிய சொல்	தனது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் உடையவரென்று
என்றும் உடையவன் என்று என்று	பலகாலுஞ் சொல்லி
உணர்வில் மிக்கோர் தெரியும்	சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கிற
வண் கீர்த்தி	திவ்யகீர்த்தியை யுடையரான
இராமாநுசன்	எம்பெருமானார்
மறை தேர்ந்து	வேதங்களை ஆராய்ந்து
உலகில்	இவ்வுலகத்தில்
புரியும்	உபதேசித்தருளின

நல் ஞானம் பொருந்தாதவரை	நல்ல ஞானத்தில் சேராதவர்களை
கலி பொரும்	கலிபுருஷன் பீடிப்பன்

* * * கீழ்பாட்டிற் கூறின அத்யவஸாயம் எனக்குக் கலியின் கொடுமையினால் ஒரு காலத்தில் மாறிவிடக் கூடுமென்று நினைக்கிறீர்களோ, அப்படி நினைக்க வேண்டா. இராமாநுசனடியார் திறத்தில் கலிபுருஷன் ஒரு கொடுமையும் செய்ய முடியாதவன். மற்றவர்களைத்தான் கலிபுருஷன் கெடுப்பன். எனது அத்யவஸாயம் நெடுநாளளவும் நிலைநிற்கக் கூடியதே என்றாராயிற்று.

[பெரியவர் பேசிலும் இத்யாதி] இதன் கருத்து யாதெனில் – எம்பெருமானாருடைய திருக்குணங்களை மஹாஞானிகள் தாம் பேசி முடிக்கவல்லவர்கள். அற்ப ஞானிகள், நம்மால் பேச முடியாதென்று பின்வாங்கக் கூடியவர்கள் என்பதில்லை. "தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலைச்சிறந்து பூசிப்ப" என்றும் "பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாசமலர்த்துழாய் மாலையான் வடிவு " என்றும் சொன்னார்போல, பெரியோர் சொன்னாலும் சிறியோர் சொன்னாலும் அவரவர்களுடைய யோக்யதைக்குத் தக்கபடி சொல்லித் துதிக்கத்தகுந்தவர் எம்பெருமானார் என்று பெரியோர்கள் தெரிந்துகொண்டு, நாம் நமது சக்திக்குத் தகுந்தபடி ஸ்தோத்ரம் பண்ணுவோமென்று துதிக்கின்றார்களென்கை. அப்படி துதிக்கப்படுகின்ற எம்பெருமானார் உபதேசித்த ஞானத்தை அநாதரித்து அவ்வுபதேசத்தின்படி நடவாதவர்களே கலிதோஷத்தினால் வருந்துவார்களென்றதாயிற்று. (87)

~~*~*~*~*~*~*~*~*

88. கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீய மிராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே. (88)

கலி மிக்க	நிலவளம் மிகுந்த
செந்நெல் கழனி	செந்நெல் கழனிகளையுடைய
குறையல்	திருக்குறையலூரில் அவதரித்தவராய்
கலை பெருமான்	சாஸ்த்ரமென்னும்படியான திவ்யப்ரபந்தங்களை யருளிச் செய்த பெருமை வாய்ந்த திருமங்கையாழ்வாருடைய
மிக்க ஒலி பாடலை	அதிசயித்த இசையையுடைய பெரிய திருமொழியை
உண்டு	அநுபவித்து
தன் உள்ளம் தடித்து	தமது திருவுள்ளம் பூரித்து
அதனால் வலி மிக்க	அத்தால் மிடுக்கு அதிகரித்த
சீயம்	சிங்கம் போன்ற
இராமாநுசன்	எம்பெருமானார்
மறை வாதியர் ஆம் புலி மிக்கது	வேதத்தில் துர்வாதங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள்
என்று இப்புவனத்தில் வந்தமை	அதிகமாய்விட்டனவென்று (அவற்றைத் தண்டிப்பதற்காக) இவ்வுலகில் அவதரித்த படியை
போற்றுவன்	புகழ்ந்திடக் கடவேன்

* * * கலிமிக்க செந்நெற் கழனி – கலியாவது ஆரவாரம்; உழுவது, நடுவது, அறுப்பதாய் சொல்லுகிற கோலாஹலம். (88)

~~*~*~*~*~*~*~*

89. போற்றரும் சீலத்திராமாநுச * நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வதுதீரில் * உன்சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலுமென் மனமேத்தி யன்றி
ஆற்றகில்லாது * இதற்கென்னினைவா யென்றிட் டஞ்சுவனே. (89)

போற்ற அரு சீலத்து	புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீல குணத்தையுடைய
இராமாநுச	எம்பெருமானாரே!
நின் புகழ்	தேவரீருடைய திருக்குணங்களை
தெரிந்து சாற்றுவனேல்	உணர்ந்து பேசுவனாகில்
அது	(நீசனாகிய நான்) பேசுகிறவது
தாழ்வு	(தேவரீருக்கு) அவத்யமாம்
அது தீரில்	அப்படி நான் பேசுவது தவிர்ந்தால்
உன் சீர் தனக்கு ஓர் ஏற்றம்	தேவரீருடைய திருக்குணங்களுக்கு மேன்மையாகும்
என்றே கொண்டு இருக்கிலும்	என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும்
என் மனம்	எனது நெஞ்சானது
ஏத்தி அன்றி	(தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்தல்லது
ஆற்றகில்லாது	தரித்திருக்க மாட்டாது
இதற்கு	இவ்விஷயத்திலே
என் நினைவாய் என்றிட்டு அஞ்சுவன்	தேவரீர் என்ன நினைக்குமோவென்று பயப்படுகின்றேன்

~~*~*~*~*~*~*~*

90. நினையார் பிறவியை நீக்கும்பிரானை * இந்நீணிலத்தே
எனையாள வந்த விராமாநுசனை * இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர்மாந்தர் மருள்சுரந்தே. (90)

பிறவியை நீக்கும் பிரானை	ஸம்ஸாரத்தை யொழிக்கும் உபகாரகராயும்
இ நீள் நிலத்தே	இப் பெரிய பூமியிலே
எனை ஆள	என்னை அடிமை கொள்வதற்கே
வந்த	அவதரித்தவராயுமுள்ள
இராமாநுசனை	எம்பெருமானாரை
நினையார்	சிந்தியாதவர்களாயும்
இரு கவிகள் புனையார்	(அவர் விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களாயும்
புனையும் பெரியவர் தாள்களில்	(ஏதோ பாக்கியத்தாலே) பாடல்களைப் பாடுகிற மஹான்களின் திருவடிகளில்

பூ தொடையல் வனையார்	புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களாயுமுள்ள
மாந்தர்	மனிதர்கள்
மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று
பிறப்பில் வருந்துவர்	ஸம்ஸாரத்திற் கிடந்து துன்பப்படுவர்கள்

* * * கீழ்ப்பாட்டில் அஞ்சுவனே என்ற விவருடைய அச்சம் தீரும்படி குளிரக் கடாக்ஷித்தார் எம்பெருமானார். அந்தக் கடாக்ஷ வைபவத்தாலே அச்சம் தீரப்பெற்றுத் தேறுதலடைந்து, மனோ வாக்காயங்களில் ஏதேனுமொன்றால் எம்பெருமானார் விஷயத்திலே ஒரு நன்மை செய்து வாழ்ந்து போகலாமாயிருக்க, பாவிகள் அதுசெய்யாதே பாழாய்ப்போகிறார்களே! என அநுதபிக்கிறார் இதில். (90)

~~*~*~*~*~*~*~*

91. மருள் சுரந்தாகம வாதியர்கூறும் * அவப்பொருளாம்
இருள் சுரந்தெய்த்த வுலகிருள்நீங்க * தன்னீண்டியசீர்
அருள் சுரந்தெல்லா வுயிர்கட்கும்நாத னரங்கனென்னும்
பொருள் சுரந்தான் * எம்மிராமாநுசன் மிக்க புண்ணியனே. (91)

ஆகமம் வாதியர்	(சிவன் சொன்ன) சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு வாதம் பண்ணுகிற பாசுபதர்கள்
மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகரிக்கப் பெற்று
கூறும்	(சிவனுடைய பரத்துவ விஷயமாகச்) சொல்லுகிற
அவம் பொருள் ஆம் இருள் சுரந்து	நீசமான அர்த்தங்களாகிற இருள் மேலிட்டு (அதனால்)
எய்த்த	கெட்டுப்போன
உலகு	உலகத்தவர்களுடைய
இருள்	அஜ்ஞாநாந்தகாரமானது
நீங்க	போகும்படியாக
தன்	தம்முடைய
ஈண்டிய சீர் அருள் சுரந்து	விலக்ஷணமான க்ருபையைப் பெருக்கி
எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும் பொருள்	"எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனே" என்கிற அர்த்தத்தை
சுரந்தான்	வெளியிட்டவரான
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
மிக்க புண்ணியன்	சிறந்த புண்ணியாத்மா

* * * இந்த ஸம்ஸாரிகள் இப்படி விமுகராயிருக்கச் செய்தேயும் இவர்களைத் தம் பேறாக உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக எம்பெருமானார் முயன்றதைச் சிந்தித்து அவரைக் கொண்டாடுகிறார்.

மிக்க புண்ணியனான எம்மிராமாநுசன் பொருள் சுரந்தான் என்றும், பொருள் சுரந்தவனான எம்மிராமாநுசன் மிக்க புண்ணியன் என்றும் இரண்டுபடியும் யோஜிக்கலாம். (91)

~~*~*~*~*~*~*~*

92. புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றி செய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன் * செம்மைநூற் புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி யிராமாநுச இன்று நீபுகுந்தென்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்றவிக்காரணம் கட்டுரையே. (92)

செம்மை நூல் புலவர்க்கு	நல்ல சாஸ்த்ரங்களைக் கற்றுக் கவி சொல்ல வல்லவர்களுக்கும்
எண்ண அரு கீர்த்தி	அளவிட முடியாத கீர்த்தியையுடைய
இராமாநுச	எம்பெருமானாரே!
புண்ணியம் நோன்பு புரிந்தும் இலேன்	புண்ணியமான ஒரு விரதத்தையும் அடியேன் அநுஷ்டிக்கவில்லை
அடி போற்றி செய்யும்	தேவரீருடைய திருவடிகளை வாழ்த்துகைக்கு உறுப்பான
நுண் அரு கேள்வி	ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தை
நுவன்றும் இலேன்	(செய்ய வேணுமென்று வாயாலே) சொல்லவுமில்லை (அப்படியிருந்தும்)
இன்று	இன்று
என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்	அடியேனது கண்ணினுள்ளேயும் நெஞ்சினுள்ளேயும்
புகுந்து நின்ற இக்காரணம் கட்டுரை	புகுந்து எழுந்தருளியிருப்பதற்குக் காரணமருளிச் செய்யவேணும்

~~*~*~*~*~*~*~*

93. கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர் சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே * என் பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்று மொள்வாளுருவி
வெட்டிக்களைந்த * இராமாநுச னென்னும் மெய்த்தவனே. (93)

கிட்டி	அடியேன் பக்கல் வந்து நெருங்கி
தன் அருள் என்னும் ஒள்வாள் உருவி	தம்முடைய கிருபையாகிற அழகிய வாளை உறையில் நின்றுங் கழற்றி (அதனால்)
என் பெருவினையை கிழங்கொடு வெட்டி களைந்த	எனது மஹாபாபங்களை வேரோடே அறுத்தொழிந்த
இராமாநுசன் என்னும்	எம்பெருமானாரென்கிற
மெய் தவன்	மாமுனிவர்
	எப்படிப்பட்டவரென்றால்
கயவர்	துஷ்டர்களான குத்ருஷ்டிகள்
கட்டம் பொருளை மறை பொருள் என்று சொல்லும் பெட்டை	தப்பான அர்த்தங்களை வேதங்களின் அர்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப் பேச்சுகளை
கெடுக்கும் பிரான் அல்லனே	கண்டித்தொழித்த மஹாநுபாவரன்றோ

* * * கட்டம் – கஷ்டம். கட்டப்பொருளென்றது கஷ்டப்பட்டு சொல்லும் பொருள் என்றபடி. மதாந்தரஸ்தர்கள் சொல்லும் பொருள்கள் அஸ்வரஸமாகையால் க்லிஷ்டங்களாயிருக்குமென்க. கயவர் – நீசர், துஷ்டர். பெட்டு – பிறரை வஞ்சிக்கச் சொல்லும் பொய்ப்பேச்சு. மெய்த்தவன் – தவமாவது சரணாகதி யோகம். (93)

~~*~*~*~*~*~*~*

94. தவந்தருஞ் செல்வம் தகவுந்தரும் * சரியாப்பிறவிப்
பவந்தரும் தீவினை பாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலி ராமாநுசந்தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானொன்று முள்மகிழ்ந்தே. (94)

தீது இல் இராமானுசன்	எவ்வகைக் குற்றமும் அற்றவரான எம்பெருமானார்
தன்னை சார்ந்தவர்கட்கு	தம்மைவந்து அடைந்தவர்களுக்கு
தவம் தரும்	சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர்
செல்வம் தகவும் தரும்	பக்தியாகிற செல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர்
சரியா பிறவி பவம் தரும்	நிவர்த்திக்க முடியாத ஜந்ம ஸம்ஸாரங்களை உண்டாக்குகின்ற
தீவினை	கொடுவினைகளை
பற்றி தரும்	போக்கடித்தருள்வர்
பரம் தாமம் என்னும் திவம் தரும்	பரமபதமென்று சொல்லப்படுகிற வானுலகத்தை அளிப்பர். (ஆன பின்பு)
யான்	அடியேன்
அவன் சீர் அன்றி	அவ்வெம்பெருமானாருடைய திருக்குணங்களைத் தவிர்த்து
என்றும்	வேறொன்றையும்
உள் மகிழ்ந்து உவந்து	மனக் காதலோடே விரும்பி அநுபவிக்க மாட்டேன்
அருந்தேன்	

* * * இப்பாட்டில், தரும் என்னும் பதம் ஐந்து இடங்களில் வருகின்றது. இரண்டாமடியின் முதலிலுள்ள தரும் என்பது மாத்திரம் தீவினைக்கு விசேஷணம். மற்ற நான்கும் எம்பெருமானார் பக்கல் அந்வயிக்கும் வினை முற்றுக்கள்.

“சலியாப் பிறவி, சரியாப் பிறவி” என்பன பாட பேதங்கள். பவம் – வட சொல். பரந்தாம – வட சொல். திவம் – வட சொல் விகாரம். (94)

~~*~*~*~*~*~*~*

95. உண்ணின் றுயிர்களுக் குற்றனவேசெய்து * அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பானெம் மிராமாநுசன்
மண்ணின் தலத்துதித்து * உய்மறைநாலும் வளர்த்தனனே. (95)

உயிர்களுக்கு உள் நின்று	எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு
உற்றனவே செய்து	ஹிதமானவற்றையே நடத்திக் கொண்டு
அவர்க்கு	அவ்வாத்மாக்களுக்கு

உயவே பண்ணும் பரனும்	உஜ்ஜீவநத்தையே பண்ணிக் கொண்டிருக்கிற எம்பெருமானும்
பரிவு இலன் ஆம் படி	(ஆத்மாக்களிடத்தில் எம்பெருமானாரைப் போல்) ப்ரீதியுடையவனல்லன் என்ன வேண்டும்படியாக
பல் உயிர்க்கும்	ஸகல ஆத்மாக்களுக்கும்
வீடு அளிப்பான்	மோக்ஷத்தை அருள்வதற்காக
எம் இராமாநுசன்	ஸ்வாமி எம்பெருமானார்
விண்ணின் தலை நின்று	ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும்
மண்ணின் தலத்து உதித்து	இப்பூதலத்தே அவதரித்து
உய்மறை நாலும்	எல்லார்க்கும் உஜ்ஜீவநஹேதுவான நான்கு வேதங்களையும்
வளர்த்தனன்	குறைவின்றி வளரச் செய்தருளினார்

* * * இப்பாட்டின் ஈற்றடியை "மண்ணின் தலத்துதித்து மறைநாளும் வளர்த்தனனே" என்றே அத்யாபகர்கள் ஓதுவர்கள். "நேற்பதினாறே" என்ற கட்டளைக் கலித்துறையின் இலக்கணப்படி பதினாறெழுத்து ஒத்திருந்தாலும் தளை தட்டுகிறபடியாலும், மணவாள மாமுனிகளுரையில் "ஸர்வோஜீவந சாஸ்த்ரமான" என்கிற ஒரு வாக்கியம் வ்யர்த்தமாக வேண்டிவருகையாலும், இவ்விரண்டு குறைகட்கும் இடமறும்படி "... உய்மறை நாலும்" என்கிற ப்ராசீந பாடம் கொள்ளத் தக்கது. உய் என்பதற்குப் பொருளாகவே மணவாள மாமுனிகள் "ஸர்வோஜ்ஜீவந சாஸ்த்ரமான" என்கிற வாக்கியமருளிச் செய்தாரென்க. (95)

~~*~*~*~*~*~*~*~*

96. வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத் தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் * இராமாநுசன் றன்னை யுற்றவரே. (96)

வளரும் பிணி கொண்ட வல்வினையால்	அளவற்ற துன்பங்களை யுண்டாக்கவல்ல கொடிய கருமங்களாலே
மிக்க நல் வினையில்	பரம தர்மமான சரணாகதியில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது	மஹாவிச்வாஸம் கிடைக்காததனால்
முடை தலை ஊன் தளரும் அளவும்	கெட்ட நாற்றங்களுக்கு இருப்பிடமான சரீரம் கட்டுக் குலையும் வரையில்
தரித்தும் விழுந்தும்	ஒருவாறு தரித்திருந்தும் (சப்தாதி விஷயங்களிலே) போய் விழுந்தும்
தனி திரிவேற்கு	துணையின்றி திரிகிற எனக்கு
இறைவர்	ஸ்வாமிகள் (யாரென்றால்)
எம் இராமாநுசன் தன்னை உற்றவர்	நம் எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள்
உளர்	இருக்கிறார்கள்

~~*~*~*~*~*~*~*~*

97. தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத்தாள்
தன்னையுற்றாட் செய்ய வென்னையுய்த்தானின்று * தன் தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணம்சாற்றிடுமே. (97)

இராமாநுசன்	எம்பெருமானாரானவர்
தன்னை உற்றார் அன்றி தன்னை உற்றாரை குணம் சாற்றிடும் தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து	தம்மைப் பற்றியிருப்பாருண்டேயொழிய தம்மைப் பற்றியிருப்பவர்களுடைய குண கீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்த பக்தர்கள் ஒருவருமில்லையென்று திருவுள்ளம் பற்றி
என்னை	அடியேனை
இன்று	இன்றைத் தினத்தில்
தன் தகவால்	தமது அருளாலே
	என்ன செய்தாரென்றால்
தன்னை உற்று ஆள் செய்யும்	தம்மையடைந்து கைங்கர்யம் பண்ணும் ஸ்வபாவமுடையரான
தன்மையினோர்	ஸ்வபக்தர்களுடைய
மன்னு தாமரை தாள் தன்னை உற்று ஆள் செய்ய	ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை நான் அடைந்து ஆட்செய்யும் படி
உய்த்தான்	வைத்தருளினார்

* * * எம்பெருமானார் என்னைத் தம்மிடத்து ஆட்படுத்திக்கொள்ளாமல் தம்மை அடுத்தவர்கள் பக்கல் என்னை ஆட்படுத்தினார். இதற்கு என்ன காரணமென்கிறீர்களோ? எல்லோரும் நம்மையே நேராகவந்து ஆச்ரயிக்கிறார்களே யொழிய நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிப்பார் ஆருமில்லையே. இவ்வமுதனார் நம்மை ஆச்ரயித்தவர்களை ஆச்ரயிக்கிற அதிகாரியாக இருக்கட்டும் என்று திருவுள்ளம் பற்றிச் செய்தார்.

இப்பாட்டின் அந்வயக்ரமம் சிறிது வருத்தப்படுத்தும். ஜாகரூகராயிருந்து அந்வயித்துக்கொள்க. தன்னையுற்றாரன்றித் தன்னையுற்றாரை குணம் சாற்றிடுந் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து, இராமாநுசன், தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னையுற்று ஆட்செய்யத் தன் தகவால் இன்று என்னையுய்த்தான் – அன்று அந்வயம்.

சாற்றிடும் – என்கிற விசேஷண பதம் பாட்டின் முடிவில் வந்து நின்றது அபூர்வப் பிரயோகமென்பர். என்னையுற்றான் என்று ஓதுவர்கள். (97)

~~*~*~*~*~*~*~*~*

98. இடுமேயினிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகிலிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை * சுழல் பிறப்பில்
நடுமேயினிநம் மிராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால் * மனமேநையல் மேவுதற்கே. (98)

நம் இராமாநுசன்	நம் எம்பெருமானார்
சரணம் என்றால்	உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லிவிட்டோமானால்

இனிய சுவர்க்கத்தில் இடுமே	(சிலர்க்கு) இனிதாகத் தோன்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக் கொண்டு சேர்த்திடுவவரோ?
இன்னம்	அல்லது
நரகில் இட்டு சுடுமே	நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வாரோ?
அவற்றை தொடர் தரு	அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற
தொல்லை சுழல் பிறப்பில்	அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே
நடுமே	நிறுத்துவாரோ?
இனி	மேலுள்ள காலங்களில்
நம்மை	நம்மை
நம் வசத்தே விடுமே	நாம் போகிற வழியே விட்டு வைப்பாரோ?
	(இவை செய்யமாட்டாரான பின்பு)
மனமே!	ஓ நெஞ்சே!
மேவுதற்கு	பேறு பெறும் விஷயமாக
நையல்	நீ கரைய வேண்டா

* * * நையல் – முன்னிலை யெதிர்மறை வினை முற்று. நையாதே என்றபடி. (98)

~~*~*~*~*~*~*~*

99. தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொக்கற்ற சோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்மிராமாநுச முனி போந்தபின்னே. (99)

தற்கம் சமணரும்	தர்க்கம் பண்ணுகிற சமணர்களும்
பேய்	பேய்போல பிடித்த பிடி விடாதே நிற்கிற
சாக்கியர்களும்	பௌத்தர்களும்
தாழ் சடையோன் சொல் கற்ற சோம்பரும்	ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும்
சூனிய வாதரும்	சூந்யவாதிகளும்
நால் மறையும் நிற்க	நான்கு வேதங்களும் விளங்கிக்கொண்டிருக்கச் செய்தே
குறும்பு செய் நீசரும்	(அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும்
மாண்டனர்	ஒழிந்தார்கள்
	(எப்போது என்றால்)
பொன் கற்பகம் எம் இராமாநுச முனி	சிறந்த கல்ப வ்ருக்ஷம் போலே உதாரரான ஸ்வாமி எம்பெருமானார்
நீள் நிலத்தே போந்த பின்	விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு

~~*~*~*~*~*~*~*

100. போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு * உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண்டமர்ந்திட வேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டுமிராமாநுச இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனிமற்றொன்றுகாட்டி மயக்கிடலே. (100)

இராமாநுச	எம்பெருமானாரே!
என் நெஞ்சு என்னும் பொன் வண்டு	எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது
உனது அடி போதில்	தேவரீருடைய திருவடித் தாமரைகளில்
ஒண் சீர் ஆம் தெளிதேன் உண்டு அமர்ந்திட வேண்டி	அழகிய குணங்களாகிற தேனைப்பருகி நித்ய வாஸம் பண்ண விரும்பி
நின்பால்	தேவரீரிடத்தில்
போந்தது	வந்து சேர்ந்தது
அதுவே	அத்திருக்குணங்களையே
ஈந்திட வேண்டும்	அளித்தருள வேணும்
இது அன்றி	இத் திருக்குணங்களைத் தவிர
ஒன்றும்	வேறொன்றையும்
மாந்த கில்லாது	(நெஞ்சு) புஜிக்கமாட்டாது
இனி	இப்படியான பின்பு
மற்று ஒன்று காட்டி	வேறொரு விஷயத்தைக் காட்டி
மயக்கிடல்	மயக்க வேண்டா

* * * ஸ்வாமிந்! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய திருக்குணங்களையே எப்போதும் அநுபவிக்கவிருப்பங்கொண்டு மேல் விழுந்து தேவரீரிடம் வந்து சேர்ந்தது. இது இனி வேறொன்றை விரும்பாது. தேவரீரும் இனி இதை ஸம்ஸாரத்தில் போகவொட்டாமல் தேவரீரிடத்திலேயே நிலை நிறுத்திக் கொள்ள வேணும் என்றாராயிற்று.

தமது நெஞ்சை ஒரு வண்டாக ரூபணம் பண்ணினதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திவ்யகுணங்களை மதுவாக ரூபணம் பண்ணினார். இந்த வண்டுக்கு அந்தத்தேன் தவிர வேறொன்றும் ரஸிக்கமாட்டாது.

மயக்கிடல் – முன்னிலை யெதிர்மறை வினை முற்று. மயக்காதே என்றபடி. (100)

~~*~*~*~*~*~*~*~*

101. மயக்குமிருவினை வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டு நல்குமிராமாநுசவென்ற துன்னை யுன்னி
நயக்குமவர்க் கிதிழுக்கென்பர் * நல்லவரென்று நைந்தே. (101)

மயக்கும்	அஜ்ஞானத்தை விளைக்க வல்ல
இரு வினை	புண்ய பாபங்களென்னும் இரு கருமங்களாகிற
வல்லியில்	விலங்கில்

பூண்டு	அகப்பட்டுக் கொண்டு
மதி மயங்கி	அறிவு கெட்டு
துயக்கும்	ப்ரமிக்கச் செய்கிற
பிறவியில்	ஸம்ஸாரத்தில்
தோன்றிய என்னை	பிறந்த அடியேனை
துயர் அகற்றி உய கொண்டு	துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து
நல்கும்	அருள் செய்கின்ற
இராமாநுச	எம்பெருமானாரே!
என்றது இது	என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிற இது
உன்னை உன்னி நைந்து	தேவரீரை அநுஸந்தித்து உருகி
என்றும் நயக்குமவர்க்கு	எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு
இழுக்கு என்பர் நல்லவர்	தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவார்கள்

* * * எம்பெருமானார்க்கு, பாவநத்வம் என்றும் போக்யத்வம் என்றும் இரண்டு படிகள் உண்டு, பாவநத்வமாவது – பக்தர்களுடைய பாவங்களைப் போக்கிப் பரிசுத்தப் படுத்துதல். போக்யத்வமாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியராயிருக்கை. இவ்விரண்டில் பாவந்த்வத்தைவிட போக்யத்வமே சிறந்தது. ஏனென்றால், நம்முடைய பாவங்களைப் போக்கினாரென்கிற காரணத்தாலே நாம் அவரைப் பாவநர் என்று அநுஸந்திக்க வேண்டும். இது ஒரு உபாதியைப் பற்றி வருவது. போக்யத்வத்தை அநுஸந்திப்பதோ இப்படிப்பட்டதல்ல. அது ஸ்வரூபப்ரயுக்தம். ஆகையாலே, பாவந்த்வத்தை அநுஸந்திப்பதைவிட போக்யதையை அநுஸந்திப்பதே சிறந்தது. அப்படியிருக்க, இவ்வமுதனார் இப்பிரபந்தத்திலே அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை அநுஸந்தித்தார். “என்னுடைய பாவங்களையெல்லாம் போக்கினார். என்னுடைய குற்றங்களையெல்லம் நீக்கினார்” என்று அடிக்கடி சொல்லயிருக்கிறார். அப்படி சொன்னதற்கு அநுதாபப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டு பேச வேண்டியிருக்க, பாவந்த்வத்தில் ஈடுபட்டமை தோற்றப் பேசினது பிசகு என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றாராயிற்று. (101)

~~*~*~*~*~*~*~*

102. நையும்மனமுன்குணங்களையுண்ணி * என்னாவிருந்தெம்
ஐயனிராமாநுச னென்றழைக்கும் * அருவினையேன்
கையும் தொழும் கண்கருதிடுங்காணக் கடல் புழைசூழ்
வையமிதனில் * உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே. (102)

எம்பெருமானாரே!

மனம்	எனது நெஞ்சானது
உன் குணங்களை உன்னி	தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து
நையும்	கரைகின்றது
என் நா	எனது வாக்கானது
இருந்து	நிலை நின்று
எம் ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும்	எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே! என்று அழைக்கின்றது

அரு வினையேன் கையும்	மஹாபாபியான என்னுடைய கைகளும்
தொழும்	அஞ்ஜலிபண்ணுகின்றன
கண்	கண்களானவை
காண கருதிடும்	(தேவரீரை) ஸேவிக்க ஆசைப்படுகின்றன
கடல் புடைசூழ் வையம் இதனில்	சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தினுள்ளே
உன் வண்மை	தேவரீருடைய ஔதார்ய குணம்
என்பால் வளர்ந்தது என்	அடியேன் மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக் காரணம் யாதோ?

~~*~*~*~*~*~*~*

103. வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்று வாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன் * கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும் சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
காளைந்து நன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே. (103)

அன்று	முன்னொரு காலத்தில்
வளர்ந்த வெம்கோபம் மடங்கல் ஒன்று ஆய்	கடூரமான கோபம் மேலிடப் பெற்ற ஒரு நரசிங்க மூர்த்தியாகி
வாள் அவுணன்	வாளையுடைய ஹிரண்யாஸுரனது
கிளர்ந்த	செருக்கினால் நெறித்திருந்த
பொன் ஆகம்	பொன்போன்ற மார்வை
கிழித்தவன்	கிழித்துபொகட்டவனான எம்பெருமானுடைய
கீர்த்தி பயிர் எழுந்து	திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து
விளைந்திடும் சிந்தை	விளையப் பெற்ற திருவுள்ளத்தையுடையரான
இராமாநுசன்	எம்பெருமானார்
என் தன் மெய் வினை நோய் களைந்து	எனது உடலைப் பற்றியிருக்கிற வினை நோய்களையெல்லாமொழித்து
கையில் கனி என்ன	கையிலங்கு நெல்லிக்கனி போலே ஸுலபமாக
நல் ஞானம் அளித்தனன்	விலக்ஷணமான ஞானத்தைத் தந்தருளினார்

~~*~*~*~*~*~*~*

104. கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிதலும் * உன்தன்
மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * நிரயத்
தொய்யில் கிடக்கிலும் சோதிவிண்சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன் * இராமாநுச என்செழுங் கொண்டலே. (104)

செழு கொண்டல்	(ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம் போன்ற
என் இராமாநுச	எம்பெருமானாரே! (தேவரீர்)
கண்ணனை	எம்பெருமானை
கையில் கனி என்ன	உள்ளங்கை நெல்லிக்கனி போலே

காட்டி தரினும்	காட்டிக் கொடுத்தாலும்
உன்தன் மெய்யில் பிறங்கிய சீர்	தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற ஸௌந்தரியம் முதலிய குணங்களைத்
அன்றியான் வேண்டிலன்	தவிர வேறொன்றிலும் நான் கண்வைக்க மாட்டேன்
நிரயம் தொய்யில்	ஸம்ஸார நரகக் குழியில்
கிடக்கிலும்	அழுந்திக் கிடந்தேனாகிலும்
சோதி விண் சேரிலும்	சோதிமயமான பரமபதத்தை அடைந்தேனாகிலும்
இவ் அருள்	(தேவரீருடைய) திருமேனியழகை அநுபவித் திருக்கைக்கு உறுப்பான கிருபையை
நீ செய்யில்	தேவரீர் செய்தருளினால் தான்
தரிப்பன்	(ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவி நிற்பேன்

* * * நிரயத்தொய்யில் – நிரயமாவது நரகம். இந்த ஸம்ஸாரநிலமே நரகமெனப்படும். தொய்யில் – சேறு. ஏழனுருபு தொக்கியிருக்கிறது. தொய்யல் – என்பாருமுளர். (104)

~~*~*~*~*~*~*~*

105. செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில்மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன்ஞானி * நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடுமிடம் * அடியேனுக் கிருப்பிடமே. (105)

செழு திரை பால் கடல்	அழகிய அலைகளையுடைய திருப்பாற்கடலில்
கண் துயில்	பள்ளி கொண்டிராநின்ற
மாயன்	ஸர்வேச்வரனுடைய
திரு அடி கீழ்	திருவடிகளின் கீழே
விழுந்து இருப்பார்	விழுந்துகிடக்கும் மஹான்களுடைய
நெஞ்சில் மேவும்	ஹ்ருதயத்திலே பொருந்தி யெழுந்தருளியிருக்கிற
நல் ஞானி	சிறந்த ஞானியாயும்
நல் வேதியர்கள் தொழும் திரு பாதன்	நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளையுடையராயுமிருக்கிற
இராமாநுசனை	எம்பெருமானாரை
தொழும்	ஸேவிக்கின்ற
பெரியோர்	மஹாத்மாக்கள்
எழுந்து இரைத்து ஆடும் இடம்	உடம்பு இருந்த இடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக் கொண்டு கூத்தாடும் இடம்
அடியேனுக்கு இருப்பிடம்	அடியேன் வஸிக்குமிடமாகும்

* * * கீழ்ப்பாட்டில் “நிரயத் தொய்யில் கிடக்கிலும் சோதிவிண் சேரிலும்” என்று ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் வாசியற்றதாகச் சொன்ன அமுதனாரை நோக்கிச் சிலர், “உலகத்தில் எல்லாரும் ஸம்ஸாரத்தை வெறுத்துப் பரமபதத்தை ஆசைப்படாநிற்க நீர் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் துன்பமாகக் கருதிப் பேசுகின்றீரே,

உமக்கு உத்தேச்யமான ஸ்தானம் எது? சொல்லும்” என்ன, ஸ்ரீராமாநுஜபக்தர்கள் களித்துக் கூத்தாடுகின்ற இடமே எனக்கு பரமோத்தேச்யமான ஸ்தானம் என்றார். (105)

~~*~*~*~*~*~*~*

[சாற்றுப் பாசுரங்கள்]

106. இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் * அவைதன்னோடும்வந்
திருப்பிடம் மாயனிராமாநுசன்மனத் தின்றவன்வந்
திருப்பிடம் * என்றனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (106)

மாயனுக்கு	ஸர்வேச்வரனுக்கு
இருப்பு இடம்	வாஸஸ்தானம் (எவையென்றால்)
வைகுந்தம்	பரமபதமும்
வேங்கடம்	திருவேங்கடமலையும்
மாலிருஞ் சோலையென்னும்	திருமாலிருஞ் சோலையென்கிற திருமலையும் (ஆகிய இவையும்)
பொருப்பு இடம்	
என்பர் நல்லோர்	என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள்
மாயன்	(இவற்றை இருப்பிடமாக வுடைய) ஸர்வேச்வரன்
அவை தன்னோடும் வந்து	அந்த ஸ்ரீவைகுண்டம் முதலியவற்றோடே கூட வந்து எழுந்தருளியிருப்பது
இராமாநுசன் மனத்து	எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்
அவன்	அவ்வெம்பெருமானார் தாம்
இன்று வந்து	இப்போது வந்து
தனக்கு இன்பு உற இருப்பிடம்	தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது
என் தன் இதயத்து உள்ளே	அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளேயாம்

* * * கீழ்பாட்டிற் கூறியபடியே அமுதனாருடைய எல்லை கடந்த ப்ராவண்யத்தை அறிந்த எம்பெருமானார் “நம்மேல் இவ்வளவு காதல் கொண்டிருக்கிற இவருடைய நெஞ்சை நாம் விட்டு நீங்கலாகாது” என்று கொண்டு அமுதனாருடைய திருவுள்ளத்தை மிகவும் விரும்பியருள, அதனைக் கண்டு மகிழ்ந்து பேசுகிறார். (106)

~~*~*~*~*~*~*~*

107. இன்புற்றசீலத் திராமாநுசா * என்று மெவ்விடத்தும்
என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்று வீயினும்சொல்லுவதொன்றுண் டுந்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கியங்காட்படுத்தே. (107)

இன்பு உற்ற	ஆநந்த பூர்ணராயெழுந்தருளியிருக்கிற
சீலத்து இராமாநுசா	ஸௌசீல்யகுணமுடைய எம்பெருமானாரே!

சொல்லுவது ஒன்று உண்டு	தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு அஃது என்னவென்றால்
என்பு உற்ற நோய் உடல் தோறும்	எலும்பிலே உறந்து நலியக் கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களெல்லாம்
பிறந்து இறந்து	பிறப்பதும் இறப்பதுமாகி
எண்ண அரிய துன்பு உற்றுவீயினும்	எண்ணமுடியாத துன்பங்களை யநுபவித்து முடிந்து போனாலும்
என்றும்	எல்லாக்காலங்களிலும்
எவ் விடத்தும்	எல்லா விடங்களிலும்
உன் தொண்டர்கட்கே	தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே
அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி அங்கு	பக்தனாயிருக்கும்படி அடியேனை செய்தருளி
அங்கு	அந்த பக்தர்களிடத்தில்
ஆள் படுத்து	(அடியேனை) ஆட்படுத்தியருள வேணும் (இதுவே அடியேனுடைய வேண்டுகோள்)

~~*~*~*~*~*~*~*~*

108. அங்கயல்பாய்வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்துநெஞ்சேநந்தலைமிசையே
பொங்கியகீர்த்தி * இராமாநுசனடிப்பூமன்னவே. (108)

நெஞ்சே	ஓ மனமே!
பத்தி எல்லாம் தங்கியது என்ன தழைத்து	பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்ட தென்று சொல்லும்படியாக வீறு பெற்று
பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடி பூ	பரந்த புகழை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள்
நம் தலைமிசையே மன்ன	நமது தலைமேலே நித்ய வாஸம் பண்ணும்படியாக (நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால்)
அம் கயல் பாய் வயல் தென் அரங்கன்	அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் பெருமாளுடைய
அணி ஆகம் மன்னும்	அழகிய திருமார்பிலே நித்ய வாஸம் பண்ணுகிறவளாய்
பங்கயம் மாமலர் பாவையை போற்றுதும்	சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமைபோன்றவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியை வாழ்த்துவோம்

* * * இப்பிரபந்தத்தின் தொடக்கத்தில் “இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ” என்று எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளைப் பொருந்தி வாழ்வதே தமக்கு பரம புருஷார்த்தமாக அருளிச் செய்தவராகையாலே அந்தப் புருஷார்த்தம் நமக்கு யாவஜ்ஜீவம் ஸித்திக்கும்படியாக எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல பெரிய பிராட்டியாரைப் பிரார்த்திப்போமென்கிறார் முடிவான இப்பாட்டில்.

ஸாமாந்ய ஸம்பத்தை அளிக்கவல்ல பிராட்டியே இந்த விசேஷ ஸம்பத்தையும் அளிக்கக் கடவள் என்றதாயிற்று. (108)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

~~*~*~*~*~*~*~*

இராமாநுச நூற்றந்தாதி அடிவரவு

1. பூமன் கள்ளார் பேரிய லென்னை எனக்கியலும் மொழி வருத்து மிறை மன் சீர்
2. சீரிடம் செய்யும் கதி சோரா தாழ் முனி யெய்தற் குறு வாரப்பொழில் நிதி
3. நிதி கார்த்தி வைப்பா மொய்த்த காரேய் திக்குக் கொள்ள நெஞ்சில் கூட்டுமின்ப மாண்டு
4. ஆண்டு பொரு மடையார் நில நயவேன் அடல் படியாக்கிப் பொருளும் செம்மண்
5. மண் ஆயி சுரச் சொல்லார் பேறு கூறுமிறை நிகரான துதிப் படி
6. அடி பார்த் தற்புதன் நாட்டி கண் கோக்குலம் மற்றொரு பேதையர் கடலுணர் கொழுந்து
7. கொழு விரும் பிடியைப் பண்டரு வாழ் ஞானம் சரண மாரெனச் சிந்தை யென்னையும் சார்
8. சார் கைத்த வண்மை தேர் செய்த்தலை நின்ற ஈந்தனன் கருத்தில் பொய்யை நல் சோர்வி
9. சோர் தெரிவுற்ற சீர்கண் டோதி பற்றா பெரியவர் கலிமிக்க பொற்றரும் நினையார்
10. நினையார் மருள் புண்ணி கட்டத் தவ முண்ணின் வளரும் தன்னையுற்றிடும் தற் போந்த
11. போந்ததென் மயக்கும் நையும் வளர்ந்த கையுற் செழுந்திரை யிருப் பின்பங்கயல் பூ

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
நித்யாநுஸந்தானவுரையில் **இராமாநுச நூற்றந்தாதி** உரை முற்றுப் பெற்றது.

~~*~*~*~*~*~*~*